

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
14 ஜூலை 1977
EGMORE, MADRAS-8.

திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்குத்
தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வருகை தருதல். (21—5—77)



நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் திரு. சுப்பிரமணியம், I.A.S., வேலூர் உதவி ஆணையர் திரு. கோபாலசுவாமி, B.A., B.L., உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி திரு. எஸ். சோமசுந்தரம், B.A., B.L., ஆகியோர் உடனுள்ளனர்.

முகப்பு :

கோனேரி ராஜபுரம் நடராஜர் திருவுருவம்

திருக்கோயில்

மாலை : 19 பிங்கள ஆண்டு—ஆனித் திங்கள் ஜுன்—1977 மணி : 9

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

''திருக்கோயில்'' திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

''ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034''

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1-/ வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறுமல் தெரிவித்து உதவினுல்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

தமிழ்நாட்டில் அறநிலையப் பணிகள்
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,

இந்து மதத்தின் சிறப்பு
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

திருச்சிற்றம்பலக்கோவையார் —ஆசிரியர்

கந்தர் அனுபூதி
—திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

சைவ சித்தாந்தம்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்
—அருட்டிரு இராமலிங்க அடிகளார்

தெய்வப் புலவர் திருவள்ளுவர்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

திருக்காட்கரை அப்பன்
—டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ.,பி.எச்.டி.

திவ்வியப் பிரபந்தச் செழும்பொருட் சிறப்பு
—திரு பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்

குமரி மாவட்டக் கிராமத் தெய்வங்கள்
—திரு ஏ. ஏகாம்பரநாதன், எம்.ஏ.,

பேசாதிருந்தால் ஏசாரோ ?
—டாக்டர் வ. ஆ. தேவசேனுதிபதி, எம்.ஏ., பி.எச்டி.,

பேதையும் மேதையுமான சிதை
—திரு புரிசை சு. முருகேச முதலியார்

கவியரங்கத் தலைமைக் கவிதை —ஆசிரியர்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

தமிழ் நாட்டில் அறநிலையப் பணிகள்



திரு எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர், அறநிலையத்துறை, சென்னை-34.

158629

முன்னுரை :

அற நிலையங்கள் :

அன்பர்களே!

தொன்றுதொட்டே தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கையில், அறநிலையங்களாகிய திருக்கோயில்கள், ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்ந்து வருகின்றன. பழங் காலத்தில் திருக்கோயில்கள் கல்விக் கூடங்களாக விளங்கின ; இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளை வளர்க்கும் நிலைக்களன்களாகத் திகழ்ந்தன. மேலும் நூலகங்களாகவும், நீதிமன்றங்களாகவும் அவைகள் இருந்திருக்கின்றன ; ஆவணக் காப்பகங்களாகவும், அறச்சாலைகளாகவும் பயன்பட்டன ; பிணியாளர்களுக்கு மருத்துவ வசதிகள் வழங்கிப் பணிபுரிந்தன ; தம்மைச் சார்ந்துள்ள மக்களுக்குப் பல வகைத் தொழில் தரும் நிறுவனங்களாகவும் இயங்கி வந்தன. இக்காலத்தில் உள்ள வங்கிகளைப் போன்று, அவைகள் பணம் கொடுத்தும்—வாங்கியும், மக்களுக்கு உதவி புரிந்தன. இங்ஙனம் மக்களின் சமய, சமுதாய வாழ்க்கைகட்குச் சீரும் சிறப்பும் விளைவிக்கும் வகையில் பலவகையான அறச்செயல்களை, திருக்கோயில்கள் இடையறாது செய்து வந்திருக்கின்றன. இதனால்தான் நமது திருக்கோயில்கள், அறநிலையங்கள் எனப் பெயர் தாங்கி வழங்கப் பெறுகின்றன.

கோயில்கள் :

தமிழ் நாட்டில் ஏதேனும் ஒரு வகையில் சொந்தமாக வீடு நிலம் முதலிய சொத்துக்கள் உள்ள கோயில்கள், சுமார் 50 ஆயிரம் எனக் கணக்கிடப்பட்டுள்ளன. இவைகளில் 23,358 அறநிலையங்கள், இந்து சமய அறநிலையத் துறையின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் இயங்கி வருகின்றன. இவற்றில் சிவாலயங்கள், பெருமாள் கோயில்கள், தனி முருகன் திருக்கோயில்கள், அம்பாள் கோயில்கள், கிராம தேவதைக் கோயில்கள், மற்றும் ஜைன சமயக் கோயில்கள், சைவ—வைணவ—வேதாந்தத் திருமடங்கள் ஆகியவைகளெல்லாம், அடங்கியுள்ளன. இப்போது, இதன் மொத்த வருவாய்த் தொகை, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 14 கோடி வரையில் மதிப்பிடப் பெற்று உள்ளது.

பணிகள் :

பொது மக்கள் ஒத்துழைப்பாலும், அறநிலையத் துறையின் முயற்சியினாலும், சமீப காலங்களில் நூற்றுக் கணக்கான திருக்கோயில்கள், பழுது பார்த்துப் புதுப்பிக்கப்பட்டு சம்ப்ரோட்சண—கும்பாபிஷேக விழாக்கள், சிறப்புற நடத்தப் பெற்றுள்ளன. இன்று தமிழ் நாட்டின் திருக்கோயில்களில் மொத்தமாக சுமார் 2.5 கோடி ரூபாய் வரை பெறுமானமுள்ள மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டுத் திருப்பணி வேலைகள், செம்மையாக நடைபெற்று வருகின்றன. பல கோயில்களில் திருப்பணி வேலைகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. உதாரணமாக, இராமேசுவரம் கோயிலில் ரூ. 7 லட்சத்துக்கும், ஸ்ரீ ரங்கம் கோயிலில் ரூ. 10 லட்சத்துக்கும், திருச்செந்தூர்க் கோயிலில் ரூ. 18 லட்சத்துக்கும், உத்தரகோசமங்கைக் கோயிலில் ரூ. 30 லட்சத்துக்கும், சிதம்பரம் சபாநாயகர் கோயில், திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் ஆகியவற்றில் தனித் தனியே 45 லட்சங்களுக்கும், மதிப்பீடு செய்யப் பெற்றுத், திருப்பணி வேலைகள் மிகப் பெரிய அளவில், நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

பிற்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் வாழும் பகுதியிலுள்ள சிறு சிறு கோயில்களைப் பழுது பார்ப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கோயில்களில் திருப்பணி வேலைகள் துரிதமாகவும், செம்மையாகவும் நடைபெறுவதற்காக, அறநிலையத் துறையின் சார்பில், ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில், பொறியியற் பிரிவு ஒன்றும் தனியாக அமைந்து செயல் ஆற்றி வருகின்றது.

நகர்ப் புறத் திருக்கோயில்களுக்குச் சொந்தமான வீடுகள், கடைகள், காலியிடங்கள் சிலவற்றை மிகவும் குறைந்த, நியாயமற்ற வாடகையையும், செலுத்தியும் செலுத்தாமலும், பலர் ஆக்கிரமித்து அநுபவித்துக் கொண்டிருந்தனர். அதனால் கோயில்களுக்குப் போதிய வருமானம் கிடைக்காமல், பெருமளவில் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அந்நிலையை மாற்றி, நியாயமான வாடகையை நிர்ணயம் செய்வதற்கு, ஒரு தனி நிபுணர் குழு அண்மையில் நியமிக்கப்பட்டு, வேலை செய்து வருகிறது. இதன் சீரிய பணியால், நியாயமான வாடகைத் தொகையை நிர்ணயித்து வசூலிக்கவும், அதனால் நகர்ப் புறத் திருக்கோயில்களின் வருவாயை ஓரளவாவது பெருக்கவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கோயில்களின் வருவாயைப் பெருக்கவும், அநாவசியமான ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கவும் வழிவகைகள் செய்யப் பெற்றுள்ளன.

---

* சென்னை அனைத்திந்திய வானொலியில் 17-4-77 அன்று மாலை 6-15 மணிக்கு, நமது அறநிலைய ஆணையர் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.

அறநிலையத் துறை, மேலும் நல்ல முறையில் திறம்படப் பணியாற்றத் துணை புரிவதற்காக, சமய ஞானமும்—சான்றாண்மையும் — அறிவாற்றல் அநுபவங்களும் நிறைந்த பெரியோர்கள், பன்னிருவர் அடங்கிய ஓர் ஆலோசனைக் குழு, ஆணையரின் தலைமையில் நிறுவப் பெற்றுப் பணியாற்றி வருகின்றது. சமயப் பிரசாரகர்கள், ஓதுவார்கள் ஆகிய சமய ஊழியர்கள் பலர், திருக்கோயில்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் ஆதரவில், ஒரு கதாகாலட்சேபப் பள்ளி சமீபத்தில் நிறுவப்பட இருக்கின்றது.

கோயில்களில் உள்ள பழமையும், பெருமையும், விலைமதிப்பும் மிக்க நகைகளைச் சரிபார்ப்பதற்கு, அரசிதழ்ப் பதிவுபெற்ற நான்கு அலுவலர் பதவிகள் புதிதாகச் சமீபத்தில் அநுமதிக்கப் பெற்றுள்ளன. கோயில்களில் நிகழும் விக்கிரகத் திருட்டுகள் நடைபெறாதபடி தடுப்பதற்கு, பல சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளன.

சுவாமிமலை, மருதமலை, மதுரை ஆகிய கோயில்களில், தங்கத் தேர் செய்வதற்குப், பொது மக்களின் ஆதரவுடன், தகுந்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அவ்வவ் வட்டாரங்களில், ஆண்டுதோறும் சுத்தமாக உள்ள கோயில்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு வெள்ளிச் சுழல்கோப்பைப் பரிசு அளிக்கப்படுகின்றது.

பக்தர்களுக்கும் யாத்ரீகர்களுக்கும் கோயில்களில் பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பூஜைக்கு வேண்டிய திருநீறு, குங்குமம், சந்தனம், பன்னீர், பஞ்சாமிர்தம் முதலிய பொருள்கள், தரமுள்ளதாகவும் நியாய விலைக்குக் கிடைக்கும்படியும், ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. யாத்ரீகர்கள் தங்குவதற்காகத் திருச்செந்தூர், பழநி, திருக்குற்றாலம், திருத்தணி, சுவாமிமலை, வைத்தீசுவரன்கோயில், சாத்தூர், பரமக்குடி, திருவுத்தரகோசமங்கை, காளையார் கோயில், திருவாடானை, இராமேசுவரம், குமாரவயலூர் முதலிய தலங்களில், ஓய்வு விடுதிகள் கட்டப் பெற்றிருக்கின்றன. அண்மையில் பழனியில் நவீன வசதிகளுடன் கூடிய 76 அறைகள் அடங்கிய 'கார்த்திகேயன்' விடுதி நல்ல முறையில் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. அதைப் போன்றே 108 அறைகள் அடங்கிய ''ஜெயந்திநாதன் விடுதி' ஒன்றும் திருச்செந்தூரில் கட்டப்பட இருக்கிறது.

சித்த மருத்துவம் :

பொது மக்களுக்கும் யாத்ரீகர்களுக்கும் பயன்படும் பொருட்டும், தமிழ் நாட்டிற்கே சிறப்பான சித்த மருத்துவத்தை வளர்க்கும் பொருட்டும், வடபழநி, மணவாளநல்லூர், திருத்தணி, கள்ளங்குறிச்சி, சங்கரன்கோயில், குமாரவயலூர், திருப்புகலூர், பழநி, இராமேசுவரம், இருக்கன்குடி, வீரவநல்லூர், பண்பொழி, வைத்தீசுவரன்கோயில், பண்ணாரி, திருச்செந்தூர், மருதமலை, சிக்கல், ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல், மதுரை, திருநாராயணபுரம், கருவூர், செம்பியன் மாதேவி, கொடுமுடி ஆகிய 26 இடங்களில் சித்த மருத்துவ இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேலும் அறநிலையத் துறையின் சார்பில் எல்லா மாவட்டங்களிலுமாகச் சேர்ந்து 36 கருணை இல்லங்கள் உள்ளன. இவற்றில் 1,792 சிறுவர்களும், 748 சிறுமியர்களுமாக மொத்தம் 2,540 பேர், உணவு உடை உறைவிடம் ஆகிய வசதிகள் வழங்கிப் பாதுகாக்கப்படுகின்றனர்.

மற்றும் திக்கற்ற ஏழைச் சிறுவர்களின் பொருட்டுத் திருத்தணி, சிக்கல், நாச்சியார் கோயில், வைத்தீசுவரன்கோயில், பழநி, திருநெல்வேலி, திருச்செந்தூர், மதுரை, பண்பொழி, வாழைத் தோட்டத்து ஐயன்பாளையம் ஆகிய பத்து (10) இடங்களில், திக்கற்றோர் இல்லங்கள் நடந்து வருகின்றன. சென்னை சென்னமல்லீசுவரர் கோயிலின் சார்பில், மாணவர்களுக்கு இலவச உணவு விடுதி, பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. திருநாராயணபுரம், காரமடை, இளம்பிள்ளை, குமாரவயலூர் ஆகிய நான்கு இடங்களில், குழந்தை நலப் பாதுகாப்பு நிலையங்கள், நடைபெற்று வருகின்றன. கள்ளக்குறிச்சி கலியுக வரதராஜப் பெருமாள் கோயிலின் சார்பில், ஏழைச் சிறுவர்களின் உணவு விடுதியும், குழந்தை நலப் பாதுகாப்பு நிலையமும், சமயபுரம் மாரியம்மன் கோயில், பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில் ஆகியவற்றின் ஆதரவில், செவிடு ஊமைச் சிறுவர் பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன.

மேலும் நூற்றுக்கணக்கான கோயில்களில், பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குக் காலை மாலை வேளைகளில், சுவாமிக்கு அபிஷேகம் செய்த பால் வினியோகம் செய்யப்படுவதுடன், மதிய உணவும் வழங்கப்பட்டு வருகின்றது.

கல்வி நிலையங்கள் :

கல்வி வளர்ச்சிக்காகவும், அறநிலையத் துறை பெரும் தொண்டு ஆற்றி வருகின்றது. பழநி, திருக்குற்றாலம், பூம்புகார், கன்னியாகுமரி, இராமேசுவரம் ஆகிய இடங்களில் மொத்தம் 7 கல்லூரிகளும், பண்பொழி, திருநெல்வேலி, திருவெண்காடு, மதுரை, இராமேசுவரம், திருமலை, கள்ளங்குறிச்சி, மருதமலை, வாழைத் தோட்டத்து ஐயன்பாளையம் ஆகிய இடங்களில் 9 உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. இவற்றுள் பெண்களுக்காகவே 7 உயர்நிலைப் பள்ளிகளும், இரண்டு கலைக் கல்லூரிகளும், ஒரு செந்தமிழ்க் கல்லூரியும் அமைந்திருத்தல் குறிப்பிடத் தக்கது.

சிறு வயதிலேயே குழந்தைகளுக்குப் பக்தியுணர்வை ஊட்டும் நோக்கத்துடன், தேவார திவ்யப் பிரபந்தப் பாடல்கள், கோயில்களின் ஆதரவில் கற்பிக்கப்படுகின்றன. திருவெண்காடு, திருப்புகலூர், திருக்கடவூர், பழநி, கோயம்புத்தூர், திருவாரூர், திருக்களர், திரு

மயிலை ஆகிய கோயில்களில், தேவார பாடசாலை களும், கும்பகோணம் சாரங்கபாணி கோயில், விளநகர் வரதராஜப் பெருமாள் கோயில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோயில் ஆகியவற்றில், திவ்யப் பிரபந்தப் பாட சாலைகளும் நடைபெறுகின்றன. இவ்வாறே திருமயிலை, சிக்கல், காஞ்சிபுரம், தருமபுரம், அல்லூர் ஆகிய இடங்களில் வேதசிவாகமப் பாடசாலைகள் நடந்து வருகின்றன.

பொது மக்களுக்குப் பயன்படும் பொருட்டு பல கோயில்களில், எல்லா நவீன வசதிகளுட னும் கூடிய, திருமண மண்டபங்கள் கட்டி, மிகவும் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படு கின்றன.

''திருக்கோயில்'' இதழ் :

சமயக் கருத்துக்களைப் பொது மக்களி டையே பரப்பத் 'திருக்கோயில்' என்னும் திங்கள் இதழ் ஒன்றும், 1958ஆம் ஆண்டுமுதல், கடந்த 18 ஆண்டுகளாக நல்ல முறையில் வெளியிடப்பட்டு வருகின்றது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமாக இதற்குச் சுமார் 10,000 சந்தாதாரர்கள் உள்ளனர். தமிழகத்தில் மட்டு மேயன்றி, கல்கத்தா, பம்பாய், டெல்லிமுதலிய வட இந்திய நகரங்களிலும், இலங்கை, யாழ்ப் பாணம், சிங்கப்பூர், மலேசியா, தென்னுப் பிரிக்கா முதலிய தமிழர் வாழும் வெளிநாடு களும்கூட, இதற்குச் சந்தாதாரர்கள் இருக்கின் றனர். இதில் சமயம், தத்துவம், சரித்திரம், கலாசாரம், இலக்கியம், கல்வெட்டு முதலிய பல துறைகளில், சிறந்த பயன்மிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. தலை சிறந்த பேரறிஞர்கள் பலர், அரிய பயன்மிக்க கட்டுரைகளை வழங்கிவருகின்றனர்.

கிராமதேவதைக் கோயில்கள் :

நமது நாடு, ஏராளமான கிராமங்களைக் கொண்டது. கிராமங்களில் மாரியம்மன், துலுக்காணத்தம்மன், காளியம்மன், ஐயனர், பிடாரியம்மன் முதலிய தேவதைகளுக்குக் கோயில்கள் உள்ளன. கிராம மக்கள் இவற்றில் மிக்க பக்தியும், சிரத்தையும் கொண்டு வழிபடு கின்றனர். ஆதலின், கிராம தேவதைக் கோயில்களின் வளர்ச்சிக்கும், வழிபாட்டுக்கும், அறநிலையத் துறை பல வகைகளில் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றது. இதன் மூலம் கிராம மக்களின் சமய சமுதாய வாழ்வு, வளம் பெறத் துணை புரிகின்றது. சிதம்பரம், மதுரை, சுவாமிமலை ஆகிய கோயில்களில் வில்வக் கன்றுப் பண்ணைகள் அமைத்து, கோயில்களின் நந்தவன வளர்ச்சிக்காக, வில்வக் கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள கோயில்கள், வறட்சி நிலையினுலும், கடன் நிவாரணச் சட்டத்தினு லும், வருவாய் குறைந்து இடர்ப்படும் நிலை நேர்ந்துள்ளது. எனினும், அவற்றில் பூஜை முதலியன முறைப்படி நடைபெறுவதற்கு உபரி நிதியுள்ள கோயில்களில் இருந்து உதவித் தொகைகள் கிடைக்க, வழி வகைகள் செய்யப் பட்டுள்ளன.

1976-77ஆம் ஆண்டுகளில் திருக்கோயில் களின் திருப்பணி வேலைகட்கும் மற்றும் திருக் கோயில்களில் உள்ள விலையுயர்ந்த செப்புத் திரு மேனிகளின் பாதுகாப்பு அமைப்பிற்கும், அர சின் மான்யத் தொகை ரூபா 15 லட்சம் வரை வழங்கப்பட்டுள்ளது. இன்று தமிழ் நாட்டில் உள்ள பல திருக்கோயில்களில் திருப்பணி வேலை கள் நடைபெறுவதற்காக 325 மதிப்பீடுகள் சுமார் 2.5 கோடி ரூபாய்க்குத் தயாரித்து அனு மதிக்கப்பட்டு, ஆஸ்திகப் பெருமக்களது ஒத்து ழைப்புடன் வேலைகள் நடைபெற்று வருகின் றன.

பயிற்சி முகாம் :

நமது திருக்கோயில்களில் பணி புரியும், சிவாசாரியர்கள், பட்டர்கள், பூசாரிகள், பண் டாரங்கள் முதலிய அர்ச்சகர்களுக்கும் மற்றும் ஓதுவா மூர்த்திகளுக்கும் மாவட்ட வாரியாகப் பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்து நடைபெற்று வருகின்றன. திருக்கோயில்களில் முறைப்படி நடைபெற வேண்டிய பூஜை முதலியவற்றை அர்ச்சகர்களிலேயே சைவ ஆகம விதிகளில் நல்ல தேர்ச்சி பெற்ற சிவாசாரியர்கள், வைகானச, பாஞ்சராத்ர விற்பன்னர்களான பட்டர்கள், ஓதுவாமூர்த்திகள் ஆகியவர்களைக் கொண்டு பயிற்சி கொடுக்கப்பட்டது. அதிக மாகப் பயிற்சி பெற வேண்டியவர்களைப் தேர்ந்தெடுத்து, நீண்ட காலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டன. இதைப் போன்றே திருக்கோயில்களில் பணியாற்றும் செயல் அலுவலர்களையும் ஆங்காங்கே கூட்டிப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

முடிவுரை :

இந்து சமய அறநிலையத் துறை ஆற்றிவரும் பணிகளும், ஆற்ற வேண்டிய பணிகளும் பலப் பல. இந்த அரிய சிறந்த பணிகளையெல்லாம், மேலும் மிக நல்ல முறையில் ஆற்றுவதற்குப், பொது மக்களின் அன்பும், ஆதரவும், ஒத்து ழைப்பும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்துமதத்தின் சிறப்பு

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

முன்னுரை :

உலகில் நிலவிவரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்து திகழ்வது நமது இந்துமதம். பிற சில மதங்களைப் போல, நமது இந்துமதமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதன்று, யூதமதம் (கி.மு. 1500-1200), ஷிண்டோமதம் (கி.மு. 660), சொராஸ்ட்ர மதம் (கி.மு. 660), டாவோயிஸ்ம் (கி.மு. 604) சமணம் (கி.மு. 599), பௌத்தம் (கி.மு. 560), கன்பூசியம் (551) கிறித்தவம் (4 கி.பி.), இஸ்லாமியம் (570, கி.பி.), சீக்கியம் (1469 கி.பி.) என்னும், மற்றைச் சமயங்கள், இன்ன காலத்தில் இன்னாரால் தோற்றுவிக்கப்பட்டன என்றெல்லாம், வரலாற்று நூல்கள் கூறக்காண்கின்றோம்.

அவ்வாறு ஏதும் கூறற்கு இயலாத நிலையில், வரலாற்றுக் காலத்திற்கும் மிக முற்பட்டு, மிக்க பழமை வாய்ந்ததாக நமது இந்து மதம் விளங்கி வருகின்றது. எகிப்து, மெக்சிகோ, பாபிலோனியா, அசீரியா, பினிசீயா, சிறிய ஆசியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளில் முன்னொரு காலத்தில் விளங்கியிருந்த, எத்தனையோ பல மதங்கள் இருந்த இடமும் தெரியாமல் மருங்கற மாய்ந்தொழிந்தன. அவ்வாறு இன்றி, நம்முடைய இந்துமதம் தொன்று தொட்டு இன்றுகாறும் நின்று நிலவி வழங்கி வருகின்றது. பேரறிஞர் பாலகங்காதர திலகர், பேராசிரியர் எர்மன் ஜேகோபி ஆகிய பெருமக்கள், வான நூற் குறிப்புகள் பலகொண்டு கணித்து, வேதகாலம் கி.மு. 4500-க்கு முற்பட்டது என்று வரையறை செய்துள்ளனர். இதனால் இந்துமதத்தின் பழமை எத்தகையது என்று, யாவரும் இனிதுணரலாம். இத்தகைய சிறந்த தொன்மையுடைமை பற்றியே, இந்து மதத்தினைச் 'சநாதன தருமம்' (Perennial Religion) என்று நம் சான்றோர்கள் போற்றி வந்துள்ளனர்.

பொதுமைநலம் :

நமது இந்தியப் பெருநாட்டில், பலதிற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடுகளும், ஆங்காங்கே அமைந்து விளங்கக் காண்கின்றோம். ஆயினும், இப் பலதிற வேறுபாடுகளுக்கும் இடையே, ஒரு பெரும் பொதுத் தன்மையும் ஊடுருவி நின்று பொலிந்து திகழ்தல் காணப்படுகின்றது. இந்திய மக்களின் புறக்கோலங்களும் பிறவும் வேறுபட்டாலும் அவர்கள் அனைவருடைய உள்ளப்போக்கும் உணர்வும், பெரும்பாலும் ஒரே தன்மை உடையனவாக விளங்குகின்றன. இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும் பற்பல துறைகளில், மிகவும் வியக்கத்தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர்வும் உடையவராக இருக்கின்றனர். கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழிபாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம் புண்ணியம் ஊழ்வினை பிறப்பு இறப்பு மறுபிறப்பு சுவர்க்கம் நரகம் என்பன பற்றிய கொள்கைகளிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வருகின்றது. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந்திருக்கக் காண்கின்றோம். சார்வாகம் சமணம் பௌத்தம் சைவம் வைணவம் சாக்தம் சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்துவிதம் விசிட்டாத்துவிதம் துவிதம் சுத்தாத்துவிதம் முதலிய எத்துணையோ பற்பல தத்துவக் கொள்கைகளும், நமது இந்தியப் பெருநாட்டில் விளங்கி வழங்கி வருகின்றன. ஆயினும், அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக்கொண்டு விளங்கிவரும் சிறந்த பொதுமைப் பெருநெறியே, இந்து மதம் ஆகும் என நாம் சுருக்கமாகக் கூறலாம்.

மானியர் வில்லியம்ஸ் :

இவ்வுண்மையை நன்கினிது வலியுறுத்தி வற்புறுத்தும் முறையில், சர். மானியர் வில்லியம்ஸ் என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர், இந்துமதம் பற்றிக் கூறியிருக்கும் பின்வரும் கருத்துக்கள் இங்கு நாம் அறிந்து இன்புறுவதற்குரியன.

''இந்து மதம் எல்லாச் சமயங்களிலுமுள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக் கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துலகிற்கும் உரிய இனிய மதமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு அதன்கண் காணப்படவில்லை. ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்த விரிந்த பெருநோக்கினால், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக் கொள்ளும் பெருமாட்சிமை உடையதாக, இந்து மதம் இலங்குகின்றது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து மதம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும் மனித மனப்போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி, இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்துமதம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம், தத்துவஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடு

வோர், உணர்ச்சிமிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்கவல்லதாக, இந்து மதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம்கொண்டுள்ளது.(1)

அன்னை வசந்தை :

இவ்வாறே இங்கிலாந்தில் தோன்றியவரும், உலகப் புகழ்பெற்ற ஜார்ஜ் பெர்னார்ட் ஷா, சார்லஸ் பிராட்லா முதலியவர்களொடு நட்புரிமை கொண்டு பழகிய பெருநாவலரும், பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய திருமதி அன்னை வசந்தை அம்மையார் (Dr. Annie Besant) அவர்கள் கூறியிருப்பதும், இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

''கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெரு மதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து மதம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக் கூடியதும், ஆகிய சிறந்த மதம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகின்றேன். அதனை எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்கு விளங்கிக் கொள்ளுகின்றோமோ, அத்துணை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்.'' (2)

இந்து மதத்தின் பலதிறப் பெருஞ் சிறப்புக்களும், அதன் தத்துவக் கொள்கைகளும், சிறந்த நூற்பெருக்கமும் குறிப்பிடத்தக்கனவாகும். 'அறுவகைச் சமயங்கள்' என்னும் தொடர், தொன்றுதொட்டு வழங்கி வருவது, சமய தத்துவ நூலாசிரியர்கள், இவ்வறுவகைச் சமயங்கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல்களில் பல்வேறு வகைகளில் குறிப்பிட்டுள்ளனர். எனினும், அறுவகைச் சமயங்கள் அல்லது 'ஷட்தரிசனங்கள்' எனப்படும் நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்னும் ஆறுமே, ஏனையவற்றைவிட மிகவும் பழமை வாய்ந்தனவாகும். இவைகளை விளக்கி முறையே அக்கபாதர் கணாதர் கபிலர் பதஞ்சலி ஜைமினி வாதராயணர் என்னும் முனிவர்கள் நூல்கள் இயற்றியுள்ளனர்.

வில்லியம் ஜோன்ஸ் :

மிகப் பழைய காலத்திலேயே, நம் இந்திய நாடானது கிரேக்கர் உரோமர் முதலிய மேலை நாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இந்நாடுகள் இந்தியாவுடன் பல பொருள்களைக்' கொண்டும் கொடுத்தும்' - கலந்து உறவாடி மகிழ்ந்தன.

இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்து வியந்த சர். வில்லியம் ஜோன்ஸ் என்னும் பேரறிஞர், ''இந்தியத் தத்துவக் கொள்கைகளுள் நியாயம் 'பெரிபடெடிக்' கொள்கையையும், வைசேடிகம் ஐயோனிக் கொள்கையையும், மீமாம்சம் பிளேட்டோவின் கொள்கையையும், சாங்கியம் இட்டாலிக் கொள்கையையும், யோக தத்துவம் ஸ்டாயிக் கொள்கையையும் பெரிதும் ஒத்துள்ளது. இவ்வாற்றால் கௌதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணாதர் தேல்ஸ்ஸையும், ஜைமினி சாக்ரடீசையும், வியாசர் எனப்படும் வாதராயணர் பிளேட்டோவையும், கபிலர் பித்தாகரசையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்படுகின்றனர்'' என்று ஆராய்ந்து ஒப்பிட்டுக் கூறி மகிழ்கின்றார். 'மாக்ஸ்முல்லர், பெரிடேல்கீத், வின்டர்நிட்ஸ், கிரிஃபித், எட்வின் ஆர்னால்ட், வில்லியம்காரி, ஷோஃபனேர், ரோமன் ரோலன்ட் முதலிய நூற்றுக்கணக்கான மேலைநாட்டு அறிஞர்கள் பலர், இந்து மத நூல்களை ஆராய்ந்து வியந்து போற்றிப் பதிப்பித்திருக்கின்றார்கள்.

விக்டர் கசின் :

''இந்திய நாட்டின் கவிதை இலக்கியங்கள் தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றின் உயரிய தத்துவக் கொள்கை நலங்களை நம்முடைய ஐரோப்பிய அறிவு நலனுடன் ஒருங்குவைத்து ஆராயும் போது, நாம் மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்'' (3) என்று விக்டர்கசின் என்னும் பேரறிஞர் விளம்புகின்றார்.

---

(1) " A characteristic of Hinduism is its receptivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religious within its all-embracing arms and ever-widening fold.

And, in real truth, Hinduism has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has its highly spiritual and abstract side suited to the metaphysical philosopher, its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion."

—SIR MONIER WILLIAMS.

(2) " After a study of some forty years and more, of great religions of the world, I find none so perfect, none so scientific, none so philosophical, and none so spiritual as the great religion known by the name Hinduism. The more you know it, the more you will love it, the more you try to understand it, the more deeply you will value it."

—DR. ANNIE BESANT.

(3) " When we read with attention, the poetical and philosophical movements of the East, above all these of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truth so profound, and which make such a contrast with the measures, of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race the native land of the highest philosophy.

—VICTOR COUSIN.

இங்ஙனமே மாக்ஸ்முல்லர் என்னும் பேரறிஞரும், ''ஐரோப்பியர்கள் வெறும் கிரேக்க, உரோம, யூத தத்துவங்களை மட்டுமே, படித்தால் போதாது. நம்முடைய அகவாழ்க்கை நிறைவானதாகவும், பலநலம் பொருந்தியதாகவும், உலகளாவி விரிந்ததாகவும், உண்மையிலேயே உயரிய மனித இயல்புடையதாகவும் அமையவேண்டுமாயின், இந்தியத் தத்துவ நூல்களை நாம் படிக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். அது நம்முடைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப்படுத்த வல்லதாக உளது''(4) என்று கூறுகின்றார். இவற்றினாலெல்லாம் இந்து மதத்தின் சிறப்பு இனிது புலனாதல் காணலாம்.

உலகின் பல பகுதிகளில் :

இந்து மதமும், அதன் பல்வகைப் பண்பு நலங்களும் உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன. சுமத்திரா (சுவர்ணதீபம்), ஜாவா (யவத்தீபம்), பாலி, போர்னியோ, மலேயா, சயாம், கம்போடியா (காம்போஜம்), சம்பா, இந்தோனேஷியா, இந்தோசைனா, நடுஆசியா, திபெத்து, பர்மா, சிலோன், சைனா, கொரியா, ஜப்பான் முதலிய பல பகுதிகளிலும், இந்து மதத்தின் பண்பாடுகளும், சாயல்களும் பரவிக் காணப்படுகின்றன. கிழக்காசிய நாடுகளில் தேவவர்மன், குணவர்மன், உத்திரவர்மன், யசோவர்மன், சஞ்சயன, கௌணியன், அர்ச்சுனன், உக்கிரசேனன், சித்திரசேனன், பிரம்மதத்தன், இந்திராதித்தியன் முதலிய பல இந்து மதப் பெயர்கள் இன்றளவும் பெருக வழங்கப் பட்டு வருகின்றன.

ஜாவாவில் உள்ள போராபுதூர்ப் புத்தர் கோயிலும் (கி.பி. 750-850), கம்போடியாவில் உள்ள அங்கோர்தாம் என்னும் சிவபிரான் கோயிலும் (கி.பி. 802-860), அங்கோர்வாட் என்னும் திருமால்கோயிலும் (கி.பி. 1110-1150), நமது தமிழக இந்துக் கோயிற் கட்டடக் கலை சிற்பக் கலைகளினுடைய வளர்ச்சியையும், சிறப்பையும், பரவலையும் விளக்குவனவாக அமைந்து திகழ்கின்றன. கம்போடியாவில் அங்கோர்வாட் என வழங்கும் ஒரு பெருங்கோயில், திருமாலுக்கென அமைக்கப்பட்டுள்ளது. அதன் கண் இராமாயணம், மகாபாரதம், அரிவம்சம் என்னும் நூல்களிலிருந்து பல அழகிய சிறந்த சிற்பக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. இராமன் மாய மானைப் பின்தொடர்தல், வாலி சுக்ரீவப் போர், அசோகவனத்தில் சீதையின் சோகநிலை, கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபிரான் காமதகனம் செய்தல், தேவர்கள் திருப்பாற்கடல் கடைதல், முதலிய காட்சிகள் மிகப் பெரிய அளவில் செதுக்கப் பெற்று இன்றளவும் உயிரோவியங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

ஈலியோடொரஸ் :

மிகப் பழங்காலத்தில் வெளிநாட்டவர்களும் இந்தியநாட்டில் வந்து தங்கியிருந்து, இந்து மதத்தைத் தழுவிப் போற்றியுள்ளனர். கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் குவாலியர் மாநிலத்தில் பெஸ்நகர் என்னுமிடத்தில், பிராமி எழுத்துக்களில் நிறுவப்பட்டுள்ள கல்வெட்டுத்தூண் ஒன்றில், ''சுங்கவம்சத்து மன்னனாகிய பகபத்ரன் என்பவனின் அரசவைத் தூதுவனாக அந்தால்கிதாஸ் என்னும் கிரேக்க மன்னவனால் அனுப்பப்பெற்றவனும், டியோன் என்பவனின் புதல்வனும், தட்சசீலத்தில் வாழ்பவனும், 'பாகவதன்' எனப்படும் விஷ்ணு பக்தனும் ஆகிய ஈலியோடொரஸ் என்பவனால், பரவாசுதேவன் எனப்படும் விஷ்ணுவுக்குரிய புனிதம் மிக்க பறவையாகிய கருடனின் வடிவத்தை உச்சியில் செதுக்கப்பெற்றுள்ள, இத்தூணானது நிறுவப் பெற்றது'' என்று காணப்படுகின்றது. இதனால் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர் முதலிய பிற நாட்டவர்கள், இந்து மதத்தைத் தழுவியுள்ளனர் என்னும் சிறப்பு மிக்க செய்தி அறியப்படுதல் காணலாம்.

அண்மையில் உருசிய நாட்டில் நமது இந்து மதத்திற்குரிய இதிகாசங்களாகிய இராமாயணம், பாரதம் முதலிய நூல்கள் மொழி பெயர்த்துப் போற்றப்பட்டு வருகின்றன. பேரறிஞர் ஃபிலியோசா என்பவரால் பிரெஞ்சு மொழியில் பெரியபுராணம் மொழி பெயர்க்கப் பட்டு வருகின்றது. இன்னோரனைய பற்பல செய்திகளால் இந்துமதம், முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றிய தாய்ப் பிறங்கி வருதல் உணரலாம்.

சமன்லால் :

''திருமாலின் கூர்மாவதாரப் படிமையினைக் கொய்ராகுவாவிலும், ஆதிசேடனின் கோயிலை மெக்சிகோ நகரின் அருகிலும், வாமனன், விருத்திரன் ஆகியோர் படிமங்களை மெக்சிகோ நகரின் தேசியக் காட்சிச் சாலையிலும், இன்றும் யாவரும் காணலாம்.

பெருவிய நாட்டுக் கவிதை நூல்களின் ஒவ்வொரு பக்கத்திலும் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் இலச்சினைகள் காணப் படுகின்றன. மெக்சிகோ, குவாதமாலா, பெரு, பொலிவியா, ஒண்டுரஸ் முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளில், சிவபிரான் திருமால் விநாயகர் வாமனர் இந்திரன் சூரியன் அநுமன் முதலிய தெய்வங்கள் வழிபடப் பெற்றன'' (5) என்று சமன்லால் என்பவர் கூறுகின்றார்.

---

(4) "If I were to ask myself from what literature, we who have been nurtured almost exclusively on the thoughts of Greeks and Romans and of one scientific race the Jewish, may draw that corrective which is most wanted, in order to make our inner-life more perfect, more comprehensive, more universal, in fact more truly human, a life, not for this life only, but a transfigured and eternal lifea, gain I should point to India."

---MAX MULLER.

(5) "Every page of Peruvian poetry bears the imprints of Ramayana and Maha Bharatha..... Shiva, Ganesh, Indra, the Sun, Hanuman, Vishnu and his tortoirse-incarnation (Kurma Avatar) ,were some of the Hindu Gods worshipped in Central and South America.....After 17 years of research, I can now claim to have proved my theory of Hindu Colonisation of America. The stones in every corner of America speak of Hindu influences."

–CHAMANLAL.

இராமாயணம் :

எகிப்து தேசத்தில், நமது இராமரின் திருப்பெயர், பெரிதும் பரவியிருந்ததாகத் தெரிகின்றது. அந்நாட்டின் வரலாற்று நூல்களில் முதலாம் இராமேசஸ், இரண்டாம் இராமேசஸ் என்னும் பெயர்கள் பல காணப்படுகின்றன. எகிப்து நாட்டிலுள்ள சகாரா என்னும் பாலைநிலப் பெயருக்கும், இராமாயணத்தில் வரும் பகீரதனின் முன்னோர்கள் ஆகிய சகரர் என்பவர்களின் பெயருக்கும் இடையே, தொடர்பு இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

கிரேக்க நாட்டின் இணையற்ற பெருங்காப்பியம் ஆகிய இலியதம் (Iliod) என்னும் காப்பியத்தின் கதையில் வரும் மாந்தர்களுக்கும் (Characteus), இராமாயணம் என்னும் நம் நாட்டு இதிகாசத்தில் வரும் மாந்தர்களுக்கும் இடையே, பலதிற ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்விரு பெரு நூல்களுமே போர் நிகழ்ச்சியினை அடிப்படைப் பொருளாகக் கொண்டுள்ளன. இரண்டிலுமே ஒருவன் மனைவியை மற்றொருவன் கவர்ந்துகொண்டு சென்று விடும் செய்தி கூறப்படுகின்றது.

கிரேக்க நாட்டின் இலியதம் என்னும் காவியத்தில் வரும் மெனிலஸ் (Menelaus) இராமன்: ஹெலன் (Helen) சீதை; ஸ்பார்ட்டாநகர் (Sparta) அயோத்தி நகரம், அகமெம்னன் (Agamemnon) சுக்கிரீவன்; பெட்ராக்ளஸ் (Petroclus) இலக்குவன்; நெஸ்ட்டார் (Nestor) ஜாம்பவான்; யுலிஸிஸ் (Ulysses) ஆஞ்சநேயன்; ஹெக்டார் (Hector) இந்திரசித்து என்று கூறலாம்படி, ஓரளவு ஒப்புமைத் தன்மை இவ்விரு பெரு நூல்களிலும் அமைந்து கிடக்கின்றது. இன்னோரன்ன சான்றுகள் பலவும், இந்து மதத்தின் கருத்துக்கள் கதைகள் கொள்கைகள், உலகின் பல பகுதிகளிலும் சென்று பரவியிருந்த செய்தியினை, நுண்ணிதின் எண்ணியுணரப் பயன்படும் இனிய அரிய சான்றுகள் ஆகும் எனலாம்.

ஒப்புமைத்தன்மைகள் :

எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருவவதாரம் பற்றிய வரலாறு, மேலை நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் அமைந்து காணப்படுகின்றது. இரண்டிற்கும் இடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை மிக்குத் திகழ்கின்றது.

இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்சன் பொருட்டு ஒளிந்து வளர்ந்தான். இயேசுநாதர், ஏரோது (Herod) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைத்து வளர்க்கப் பெற்றார். கம்சனைப் போலவே, ஏரோது அரசனும் தனது உயிர்ப் பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கம்சனுக்குக் கண்ணபிரான் அவதாரம் பற்றிய அறிவிப்பு, முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே, ஏரோது அரசனுக்கும் அசரீரியினால் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப்பெற்றது. கண்ணபிரான் சிறையிலே பிறந்தார். இயேசு தொழுவத்திலே பிறந்தார். இயேசுவை 'நல்ல மேய்ப்பன்' (Good shepherd) என்று போற்றுவர். அவ்வாறே கண்ணபிரானும் ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனாகப் பசுக்களை மேய்ப்பவனும் காப்பவனுமாகக் 'கோபாலன்' என்று பெயர் பெற்று விளங்கினான்; இயேசு மலைச் சொற்பொழிவு (Sarmon on the month) நிகழ்த்தினார். கண்ணபிரான் குருக்ஷேத்திரத்தில் தேர்த் தட்டின்மீது இருந்து, பகவத்கீதை (Song Celestial) உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் பலவும் நாம் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன.(6).

விவேகானந்தர் :

இந்து மதத்தின் இணையற்ற சிறப்பு, விவேகானந்த சுவாமிகள் அவர்களால், அமெரிக்க நாட்டில் சிகாகோவில் கூடிய உலகச் சமய மாநாட்டில், அனைத்து அறிஞர்களின் உள்ளங்களையும் கவரும் முறையில், எடுத்து விளக்கப்பெற்றதனை நாம் அறிவோம். வீரபுருஷராகிய விவேகானந்த சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற இராமகிருஷ்ணர் பணிமன்றம், இன்று உலகத்தின் பல பகுதிகளிலும், நூற்றுக்கு மேற்பட்ட கிளை நிலையங்களைத் தோற்றுவித்து, இந்து மதத்தைப் பரப்பிச் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

முடிவுரை :

இந்து சமய வரலாற்றிலும், மறுமலர்ச்சியிலும், விவேகானந்தருக்கு மிகச் சிறந்த பங்கு உண்டு. தேசபக்தி, தெய்வபக்தி, ஆகிய இரண்டையும் சேர்த்து இணைத்து நமது இந்து மத வளர்ச்சிக்கு அவர் சீரிய சிறந்த பணி புரிந்துள்ளார். நாட்டுப் பற்றுப் போலவே, சமயப் பற்றும் நமக்கு மிக மிக இன்றியமையாததாகும். நாம் நமது இந்து சமயத்தை மிகவும் போற்றி வளர்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். 'இந்து மதம் வாழ்ந்தால்தான் இந்தியாவும் வாழும்' என்பது விவேகானந்தர் விடுத்த எச்சரிக்கை. ஆதலின் நாம் இந்து மதத்தை இக்கால நிலைக்கு ஏற்பப் போற்றி வளர்த்து, நலம்பலவும் அடைய முற்படுவோமாக!

—ஆசிரியர்.

---

(6) " The birth stories of Krishna and Jesus have a certain striking resemblances suggestive of mutual borrowing. The similarities in the teaching of the 'Bhagavad Gita and the Gospels have led some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the two religions of Buddhism and Christianity, their scriptures and ethical teachings is undoubtedly an instructive study. The study of the ancetry of ideas is a fertile branch of Comparative · Religion . . ."

—DR. S. RADHAKRISHNAN.

திருச்சிற்றம்பலக்கோவையார்

[கருத்துரைத் தோகுப்புச் சுருக்கம்]

(முற்றொடர்ச்சி)

(13) பகற்குறி :

[தோழி, தலைவனையும் தலைவியையும் பகற்பொழுதின்கண் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வந்து சந்திக்கும்படி செய்தல்]

தோழி: அம்பலத்து அரன்குன்றில் ஒரு கரிய பெரிய சோலையுள்ளது. அதன்கண் ஞாயிற்றின் கதிர்களும் சென்று நுழையாமையால், இருள்மிகச் செறிந்திருக்கும். அதன்நடுவே நாகமரங்களில் பூக்கள், வான்மீன்கள்போல விளங்கித் தோன்றும். அங்கிருக்கும் ஒளிமிக்க பளிங்குக்கல் ஒன்று, திங்கட்கடவுள் வானிடத்து வாழ்தலைக் கைவிட்டு, கானிடத்து வந்து வாழ்தலைப் பெற்றாற்போல, எழில்மிக்கு ஒளிரும். தலைவனே! நீ அவ்விடத்து வந்து சேர்க (116).

திருமகள்போலும் உருவினையும், கயல்மீன் போலும் ஒளியையும் உடைய, பொன்போலும் தலைவியே! நாம், அம்பலத்தான் மலையிலுள்ள தண் புனத்திற்போய் ஊசல்ஆடி, அயலிற் பொலியும் உயர்ந்த மலையருவியிற் சென்று நீராடுவோம். நீ எம்முடன் போதருவாயாக. (117).

கற்பகக் கொம்பர் போலும் தலைவியே! நாம் தினைப்புனம் காத்து, சிலம்பிற்கு எதிர் அழைத்து, சிற்றில் இழைத்து, சுனைப்புனலில் பாய்ந்து, மலர்களைக் கொய்து, மயில்களைக் கண்டு மகிழ்வோமாக!

[இச்செய்யுளில் சிவபெருமானைக் குறித்துத் ''தொழுதெழுவார் வினைவளம், நீறுஎழ நீறு அணி அம்பலவன்'' எனவரும் தொடர், மிகவும் சொற்பொருட்சுவை நலம் வாய்ந்தது. தொழுது எழுவார் என்றது, துயில் எழுங்காலத்து அல்லது முன்னுணர்வின்மையான், உணர்வு உள்ள காலத்து மறவாது நினைவர் என்றவாறு.

நீறு அணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்கும் எழில் உடைமையால், அக்கோலம் தொழுதெழுவார் உள்ளத்து நீங்காது நிற்றலான், ஆண்டு உள்ள வினை நீறும் (பொடிப்பொடியாய் அழிந்தொழியும்) என்னும் கருத்தால், 'வினைவளம் நீறுஎழ நீறுஅணி அம்பலவன்' என்றார்.

புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற் போலத் தொழுதெழுவார் வினைகழியத் தான் (சிவபிரான்) நீறு அணிந்தான் என்பாரும் உளர்'' எனவரும் பேராசிரியரின் உரைப் பகுதிகள், இங்கு அறிந்து இன்புறற்பாலன(118).

தில்லை அன்ன தலைவியே! நினது அழகிய தோள்களுக்குத் தோற்று, மூங்கில்கள் பிளத்தலான் சிதறும் முத்துக்கள், பரற் கற்களைப் போலப் பரவி, நின் பஞ்சுபோன்ற கால்களில் உறுத்தி வருத்தும். ஆதலால், நீ இங்கேயே நில். யான் அதோ அங்குச் சென்று, தேன் நிறைந்து, வண்டுகள் முரல்கின்ற, தாது நிறைந்த நறுமலர்களைக் கொணர்ந்து, நின் நீண்ட கூந்தலில் சூட்டுகின்றேன் (119).

தலைவன்: தலைவியே! திருமகள்போலும் நீ, இக்கயிலைப் பொழிலில் மிகவும் அன்புடன் வந்து என்பொருட்டுத் தங்கினாய். இம்மலைப் பகுதியை, ஆதிசேடனாகிய படமாசுனப் பள்ளியாகவும், என்னைப் பங்கயக்கண் நெடுமாலாகவும் நினைந்தோ, அல்லது திருமகள், நெடுமாலின் மார்பினன்றித் தாமரையினும் இருத்தலால், யான் நீங்கினும், என் நெஞ்சமாகிய தாமரையையே நினக்கு இடமாகக் கொண்டு இருக்க நினைந்தோ? நீ இங்ஙனம் இவ்விடத்தே அன்புடன் வந்து தங்கியருளினாய் (120).

இத்தலைவி, தில்லையில் உள்ள தொல்லோனது அருள்போல, எல்லையில் இன்பம் தருவதற்காக, என்பால் வந்து எதிர்ப்பட்டாள். கண்ணீர்த் துளியாகிய முத்தைச் சிந்துகின்ற, கண்ணாகிய குவளைகளைக் கைகளாகிய மெல்லிய காந்தட் பூவால்மூடி, தன் அழகை அளவிடுபவள் போல, இவள் ஒரு கொடியின் அருகே சென்று நின்று, நாணத்தால் மறைகின்றாள். இவளது நுண்ணிய இடை, சுமை தாங்கலாற்றாது வருந்தும்படி, அறிவற்ற பருத்த முலைகளே! இன்னும் நீங்கள் விம்மிப் பெருத்துக் கொண்டு செல்வது எற்றிற்கு? நும்மைத் தாங்கும் இடையைச் சுமையால் வருந்தி ஒடியும்படி செய்கின்ற நும்முடைய செயல், அறிவற்றவர்களின் செயலே ஆகும் (121).

தில்லை அன்ன தலைவியே! திருநுதலே! வண்டுகள் தங்கும் கூந்தலில் இட்ட தாதும், அணிந்த அணிகளும், குழலிடத்துச் சுற்றிய அழகிய மாலைகளும், நின் உயிரனைய தோழி நினக்கு அணிவிப்பதைப் போன்றே, நான் ஆராய்ந்து நின்னைக் கோலம் செய்துள்ளேன்.

யான் பிறிதோர் கோலம் செய்தேனோ என்று நீ கலங்குதல் வேண்டா. யான் நினக்குச் செய்துள்ள ஒப்பனையைக் குறித்து, எவரும் நின்பால் ஐயறவு கொள்ளார். (122).

தலைவன் (தன் நெஞ்சிற்குள்): செழுநீர்க் கங்கையையும், மதியாகிய கண்ணியையும் உடைய தில்லைத் திருச்சிற்றம்பலவனின் திருவடிகளையே பொருந்தும் இயல்பால், அன்பர்கள் உள் நெகிழ்ந்து முகம்மலர்வதுபோல, போதாகிய நிலைமையின் நீங்கி, மலராம் நிலைமையை அடைந்து, சிறிதே மலரத் தொடங்கி, உள்ளே தேனைக் கொண்டு திகழுகின்ற, அழகிய கழுநீர் மலர் போன்று விளங்குபவள், இந்தத் தலைவி! அக் கழுநீர்மலரை மருவி, ஒருகாலும் பிரியாமல் உடனுறைந்து, அதன் கொழுமைமிக்க இனிய நறவம் ஆகிய தேனைப் பருகி இன்புறுகின்ற பெருந்தகைமையினையுடைய வண்டு எனும்படி திகழ்பவன், யான்! எனக்கு வாய்த்த இன்பப்பேறு எத்துணைச் சிறந்தது!

[இறைவன் குருவாக எழுந்தருளி மணிவாசகரை ஆட்கொண்டருளியபோது அணிந்து போந்தது, கழுநீர்மலர்மாலை. இவ்வுண்மை, ''கழுநீர் மாலைக் கடவுள் போற்றி'' என மணிவாசகர் தாமே, அருளிச் செய்திருத்தலால் தெளியப்படும். இவ்வாற்றால், மலர்களுள் கழுநீர்மலரின்பால் மணிவாசகர்க்குப் பெரிதும் ஈடுபாடு உண்டு. எனவேதான், தலைவன் தலைவியைக் 'கழுநீர்மலர்' என வியந்து புகழ்ந்ததாகப் பாடியருளினர் போலும்!

கழுநீர்மலர் நெகிழ்ந்து மலர்ந்திருக்கும் தன்மையை விளக்க, சிற்றம்பலவனின் திருவடிகளை நினைந்து வழிபடும் அடியவர்களின் உள்ள நெகிழ்ச்சியையும், முகமலர்ச்சியையும் குறிப்பிட்டார். கிண்கிணிவாய்க் கொள்ளுதல்—போது என்னும் நிலையின் நீங்கி, மெல்லெனச் சிறிதே மலரும் தன்மையை அடைதல். ''கிண்கிணிவாய்க் கொள்ளும் கழுநீர்மலர்'' என்றதனால், தலைவி பேதைப் பருவம் கடந்து, பெதும்பை என்னும் இன்பப் பருவத்தினள் ஆயினள் என்பது விளங்கும். ''கள்ளகத்த கழுநீர்'' என்றது, வெளியிற் புலப்படாமல் உள்ளத்துள்ளே நிறைந்த காதலையுடையவள் என்பதுணர்த்தும். தலைவியை மலராகக் குறித்ததனால், அவள்தரும் இன்பத்தினைத் தேனாகவும், அதனை நுகரும் தலைவனை வண்டாகவும், அழகும் பொருத்தமுமுற உருவகித்தார். அளிகுலம்-சிறந்த வண்டு. மருவிப் பிரியாத வண்டு எனவும், பெருநீர்மையுடைய வண்டு எனவும், இயைத்துக் கொள்க.] (123).

சிற்றம்பலம் அனையாய்! விண்மீன்களாகிய மொட்டுகளையும், மேகங்களாகிய பசிய இலைகளையும் உடைய, வானமாகிய பொய்கையின் கண், மதியமாகிய வெண்தாமரைப்பூ மலர்ந்து தனது எழிலைப் புலப்படுத்தினாற்போல, இனி நீ இச்சோலையின்கண் விளையாடுகின்ற, நின்தோழியர் கூட்டத்தோடு சென்று சேர்வாயாக.

[வானத்தில் விளங்கும் விண்மீன்களிடையே சந்திரனைப் போலவும், பொய்கையில் பூத்துள்ள பல மலர்களுக்கிடையே வெண்தாமரை போலவும், நீ நின் தோழியர் கூட்டத்தின் நடுவே தலைமையும் சிறப்புமுற்றுத் திகழும் நிலையில், சென்று சேர்க என்பது, இப்பாடலின் திரண்ட கருத்து.] (124).

தோழி: அழகிய மான்மறிபோலும் தலைவியே! தில்லை அம்பலவனின் அருளைப் பெறாதவர்களைப் போல, நின் மெல்லிய விரல்கள் வருந்தும்படி, நீ இங்கு இவ் இளம் மொட்டுக்களைப் பறித்தல் வேண்டா. நின் கூந்தலுக்கு ஏற்ற நறுமலர்களை யான் கொய்து கொணர்ந்திருக்கின்றேன். (125)

தோகை மயில் போலும் தலைவியே! வண்டுகள் நிறைந்த மலரை நின் கூந்தற்கண் அழகுற அணிந்தேன். இனி, நின் சிற்றிடை வருந்தாவண்ணம், நீ நம் தோழியர் கூட்டத்தின்கண் மெல்லச் சென்று சேர்வாயாக.

['கூந்தலில் மலரைச் சூட்டினேன்' என்று கூறற்பாலதனை, 'அறுகால் நிறைமலர் ஐம்பால் அணிந்தேன்' எனக் குறிப்பிட்ட சிறப்பு, பெரிதும் வியந்து சுவைத்து மகிழத்தகும். அறுகால்-வண்டு. ஐம்பால்-கூந்தல்.] (126].

பெருமை மிக்க தலைவ! அருவிகள் ஒலிக்கும் இச்சிற்றூரே எம் ஊராகும். இதன்கண் யாம் அருந்தும் தேனையும் கிழங்கையும், நீயும் அருந்தி, இன்று எம்மோடு தங்கி, எம் இனத்தவர் அனைவரும் கூடி ஒருங்கு கலந்து முழங்கும் குரவைக்கூத்தினை இரவிற் கண்டு, நாளை நினது நல்ல நகர்க்குச் செல்லுவாயாக (127).

சிலம்பனே! முத்துக்களைத் தள்ளிக்கொண்டும், சந்தன மரங்களை தூக்கிக் கொண்டும், யானைத் தந்தங்களைக் கொழித்துக்கொண்டும், தேனின் பெருக்கானது, திசைதோறும் பரவும் மலைநாட்டுத் தலைவன் நீ! புலியூர்போலப் பொலிவுற்று விளங்கும் எம் தலைவியின் சிற்றிடைக்கு, மேன்மேலும் வனப்புமிகும் அவளது முலைகள் வருத்தம் தருகின்றன. ஆதலின், அவளை நீ விரைவில் வரைந்து திருமணம் செய்துகொண்டு, இன்புறுதல் வேண்டும். (128).

தலைவன்: தேவர் உலகின் தலைநகரமாகிய அமராவதிக் கண்ணும், இம்மாதர்க்கு ஒப்பில்லை என்று சொல்லும்வண்ணம், தாமரையைப் பீடமாக உடைய நான்முகன், மிக அழகுறப் படைத்த பெண்பிள்ளையாகிய நும் தலைவியை, கயிலைமலைச் சாரலில் வாழும் எளிய கொடிச்சி (குறவர்குல மகள்) என்றோ, நீ சொல்லுகின்றாய்? யான் மணந்து கொள்ளும் அத்துணை எளியளோ நும் தலைவி? அவளை மணக்கும் அளவுக்குத் தகுதியும், பெருமையும் எனக்கு இல்லையே! யான் என் செய்கேன் (129).

தோழி: மூங்கிலிற் பிறந்த வெண் முத்துக்கள் சிதறிய சோலைகளை உடைமையால், விண்மீன்களைப் பெற்று ஒளிரும் வானத்தைப் போலத் தோன்றுகின்ற, மலை நிலத்திற்குத் தலைவனே! எம் தாயும் தந்தையும் கானவர்கள். யாம் செய்வதோ, இம்மலையில் விளையும் தினைப்

பயிரைக் காவல் புரியும் தொழில். அத்துணை இழிநிலையில் இருத்தல் பற்றி, எம் தலைவியை மணந்து கொள்வதற்கு, நீர் விரும்புகின்றிலீர் போலும்! எம்மை மணந்துகொள்ள விருப்பமின்மையை மறைத்து, நீர் எம்மை வீணே வியந்து புனைந்து கூறல் வேண்டா! (130)

தலைவனே! தலைவியை மணந்து கொள்க, என்று வேண்டினால், நீர் மனம் தளர்ந்து மேனி ஒளி வாடுகின்றீர். திருவை அனைய எம் தலைவியோ, நீர் வரையாது ஒழியிற் பெரிதும் வருந்துவள். இவ்வாறு நும் இருவர் உள்ளமும் மாறுபட நிகழ்தலின், இறைவனின் திருவடிகளை வாழ்த்த மாட்டாதார் அறிவுபோலத் தனிமையுற்று, யான் நனிமிக வருந்துகின்றேன். (131)

கயிலைமலைத் தலைவனே! தொண்டைக்கனி போலும் சிவந்த இதழையுடைய, எம் தலைவியின் கதிர்முலைகளின் பருமையைக் கண்டு, எம் அன்னையார், இனி இவள் சிற்றிடைக்குப் பற்றுக் கண்டிலமே! யாது செய்வேம்! என்று அஞ்சுகின்றாள். இனி நிகழ்வது யாதென யானும் அறியேன். ஒருகால் எம் அன்னை, தலைமகளை மகட்பேசி வருவார்க்கு மறுக்காமல் இசைந்து நின்று கொடுக்கவும் கூடும். அங்ஙனம் நிகழ்ந்து விடாத முன்பு, நீ எம் தலைவியை வரைந்து கொள்ள முயல்க (132).

தலைவ! தேனீக்கள் பறந்து விளையாடுவதைக் கொண்டு, தேனினது விளைவை ஓர்ந்து அறிந்து, எம்முடைய மலைநிலத்து மக்கள், 'மால்பு' என்னும் கண் ஏணியைச் செய்யும் மூங்கில்கள் நிறைந்த, மலைநாட்டை உடையவன் நீ. நெருநல் எம் அன்னை எம் தலைவியைக் கூர்ந்து நோக்கி, இனி நீ திருமலைக்குச் சென்று புறம் போய் விளையாடுதல் வேண்டா, எனப் பணித்தனள். ஆதலின், இனி எம் அன்னை தலைவியை இற்செறிப்பாள் போலும்! அங்ஙனம் இற் செறிப்பின், எம் தலைவியை இனி நீ காண்டல் இயலாது.

[தேனீக்கள் தேனடையில் மொய்த்த வண்ணம் இராமல், எழுந்து நின்று பறக்குமாயின், அத்தேனடையில் தேன் முதிர்ந்து விட்டது எனத் தெரிந்து கொள்ளலாம். ஆதலின் ''ஈவிளையாட நறவு விளைவு ஓர்ந்தனர்'' என்றார். மால்பு-கண்ணேணி; முற்றிய மூங்கிலைக் கணுக்களில் அடிவைத்து ஏறுமாறு கணுக்களைச் சாணளவு விட்டுக் கழித்துவைத்து, அதனைச் சார்த்தி நிறுத்தி ஏறுதற்குரிய ஏணியாகக் கொள்ளப்படும் ஒரு கருவி.

''ஈக்கள் விளையாடுதலால் தேன்விளைவை ஓர்ந்துணர்ந்து, அத்தேனை எடுத்தற் பொருட்டுக் கானக் குறவர்கள் கண்ணேணி இயற்றுமாறு போல, எம் தலைவியின் மேனியிற் காணும் கதிர்ப்பு வேறுபாட்டால் இவள் உள்ளத்துக் கரந்து நின்றுறையும் காதலுணர்வை ஓர்ந்தறிந்து, எம் தாயார் இவளுக்கு மேற்செய்வன குறித்துக் கருதாநிற்கின்றாள்'' என்னும் உள்ளுறை நுண்பொருள், இச்செய்யுட்கண் அமைந்துள்ளது.] (133)

சிலம்பனே! சிற்றம்பலவனை முற்பிறவியில் தொழாமையால், நூல்களைக் கற்று வைத்தும், அவனது பழைய புகழை அறியாதவர்கள் வருந்துவதைப் போல, முலைகளின் சுமையைத் தாங்க இயலாமல், எம் தலைவியின் நுண்ணிடை வருந்துகின்றது. அதனைக் கண்டு, கடலிற் பிறந்த இனிய அமிழ்தம்போலும் தலைவியை, எம் உறவினர் இதுபோழ்து இற்செறித்துவிட்டனர். அதுவேயுமின்றி, இச்சிற் றூரினர் பேசிக் கொள்வனவும் சிலபல உள. ஆதலின், அயலவர் மகட்பேசி வருமுன், நீ எம் தலைவியை மணந்துகொள்ள முற்படுக. (134).

தலைவனே! நீ தலைவியை அடைந்து இன்புறுதற்கு, அவளை மணந்து கொள்ளுதலே தக்க வழியாகும். அங்ஙனம் நீ மணந்து கொள்ள முற்படின், 'இவள் நலத்திற்குத் தக்கவன் ஒரு கணவன் இனிதமைதல் வேண்டுமே! எனக் கவன்றுவரும் எம் அன்னை, என்னைவிட மகிழ்ச்சி கொள்வாள். எம்முடைய தந்தையும் முதற்கண் உலகியலை ஒட்டி, ஓராற்றான் மறுத்துரைத்து நிற்பான் ஆயினும், நின் தகுதி நோக்கி வந்து, நின் மொழியைக் கடவாது, அதன் வழியே இசைந்து, நிற்பான். இவளோடு நின்னிடை நிகழ்ந்தனவற்றைக் குறிப்பான் அறிந்துண்மையின், எம் சுற்றமும் நினக்கு உடன்பாடாகவே இருக்கும். பலப்பல கூறுவது என்? இக்குற்றாலம் முற்றும் அறிய, எம் தலைவியின் பணைத்தோள்கள் உமக்கே உரியன ஆகும். ஐயுறுதல் வேண்டா! (135).

தலைவனே! வேற்படை போலும் கரிய கண்களை உடைய, எம் தலைவியினது அழகிய முலைகளின் பாரத்தையும், அதனைத் தாங்குகின்ற நுண்ணிடையின் மெலிவையும் கண்டு, எம்மவர்கள், ''இவ் ஏறுதழுவிய வீரனுக்கே இப்பெண்ணை மணம் செய்து கொடுப்போம்'' எனக் கருதி வளர்த்து வந்த, காளையின் கொம்புகளைத் திருத்தி விட்டார்கள். ஆதலின், நீ அதனை எளிதாகச் சென்று தழுவித் தலைமகளை மணந்து கொள்ளலாம். மருப்புத் திருத்தி விட்டமையால், நின்னின் முற்பட்டான் ஒருவன் அவ்வேற்றைத் தழுவுதலும் கூடுமே என்று கருதி, நீ உள்ளம் கவன்று வாடற்க. அக்காளை, புலியூருடையான் கடவி வருவது போலும் உருவினது. ஆதலின், அதனைத் தழுவுதற்குப் பிறர் எவரும் துணியார். தலைவியொடு நின்னிடை நிகழ்ந்த இக்களவொழுக்கம் புலியூருடையார் அருளால் பகர்ந்ததாகலின், அக்காளை நினக்கே வயப்படுவதன்றிப் பிறரால் அணுகுதற்கு அரியது. அஞ்சுதல் வேண்டா. செயற்பாலவற்றை நீ கடிது விரைந்து செய்க. (136).

தோழி (தனக்குள்): பனைமரத்துண்டு போன்ற திரண்ட துதிக்கையை உடையதும், பெரிய மலை போன்றதும் ஆகிய யானையின் தோலை உரித்து, முப்புரங்களை எரித்த நெருப்பையுடையவனும்; எல்லாப் பொருள்களுக்கும் முதலாகியவனும் ஆகிய, திருச்சிற்றம்பலவனைத் தேவர்களெல்லாம் சென்று ஏத்தி நிற்கும் திருப்பனையூர் என்னும் சிவத்தலத்தைப்போன்ற எம் சிறந்த தலைவியை, 'அயலார் நாளைக்குப்

பொன்புனைந்து திருமணம் புரிந்துகொள்ள இருக்கின்றனர்' என்னும் செய்தியை, தீவினையேனுகிய யான் இத்தலைவனுக்கு எவ்வாறு கூறத்துணிவேன்? (137).

தூயமொழியை உடைய தலைவியே! வடக்கேயுள்ள பெரிய கயிலை மலையின்கண் உள்ள, பொன்போலும் மலரை உடைய வேங்கைமரம், தினைப்புனத்தைக் கொய்க என்று, பொன்னை வீசிக், கள்ளை வாயிலே சொரிய நின்று, சோதிடம் கூறி, எமக்குக் கேடு பயந்தது. இனி என் செய்வேம்?

[வேங்கை மலரும் காலமே, தினைக்கதிர் முதிர்கின்ற காலம் ஆகும். வேங்கை மலர்ந்ததுமே, கானவர் தினைக்கதிர் அரிவர். ஆதலின், வேங்கை மரம் தினைகொய்யச் சோதிடம் புகல்வதாகக் கவிதைகளிற் கூறப்பெறும். இது பற்றி, வேங்கை மரத்திற்குக் 'கணி' எனவும், 'கணியார்' (சோதிடர், கணித்துக்கூறுபவர்) எனவும் பெயர் வழங்கும். தினைப்புனம் கொய்தால், தோழியும் தலைவியும் தினைப்புனங்காவார். காவாமையின், தலைவனைக் காணவும் தலைப்படவும் வாய்ப்பு நேர்தல் இயலாது. இதனுல், ''சோதிடம் கொண்டு, இது எம்மைக் கெடுவித்தது'' என்று, தோழி தலைவன்பால் வேங்கை மரத்தினைப் பழித்து இழித்துரைத்தனள். ''பொன் வீசுதல், கள்வாய் சொரிதல்'' என்னும் தொடர்கள், வேங்கையினை இகழ்ந்துரைக்கும் குறிப்பில் அமைந்து நின்றன.]138.

பெரும! வண்டும், தேனும் அலர்குடைந்து தூற்ற, வேங்கைமரமாகிய பெருங்கணியார் (சோதிடர்), இப்பொழுது நமக்கு வருத்தம் விளையும்படி, நம் குலத்தவர்களுக்குத் தினைப்புனம் கொய்யும் பருவத்தைச் சொல்லுபவராய் இருந்தார். எம் உறவினர், அக்கணியாரின் உரையைக் கேட்டுத் தினைப்புனம் கொய்யக் கருதி இருக்கின்றுர். அதனுல், இனி இத்தண் புனத்தை யாம் காவல் புரியேம். ஆதலின் எம்மைத் தலைப்பெய்தற்கு, இனி நீர் இவண் பகலில் வருதல் வேண்டா. (139).

தோழி (தனக்குள்): பொதியின் மலைப் பொருப்பன்மேல் வைத்த காதல் விருப்பினுல் தினையை விதைத்து, இத்தினைக்காவல் தலைக்கீடாக, நாம் அவனை எதிர்ப்படலாம் என நினைந்து, தினைப்புனம் காவல் புரிதலில் ஆர்வம் மேலிட்டிருந்த எங்களுக்குத் தினையை வித்திக் காத்த காவல் கழிந்து, தீவினையாகிய விதையை விதைத்து, அதனைக்காத்து, அதன் விளைவையும் உண்டதுபோல முடிந்ததே! (140).

கயிலையின் மயிலை ஒத்த தலைவியே! இவ் வேங்கை மரம் அரும்பிய ஞான்றே, இதன் அரும்பைக் கெடும் வண்ணம் செய்திருந்தேமாயின், இவ்வேங்கை மரமானது நம்மைக் கெடுப்பதன் பொருட்டு, இத்தினைப்புனம் கெட்டு அழியும்படி செய்ய முயன்றிருக்காது. யாம் அதனைச் செய்யாது ஒழிந்தனமே! (141).

விதைக்கும் பருவத்தும், கொய்யும் பருவத்தும், தம் தொழிலை வழுவாது செய்யும் இயல்புடைய, எம் தமராகிய மலைவாணர்கள் விதைக்க, யாங்கள் வளர்த்துக் காவல்புரிந்த இக்கொழுமை நிறைந்த தினையின் குழாங்கள் எல்லாம், தில்லைச் சிற்றம்பலவரைச் சென்று நின்று தொழுவார் வினை நில்லாதவாறு போல, இனி நில்லாமல் விரைவில் அரிந்து கொய்யப் பெறும். அந்தோ, இனியாம் என் செய்வேம்? (142).

அம்பலவருக்கு அன்பர் ஆயினுருடைய குலங்கள், உலகத்துப் பிறவிக் காரணத்தைப் பற்றுவிட்டு அகன்றுற்போல, இக்காவலையுடைய தினைப்புனமும், இப்பொழுது தொடர்பு அறக் கொய்து அற்றது. அதனுல், தலைவன்பால் யாம் சொல்லுவது இன்னதென்று அறிகின்றிலேம் (143).

அம்பலவன் பரங்குன்றில் அருவிநீர் பாய்ந்து வளர்ந்த ஐவனத்தைக் கொய்த பிறகும், இக்காட்டின்கண் கதிர்கொய்த தட்டையின் தாளிலே இருந்து, இளங் கிளிகள் பிரிந்து செல்லாமல், ''நட்புச் செய்துவிட்டால் பேயோடு ஆயினும் பிரிவரிது'' என்னும் உண்மையை, நமக்கு உணர்த்திக் கொண்டு உள்ளன. இப்புனத்திடைப் பயின்ற கிளிகளும்கூட, தமக்கு உணவாகாக் காலத்தும் தினைத்தாளை விடாமலும், இப்புனத்தினின்று பிரியாமலும் இருக்குமாயின், நம்பால் பெரிதும் அன்புற்றுப் பிரிவறப் பழகிய தலைவர், நம்மைப் பிரிய இயலாமையால் இனி என்-செய்வரோ ? (144).

கரிய தினைப்புனமே! வேங்கை மரமாகிய கணியாரின் நினைவு, இன்று நிறைவேறிவிட்டது. அதன்பயனுக யாங்கள் இங்கு நின்றும் பிரிந்து, இல்லம் செல்லுகின்றேம். அழகிய சோலைகளே! நீர் எம்மை மறவாதீர்! கயிலை மயில்காள்! வேலை ஏந்திய தலைவர் ஈண்டு வந்தால், யாம் துணியாதன துணிந்தேம் (பிரிதற்கும், வரையும் துணையும் ஆற்றியிருத்தற்கும் துணிவுகொண்டு விட்டோம்) என்பதனை அவர்க்குச் சொல்லுமின்கள் (145).

தலைவன்: பொதுநெறியினின்று தீர்த்து, என்னை ஏனையோரினும் சிறப்பாக ஆண்டோன் ஆகிய, புலியூர் அரனின் பொருப்போ இது! யான் முன்பு பயின்றுள்ள அப் பொருப்பு இதுவேயாயின், இவ்வாறு பொலிவற்றிருப்பதற்குக் காரணம் என்னை? இரும் பொழிலே! நுமக்கு எய்தியது யாது? நீர் உற்ற அவலநிலை என்னை? முன்பு இன்பம் செய்த இவ்விடம், இதுபோது துன்பம் செய்வதாக மாறியுள்ள தன்மை, இனிய மதுவினில் அதன் சுவையை மாற்றி, கைப்பாகிய சுவையை வைத்தவாறன்றே உளது? இஃது என்னே!

[இச்செய்யுளிற் ''பொதுவினில் தீர்த்து என்னை ஆண்டோன்'' என்னும் தொடர், மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்: (1) அதுவோ இதுவோ, அருள்பெறும் நெறியாதென்று ஐயுற்று மயங்கிப் பொதுவாக நின்ற நிலைமையை நீக்கி, என்னை ஆண்டு கொண்டவன் (2) ஏனைய எல்லோரையும் ஆட்கொள்ளும் பொதுவாகிய முறைமையினின்று நீக்கி, என்னை

உள்ளம் நெகிழ்வித்தலாகிய ஓர் உபாயத்தால் ஆண்டவன்(3) உலகத்துயிர்கள் பலவும் போகும் பொதுநெறியினின்றும் அகற்றித் தனக்கு அடிமை செய்யும் சிறப்பு நெறியில் அழைத்து ஆண்டவன் (4) விரதங்களான் வருந்தாமல் தவத்தொழிலை நீக்கி, இன்புறு நெறியருளி என்னை ஆண்டவன் எனப் பலப்பல அரிய நுண் பொருள்கள், இதன்தண் அமைந்து திகழும்.] 146.

நல்ல நெஞ்சமே! ஆனந்தமாக் கடலாகிய சிவபிரான், நடனம் ஆடுகின்ற சிற்றம்பலம் போன்றதாய்த், தேன் தத்திப் பாயும் பெரிய மலைக்கண் உளதாகிய, தலைவியின் சிற்றூர் இது! இவ்வாறு இச்சிற்றூர் மிகவும் அருகில் இருப் பினும், நம்மால் செய்யலாவது ஒன்றில்லை. அதனால், வானத்தின்கண் செல்லும் பெரிய மதியைப் பெறுதற்கு விரும்பி, அதன் அருமை அறியாது அழுகின்ற குழவியைப்போல, எய்து தற்கரிய அருமை பெருமை வாய்ந்த தலைவியை மிகவும் விரும்பி, நீ தளர்ச்சி உறுகின்றாய். நின்னால் யானும் தளர்ச்சி கொள்கின்றேன். (147).

(14) இரவுக்குறி :

[தோழி இரவின்கண் தலைவியைத் தலைவன் தலைப் பெய்தற்கு (சந்தித்து மகிழ்தற்கு) இயன்றதோர் இடத்தைக் குறித்தல்.]

தலைவன்: வெள்வளை அணிந்த தோழியே! குன்றின்கண் நின்று அருவிகள் பாய்ந்து, அழகு விளங்கும் வண்ணம் மேகங்கள் சூழ்ந்து கொண் டன. அதனால், இருள் செறிந்த செய்காட்டை உடைய, நுமது சிற்றூர்க்கு யான் ஒரு விருந்தின னாக வந்துள்ளேன். என்னை ஏற்றுக் கொள்க.

['மேகம் பொருந்தின' என்றதனால், தன் னூர்க்குப் போதல் கூறுவான் போன்று, இரவுக் குறி மாட்சிமைப் படும் என்றான். 'இருள் தூங்கும் புனை இறும்பு' என்றதனால், யாவரும் காண இயலாது ஆதலின், ஆண்டு மறைந்து வந்து நிற்பேன் என்றான். மாலை விருந்தினரை மாற்றுதல் அறன் அன்று என்பது தோன்ற 'விருந்தினன்' என்றான். விருந்தினனாக வந்த என்னை விலக்கினால், அது களங்கமாகும் என் பான், குறிப்பால் 'வெள்வளையே' என்றான்.] (148).

தோழி: ஐயனே! விசும்பிற்கு ஏணி அமைத் தது போன்று செங்குத்தான சிறுநெறிமேல், மேகங்கள் இடையறாது படிதலான், இடை யிடையே உண்டாகிய அசும்பின்கண் சென்று பொருந்தி, ஏறுமிடத்து உள்ள சிறு வழிகளில் செல்லுவது, சிறுவளைகளில் நுழைவது போல இடர்ப்பாடு விளைவிப்பதாகும். அன்றியும், யாம் வாழுகின்ற பதியானது வழுக்கல் மிக்க வழி களை உடையதாய், உண்மையாகவே மனத்தினா லும் ஏறுதற்கு இயலாதது. ஆண்டு நீ வருதல் பொருத்தம் அன்று.

[விசும்பு-ஆகாயம். அசும்பு-சிறுதிவலை; நீர்க்கசிவு. இசும்பு-ஏற்றிழிவு, மேடுபள்ளம்.] (149).

தலைவன்: நெஞ்சமே! தில்லைக் கூத்தனின் கொடுங்குன்றின் நெடுங்குடுமியின்மேல் உள்ள, தேனை விரும்புகின்ற முடவனைப் போல, பெறு தற்கரிய தலைவியைப் பெறுதற் பொருட்டு, நீ கொண்ட அன்பினாற் போதரும் துயரத்தை யான் ஆற்றுகின்றிலேன்.

[இச்செய்யுளில் ''கொடுங்குன்றின் நீள் குடுமிமேல் தேன் விரும்பும் முடவனைப்போல மெலியும் நெஞ்சே'' எனவரும் பகுதிக்கு ஒப்பு மைப் பகுதியாக,

''குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழ்இருந்து
சுட்டுபு நக்கி யாங்குக், காதலர்
நல்கார் நயவார் ஆயினும்
பல்காற் காண்டலும் உள்ளத்துக் கினிதே''

என்று வரும் குறுந்தொகைச் செய்யுள், இங்கு நினைந்து இன்புறற்பாலது.] (150).

தோழி! தலைவனே! நீ எம் தலைவியின் மேற் கொண்ட பெருங்காதலால், தாம் வேட்டையாடுதற்கு ஆளிகள் யானைகளைத் தேடும் இரவின்கண் வந்து, எத்தகைய இடை யூறும் நேராமல் யான் எளிதாகச் செல்வேன் என்று சொல்லா நின்றாய். இனி தீவினையேன் ஆகிய யான், மெல்லியல்பை உடைய தலைவிக்குச் சொல்லுவது என்? நின் விருப்பத்திற்கு உடன் படுக என்பேனோ, அல்லது உடன்படற்க என் பேனோ? யாது கூறுகேன்? (151).

சிலம்பனே! நின் ஊர்மக்கள் பூசும் மணப் பொருள்கள் யாவை? அவர்கள் விளையாடும் மெல்லிய நிழல் எத்தன்மையது? அவர்கள் சூடும் நறுமலர்கள் எவையெவை? (152)

தலைவன்: அழகிய மலர்போலும் ஒளிமிக்க கண்களையுடைய தோழியே! அம்பலத்தோனின் தென்மலையத்தின்கண், இராப்பொழுதில், நும் மவர் எம்மலரைச்சூடி நின்று, எச்சாந்தை அணிந்து கொண்டு, என்ன நன்னிழலில் விளை யாடுவர்? அவற்றை எனக்குக் கூறுக. (153)

தோழி: தலைவனே! பொதிய மலையின்கண் விளையும் சந்தனச் சாந்தை அணிந்து, சுனையில் வளரும் காவிமலர்களைச் சூடி, மயில்கள் துயில் செய்யும் வேங்கைப் பொழிலின்கண், நாங்கள் விளையாடுவோம். (154).

தோழி: தலைவியே! தில்லையைச் சூழ்ந்த கானற்சோலையில், பெண் நண்டுடன் ஆண்நண்டு காதலின்புற்றுப் பயின்று விளையாடுவதனைக் கண்டு, அயில்வேலை உடைய உரவோன் ஆகிய நம் தலைவன், இவ்வின்பம் நமக்கு வாய்த்திலதே என்று மனவருத்தம்மிக்கு, அந்திப் பொழுதின் கண் கலங்கிச் செல்லக் கண்டேன். அம்மன்ன னது துயில் பின்னர் என்ன ஆயிற்றோ? அறி யேன். (155).

மெல்லியல்புகள் வாய்ந்த தலைவியே! தில்லை முன்னோன் கழற்கே கோட்டம் தரும்

(வணக்கம் செய்யும்) அழகிய முடிசூடிய வெற்பன் ஆகிய நம் தலைவன், மேகங்கள் திரளுதலாற் கண்ணைப் புதைத்தாற் போன்று மிகச் செறிந்த இருளின்கண், யானைகள் நடுங்கும்படி, சிங்கங்கள் வேட்டைமேல் திரியும் மலைச் சாரலில், இரவில் நின்பால் வருதலை விரும்பி, வற்புறுத்திச் சொல்லிக் கொண்டு இருக்கின்றான். இனி நாம் என்ன செய்யலாம்? (156).

தலைவி: தோழி! கூத்தப்பிரான் கழலை ஏத்தலர் போல வருந்தும்படி, சிங்கங்கள் யானை வேட்டையை மேற்கொள்ளும் கொடிய இருளில், இரவுக்காலத்தில், எவரும் வழங்காத கொடிய தனி வழியிடத்து வருக என்று, நம்முடைய வள்ளலாகிய தலைவனுக்கு நாம் சொல்லுதல் அமையுமோ? (157).

தோழி! அம்பலத்தான் மலைச்சாரலில், அருவியாற் பெருகுகின்ற சுனைப்புனலின்கண், அன்றொருகால் யான் விழுந்து இறக்க இருந்த நிலையில், என்னைப் பற்றியெடுத்துக் கரைக்கண் உய்த்துக் காத்த பெரியோன், ஆகிய நம் தலைவனுக்குச் சிறியேனாகிய யான் சொல்லக் கடவ நன்றியுரை, யாதென்று அறிகிலேன்!

[''பிறவியாகிய கடலில் யான் விழுந்து கெடப்புக, தாமே வலிந்துவந்து பிடித்தெடுத்து என்னை அக்கடலினின்றும் மீட்டுக் காத்தருளிய பெருதவியைச் செய்த தலைவராகிய கூத்தப் பெருமானுக்கு, எல்லாவற்றுலும் சிறியவனாகிய யான், சொல்லத் தக்க நன்றியுரை இன்னதென்று அறிகின்றிலேன்'' எனப் பிறிதோர் உள்ளுறை பொருளும், இச்செய்யுட்கண் அமைந்திருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது.

''தனியனேன் பெரும்பிறவிப்பவ்வத்து, எவ்வத் தடந்திரையால் எற்றுண்டு, பற்று ஒன்று இன்றிக் கனியைநேர் துவர் வாயார் என்னும் காலாற் கலக்குண்டு, காமவான் சுறவின்வாய்ப்பாட்டு, இனி என்னே உய்யுமாறு என்றென்று எண்ணி, அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை, முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லற் கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே'' எனவரும் திருவாசகச் செய்யுளினை அடியொற்றியது, இத் திருக்கோவையார் செய்யுள்] (158).

தோழி: தலைவனே! தினையினது கதிர்கள், கோடைகால வெம்மையால் அழிய, மழையை விரும்பிக் கானக் குறவர்கள் கடவுளை வழிபட்டு ஆரவாரிக்கும் மலைநாடனே! இற்றை யாமத்தெல்லாம் நின் அருள் ஏவலை நிறைவேற்றுதற் பொருட்டு, தில்லை செல்லாதவர் அடையும் துன்பங்கள் பலவற்றையும், யான் எய்தினேன். எய்தித் தலைமகளை நின் குறை நயப்பித்தேன். நீ கருதியதும் நிறைவேறியது. (159).

சிற்றம்பலத்தார் தரும் பேரருள் போல ஓர் இன்பம், இன்று இவ்இல்லின்கண் வந்து பொருந்தும் என்று, தம்முடைய துணையாகிய பெண்மயில்களுக்கு ஆண்மயில்கள் உவகையுடன் சொல்லுவனபோல, இடைவிடாது நிகழும் ஆரவாரத்தை உடையனவாய், யாம் விளையாடும் பொழிலிடத்து, மயிலினங்கள் இன் புற்றுத் துயில் பெயர்ந்து அகவுகின்றன. இஃது என்னோ? (160).

தில்லை போலும் தலைவி! நமது பொழிலின்கண் சிறிய கண்களும், பெரிய தந்தங்களும் உடைய யானை ஒன்று, இந்நள்ளிரவில், நம் அழகிய ஊசலைச் சீரழித்து, அவ்வூசலைத் தொடுத்த, இதழார்ந்த மதுமலர்கள் மிக்க, நாகமரத்தையும் அசைத்து, மோதிக்கொண்டு, நிற்கின்றது. இதற்கு என்செய்கேம்? (161)

வண்டுகள் வாழும் கருங்குழற்றலைவியே! தென்தில்லை நின்றோன் ஆகிய சிவபிரானின் திருநீலகண்டம் போல, அழகிய குவளை மலர்கள் இந்நள்ளிரவில் மலர்கின்றன. அக்குவளை மலர்கள், வாள்போல மிளிரும் நின்கண்களை ஒக்குமாயின், நீ அவற்றைக் காண வருவாயாக. (162).

புலியூர் அனைய தலைவியே! இவை நின் அழகிய பெரிய கண்களுக்குத் தோற்ற நீல மலர்கள்! நின் கருங் குழற்குச் சந்தன மரத்தின் தளிர்களையும், வேறு பிற நறுமலர்களையும், யான் கொணர்ந்து தருவேன். அதுவரை நீ இங்கேயே இருப்பாயாக. (163).

தலைவன்: தலைவீ! ஞாயிறாகிய வாயிலோன் அடைத்து வைத்த, தாமரை ஆகிய நும் இல்லின்கண், இதழாகிய கதவினை, ஞாயிறாகிய வாயிலோன் வருவதன்முன் நீரே திறந்து கொண்டோ, திருமகள் அனைய நீர் இங்குப் போந்தீர்? இடையிலுள்ள மேகலையை ஒலியாமல் பிடித்துக் கொண்டும், சிலம்புகளை மேல் ஏற ஒதுக்கிக்கொண்டும், பிறர் அறியாதபடி தன்னந்தனியே மெல்லென இந்நள்ளிருளில், நீர் இங்கு வந்து விரும்பி காத்துக்கொண்டு தங்கியிருப்பது, எத்தகைய மகிழ்தக்க வியத்தகு செயல்! (164).

இத்தலைவி, கூந்தலின்கண் அகிற்புகை பரவ, அழகிய மலர்களை அணிந்து, கண்மலர்க்கு அஞ்சனம் எழுதத் தக்கவள் ஆயினும், மிகவும் மெல்லியள் ஆதலின், தனக்குப் பெருஞ்சுமையாகும்படி ஒரு தனிவடத்தை அணியத் தகுந்தவள் அல்லள். புலியூரின் பெருமையை உணராது அதனொடு மாறுபடுபவரைப் போல, தளர்கின்ற இச்சிற்றிடை நெரிந்து ஒடியப் புகினும், அதனை உணராது இப்புணர் முலைகள் இவ்வண்ணமே மிகப் பெரிதும் விம்மா நிற்கின்றன. இஃது என்னாய் முடியும்? யான் இவளது இடையைச் சென்று தழுவியணைந்து, காக்க முயல்வேன். (165).

தில்லையைச் சூழ்ந்த இளம் காட்டில், நீர் நிலை வயல்களில் உள்ள, கொழுந் தேன் மலர் வாய்க் குமுதமலர் போன்றவள், இத்தலைவி! யானோ, எழில்மிக்க நிலாவொளி வீசித்தோன்றி இத்தலைவியாகிய குமுதமலரை மலரச் செய்கின்ற, வானத்து இளமதியம் போல்வேன்!

['மலர்வாய்க்குமுதம்' என்றதனால், தலைவியின் இளமையும் அழகும் விளங்கும். இவ்வின்

பம் வழிமுறையால் மேன்மேலும் பெருகும் எனற்குத் தலைவன் தன்னை 'இளமதி' என்றான். மதியைக் கண்ட அளவிலேயே குமுதமலர் மலரும்; அதுபோலத் தலைப்பெய்தபின் அன்றிக் கண்ட அளவிலேயே தலைவி மகிழ்ச்சியுறுவள் என்பது கருத்து] (166).

தலைவியே! தில்லைச்சூழ் பொழிலில் தனியே நின்று, சுரும்புகள் மொய்க்கும் நீல மலர்களை இனி நீ கொய்தல் வேண்டா. நின் ஆருயிர் அனைய அரும்பெறல் தோழியுடன், ஆயத்தின் பாற் சென்று, நீ துயில் பயில்வாயாக. (167)

தோழி: மலைச் சோலையின்கண் வளர்ந்த மூங்கிலிற் பிறந்த தீயானது, வானுலகின் கற் பகச் சோலையைச் சென்று பற்றும் மலைநாடனே! பரற் கற்கள் பரவிய இச்சிறு நெறி, வில்லைப் பகைத்து, அதனிற் சிறந்த புருவத்தை உடைய தலைவியின் காரணமாகவே, உண்மையில் நினக்கு எளிதாயிற்று. ஆயினும், இனி நீ அடிக்கடி ஈண்டு வரற்பாலை அல்லை.

[''மூங்கிலிற் பிறந்த தீ, அங்கிருந்து படர்ந்து தேவருலகளவும் சென்று கற்பகமரச் சோலையைக் கதுவும்'' என்றது, ''தலைவனே! நின் வருகையினால் இங்கு அரும்பிய அலரானது பெருகி, நின் ஊரும் அறியும்படி பரவி, நின் பெருமையைச் சிதைக்கும்'' எனக் குறிப்பாற் புலப்படுத்தியது]. (168).

தலைவன்: தோழியே! கயிலைமலைக்கண் வாழ்பவளும், சிவந்தவாய் — பெரும்பணைத் தோள்கள்-கொடி போன்ற சிறிய இடை ஆகிய வற்றை உடையவளும், திருமகள் போன்றவளும் ஆகிய நும் தலைவி, முற்பிறப்பில் யான் செய்த தவப்பயனால், எனக்கு எய்த இயலும் வண்ணம் இன்று இவ்வாறு கொடிச்சி (குறவர் குலமகள்) ஆகத் தோன்றியுள்ளாள். இது கருதியே, என் இன்னுயிர் இறவாமல் இன்றும் நிற்கின்றது. இங்ஙனம் அருமை பெருமையுடையவளை, நீ யான் மணக்கும் அளவுக்கு எளியவளாகக் கருதிக் கூறுகின்றது என்னை?

[''பைங்கயிலைச் செவ்வாய்க் கருங்கண், பெரும்பணைத்தோள் சிற்றிடைக் கொடி'' என்பது, முரண்தொடையணியாய்ச் செய்யுள் இன்பம் தோன்ற நின்றது. எம் காதல் முன்னைத் தவத்தால் அமைந்ததொன்றாகலின், யான் இரவு வரினும் ஏதம் ஏதும் நேராமல், அத்தவமே காக்கும் எனத் தலைவன் குறிப்பாற் கூறினான்.] (169).

தோழி: மன்னனே! இந்நள்ளிரவில் ந செல்லும் நெறிக்கண், நினக்கு இடையூறு உண் டாம் என்னும் அச்சத்தால், சிறிய இளப் பருவத்தினளாகிய எம் தலைவியின், பெருமலர்க் கண்கள் ஆகிய கருங் குவளைகள், கண்ணீர்த் துளிகள் ஆகிய முத்த மாலைகளை ஒழுகவிடா நிற்கும். அதனால் நினக்கு இடையூறு ஏதும் நேராமையினை இவள் அறியும்படி, நீ நின்பதி யாகிய தில்லையின் எல்லையில் சென்று சேர்ந்த தும், நின் செவ்வாயைக் கரிய எருமைக் கொம் பினாற் செய்த வயிர் என்னும் இசைக் கருவியின் கண் சேர்த்து ஊதி, அறிவிப்பாயாக. (170)

மதியமே! நினக்கு அறிவுள்ளதா? வேல் ஏந்திய கையை உடைய எங்கள் தலைவனாகிய யானை வர, நாங்கள் அவனை எதிர்கொண்டு வர வேற்கும் இந்நள்ளிருளில், அவ்விருளைச் சிதைத்து, தேன் நிறைந்த நாகமலர் மலிந்த சோலையின்கண் நின்று, நீ செய்கின்ற அழகு வாய்ந்த ஆட்சி தகுதி உடைத்தன்று. இராகு கேது என்னும் நாகங்களால் விழுங்கப்படும் நீ, பதஞ்சலியாகிய நாகம் தொழ, அம்பலத்தை நண்ணி நடம்பயிலும் எம் இறைவனது, மலைக் கண் புகுந்து விளங்கி வீற்றிருத்தல், நினக்கு நன்மை பயவாது.

[இச்செய்யுளில் 'நாகம்' என்னும் ஒரு சொல்லே, முறையே—பதஞ்சலியாகிய பாம்பு-மலை-யானை-சுரபுன்னை மரம் என்னும் வெவ் வேறு பொருளிற் பயின்று வந்துள்ள சிறப்பு, மிகவும் சுவைக்கத் தக்கது. ''மதியே! மதியே?' (சந்திரனே! அறிவுதானா?) என்னும் தொடரின் அருமைப்பாடு போற்றுதற்குரியது.] (171)

தில்லைபோலும் தலைவீ! புன்னை மரங்கள், அழகிய அரும்புகளாகிய முத்துக்கள் கொத் தாகப் பொருந்தி, தாதாகிய பொன்மலர்கின் றன. அப் புன்னைமரங்களின்கண் உள்ள தம் சேக்கைகளில் அன்னங்கள் எல்லாம், பொழுது புலரும் அளவும் துயிலாமல் துன்புற்றுக் கூவி ஆரவாரித்தன. அவற்றிற்கு எய்திய அலமரல் யாதோ? அறிகின்றிலேன்.

['பொழுது புலரும் அளவும் அன்னங்கள் துயிலாது அழுங்கின' என்றது, தலைவன் நேற்று இரவு வாராமையால் அல்ல குறிப்பட்டு, யாங் களும் இரவெல்லாம் துயில் கொள்ள இயலாமல் வருந்தினோம் என்பதுணர்த்திற்று.] (172).

பெரும் கடலே! நீ முற்காலத்தும் இவ் வாறு ஒலித்து ஆரவாரம் செய்து, நின் அமிழ் தத்தையும், திருவையும், திங்களையும் இழந்து இழிவுற்றாய். எனினும், மீட்டும் ஒரு பயனும் இல்லாமல், தில்லையை ஒத்த எம் தலைவி மிகவும் வாடி வருந்துமாறு, பெரிதும் ஆரவாரித்து இரையா நின்றாய். காரணமின்றிப் பிறரை வருத்துதலான் வரும் பழியையும், நீ நோக்கு கின்றிலை. நினக்கு இது நன்றோ? (173).

தலைவி: சோலைகளே! சோலைகளைச் சூழ்ந்த கழிகளே! கழிகளிற் பயிலும் புள்ளினங்களே! 'எதற்காக நீ வருந்துகின்றனை' என்று என்னை வினவி நீங்கள் ஆறுதல் கூறுகின்றிலீர். அன்றியும், 'இவள் துன்பம் எய்துவது எற்றிற்கு' என்று, இங்கு வரும் துறைவர்பால் என் நிலைமையைத் தெரிவித்து நீவிர் ஏதும் கேட்கின்றிலீர். எம்மிடம் நீங்கள் கொண்டுள்ள அன்பின் திறம் இதுதானோ? சொல்லுமின்கள். (174).

தலைவி: தில்லைநகர் இறைவனின் திருவிழா வில், மாணிக்கம் முதலாயினவற்றால் ஆயின மாலைகளின் தொகைகளால், இராப்பொழுதும்

பகல்போல விளங்கும். அன்றியும் அத்திருவிழாவில் ஆங்காங்கு ஏற்றப்படும் பலப்பல விளக்குகள், இருளைச் சிறிதும் இல்லாமற் செய்யும். இவ் இடையீடே யன்றி, திருவிழாக் காலத்து வீட்டில் உள்ளோர் அனைவரும், ஒரு சிறிதும் துயிலார். ஒருகால் துயில்வராயினும், நமது துறைவர் தமது வேலை ஏந்திக்கொண்டு வரும்பொழுது, நாய்கள் குரைத்து அனைவரையும் துயிலினின்று எழச்செய்யும். ஆதலின், தலைவரை யாம் எதிர்ப்படுதல் பெரிதும் அரிதே ஆகும் (175).

தோழி: தலைவ! கயிலைமலையின் கான்யாறுகள் பலவற்றை நீந்திக் கொண்டு, நீ இங்கு வருகின்றாய். வருங்கால், இடிஏறுகள் நினக்கு இடர் விளைவித்தல் கூடும். ஒருகால், நினது வேலுக்கு அஞ்சி, அவைகள் நின்பால் வாராது ஒழியினும், மேகங்கள் படிந்து சூர்த்தெய்வங்கள் வதியும் இச்சோலை இடத்து, இந்நள்ளிருளில் நீ வருதல் தக்கதன்று, அத்தெய்வங்கட்கு நீ அஞ்சுகின்றிலை. ஆயினும், அத் தெய்வங்களால் நினக்கு ஏதேனும் ஏதம் நேருமே என்று யாங்கள் அஞ்சுகின்றோம். ஆதலின், நீ இரவில் இங்கு வாராதிருத்தலே நன்று. (176).

தலைவி: இரவெல்லாம் வானத்தில் நின்று ஒளிவீசும் மதி மண்டிலமே! இத்தில்லையின் எல்லையில், மெல்லிய கழிசூழ்ந்த கண்டலே (தாழைச் செடிகளே) சான்றாக, இளைய புன்னை மரத்தின் நிழலில், என்னைக் கலந்த கள்வர், மீண்டும் இங்கு வருவதை நீ காணவில்லையா? துணை இல்லாமல் வருந்தும் எனக்கு, நீ ஒரு சொல் கூறி அருள்க.

[''கங்குல் (இரவெல்லாம்) மங்குல்வாய் (வானிடத்தேநின்று) விளக்கும் (ஒளிவீசும்) மண்டலமே (சந்திரனே)'' என்றது, எல்லாவற்றையும் கண்டு, எல்லா உயிர்களுக்கும் பொருள்களைக் காட்டி உதவுகின்ற நீ, எளிய எனக்கு இரங்கி, என் தலைவனைக் காட்டியருளல் வேண்டும் என்பதுணர்த்திற்று. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுபவர் எனற்குக் 'கள்வர்' என்றாள். புன்னைமரம் கன்னிமைப் பருவத்ததாகலின், அது சான்று கூற நாணும் என்பாள், 'கன்னிப் புன்னை' என்றாள். கள்வர் ஆகிய தலைவர் தன்னைக் கலந்ததனைக் கண்டு சான்று கூறுவார் வேறு எவரும் இலர் எனற்கு, 'கண்டலையே கரியாக் கலந்த கள்வர்' என்றார். நின்னைவிட வேறொரு புகலும் இல்லேன் என்னும் கருத்தில், 'தமியேன்' என்றாள். 'வரக்கண்டிலையே?' என வினவியது, 'காணாதிருப்பாயல்லை. கண்டதுண்டேற் கூறுக' என்னும் குறிப்பினது. கண்டேன் என்றோ, கண்டிலேன் என்றோ, ஏதேனும் ஒரு சொற்கூறின், அச்சொல்லே எனக்கு ஆறுதல் அளிக்கும் என்பாள் ''மண்டலமே! பணியாய் தமியேற்கு ஒரு வாசகமே'' என்றாள்.] (177).

தோழி: தலைவனே! துறக்கப்படுவனவற்றின் மேல் பற்று ஒன்றும் இல்லாத, பக்தர்கள் அறிந்து பற்றுகின்ற, சிவபிரானின் புதல்வனாகிய முருக வேளைப் போல, நீ எமது இல்லத்து வரைப்பின் கண் வந்து நின்றால், நின்னைக் காண்பவர்கள், இம்மலை நிலத்திற்கு உரிய கடவுளாகிய முருகன்' என்று கருதி, மலரிட்டு வாழ்த்தி நின்னை வணங்குவர். அங்ஙனம் வணங்காமல் ஒருகாற் பிறிதொன்றை நினைத்து ஐயுற்று உண்மை உணர்வராயின், நினக்குப் பெரிய தீங்கு நேரும்! அங்ஙனம் நேரத்தகும் தீங்கை நினைத்தால், எம் தலைவியாகிய இம்மங்கை உயிர்வாழ வல்லள் அல்லள். ஆதலின், இந்நள்ளிருளில் இனி நீ எம் இல்வரைப்பின்கண் வந்து புகுந்து, இவ்வாறு களவொழுக்கம் மேற்கொள்ளற் பாலை அல்லை. எம் தலைவியை விரைவில் முறைப்படி வெளிப்பட மணந்து கொள்ளுக (178).

தலைவி: கடலே! நீ ஓங்கி உயர்ந்து அணைந்த கரையைப் பொருந்தி, புரண்டும் விழுந்தும், எழுந்தும், ஓலம் இட்டும், துன்புற்றுப் புலம்பா நிற்கின்றாய். எப்போதும் அலைந்து கலங்கிக் கொந்தளித்துத் துயருறுகின்றாய். ஓர் இரவிலும்கூட, நீ கலக்கம் இன்றி அமைதியுற்றுத் தெளிவு அடைகின்றிலை. அதனால் என்னைப்போல, நின்னையும் அணைந்து அகன்று சென்றொழிந்தவர் யாரேனும் உளரோ? கூறுக (179).

தோழி: ஐயனே! திருமால் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு, தன் ஆயிரம் கைகளாலும் வழிபாடு செய்ய, அத்திருமாலுக்கு அளவில்லாத ஒளிக்கதிர்களை வீசும் ஆழிப்படையை அளித்தவனும், தில்லைச் சிற்றம்பலவனும் ஆகிய சிவபெருமான் செய்யும் அருள் போல, நீ தலைவியின்பாற் செய்த தண்ணளியாகிய மெய்யருளானது, ஊர்மக்கள் பலராலும் அறியப்பட்டு, முதற்கண் அம்பலாய்ச் சிறிது சிறிதே முகிழ்முகிழ்த்து, பின்படிப்படியே அலராய் முதிர்ந்து யாண்டும் பரவிப் பெரும் பழியாய் விளைகின்றது. இனியேனும் காலம் தாழாமல், நீ எம் தலைவியை மணத்தற்கு முயல்க!

[தில்லையான் அருள்பெற்ற அடியார்கள், உலகியல்பினராய் ஒழுகாமையின், அவ்வருள் உலகத்தார் நாப்பண் அடியவர்களுக்கு அலர் (பழி) விளைவிக்கும் ஆதலின், ''தில்லையான் அருள்போன்று, அம்பல் கைம்மிக்கு, அலராய் விளைகின்றது'' எனத் தோழி கூறினாள். அம்பல்-சிலர்மட்டுமே அறிந்து, தமக்குள் மெல்லெனப் பேசிக் கொள்வது. அலர்-பலரும் அறிந்து வெளிப்படையாகப் பேசுவது. ''மால் ஆயிரம் மலர் தந்து, ஆயிரம் கரத்தால் வழிபாடு செய்தாற்குப் படை கொடுத்தான்'' என்றது, யாம் ஆயிரம் முறை ஆயிரம் வழிகளால் வற்புறுத்தி வேண்டிக் கொண்டும், நீ எம் தலைவியை மணந்து கொள்ள முற்படுகின்றிலையே என்னும் மனவருத்தத்தைப் புலப்படுத்தும் (180).

—தொடரும்

(ஆசிரியர்)

கந்தர் அநுபூதி

'அருண்மொழியரசு'

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

உலகம் உய்ய அவதரித்தவர் அருணகிரி நாதர். அவர் முருகப் பெருமான் ஒருவரையே பாடும் நியமம் பூண்டவர். ''கற்புறு சிந்தை மாதர் கணவனையன்றி வேறேர் இற்புறத்த வரை நாடார்'' என்பதுதாயுமானுர்திருவாக்கு. அப்பரம பதிவிரதா தருமத்தின்படி நின்று அருணகிரிநாதர், நாம் உய்யும் பொருட்டுத் திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், வேல் மயில் விருத்தங்கள் என்ற ஞான அருள் நூல்களைப் பாடி நமக்கு வழங்கியருளினுர். இவற்றுள் கந்தர் அநுபூதி மந்திர நூல், சுருங்கியதும் மகத்துவம் மிகுந்ததும் ஆகும். நமது உடம்பில் ஆறு ஆதாரங்கள் உண்டு. அவை மூலாதாரம்: சுவாதிட்டானம், மணி பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை. இந்த ஆறு ஆதாரங்களில் மலர்ந்துள்ள மலர் இதழ்களில், அகர முதல் க்ஷகரம் முடிவாக ஐம்பத்தொரு அட்சரங்கள் உள.

மூலாதாரத்தில் 4, சுவாதிஷ்டானத்தில் 6, மணிபூரகத்தில் 10, அநாகதத்தில் 12, விசுத்தியில் 16, ஆக்ஞையில் 2, அதற்குமேல் 1, ஆக 51. இதை 'அகரமுதலென உரைசெய் ஐம்பத்தொரக்ஷரமும்' என்கின்ற திருப்புகழா லும்அறிக. இந்த மாத்ருகா மந்திரங்களே அநுபூதியின் ஐம்பத்தொரு பாடல்கள் என உணர்க. இந்தக் கந்தர் அநுபூதியில், அருண கிரிநாதர் தனது அநுபவத்தை, நிரம்பவும் கூறி யிருக்கின்ருர். மெய்ப்பொருள் என்ற அருமை யான திருமொழியை, நான்கு இடத்தில் எடுத்துக் கையாண்டிருக்கின்ருர்.

''அமரும் பதிகேள் அகமாம் எனும் இப்
பிமரம் கெடமெய்ப் பொருள் பேசியவா''

—8வது பாடல்.

''கூகா எனஎன் கிளே கூடியழப்
போகா வகைமெய்ப் பொருள் பேசியவா''

—11வது பாடல்.

''அரிதாகிய மெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா''

—20வது பாடல்.

''கரவாகிய கல்வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ''

—45வது பாடல்.

இனி மனதை விளித்து மூன்று பாடல் களில், அறவுரை பகர்கின்ருர். இவை மூன்றும் மிகவும் இனிமையான உபதேசம். 7, 14, 37 எண்ணுள்ள பாடல்கள். ஏ மனமே! நீ வீணே கெடுகின்ருய். பிழைக்கும் வழி கூறு கின்றேன் கேள். வறியார்க்கு ஒளியாமல் கொடு. கொடுத்தோம். கொடுத்த உடைமை நம்முடையது, என்ற எண்ணம் வரக் கூடாது. உடைமை யாவும் முருகனுடையவை. உடம்பு, கரசரணுதிகள், மனம் முதலிய கருவிகரணங் கள் எல்லாம் அவன் தந்தவை ; ஆதலால் ஏழைகட்குத் தரும்போது நான் தந்தேன் என்ற தற்செருக்கு தலைக்காட்டாமல், முருகனை நினை. மனமே! உன்னுடைய நீண்ட வேதனைகளை எல்லாம், நம் பரமபிதாவினுடைய வடிவேல் துகளாக்கிவிடும். ஆதலால் அந் நெடிய துன் பங்களைச் சுட்டுவிடு. வினைகளை எல்லாம் விட்டு விடு.

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

—7வது பாடல்.

ஏ மனமே! உனக்கு உய்யும் வழி தெரியவில்லையே? நான் கூறுகின்றேன். கவன மாகக் கேட்டுக் கொள். அவாவினுல்தான் எல்லாத் துன்பங்களும் விளைகின்றன.

இந்த அவா உள் புகுவதற்கு ஐந்து வழி கள் உண்டு. மெய் வாய் கண் நாசி செவி என்ற இந்த சாளரங்களின் வழியே, அவாஎன்ற கள்வன் உள்ளே புகுந்து, ஞான ரத்தினத்தைக்

களவாடுகின்முன். மனமே! ஐவாய் வழி செல்லும் அவாவை ஒழித்து உய்வாய்! அவா வற்றவுடனே, கையில் ஞான வேலைத் தாங்கிய முருகவேள் திருவடிக் கமலம் உனக்குக் கிடைக்கும். அதனுல் உனக்கு உய்தி உண்டாம்.

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல்லும் அவாவினையே

—14வது பாடல்.

இந்தப் பாடல் பிறவிப் பிணிக்கு அரிய மருந்து.

மற்ருென்று. மனமே! உனக்குச் சினம் மூள்கின்றபோது அறிவு அறவே அற்றுப் போகும். ஒரே மயக்கந்தான் உண்டாகும். சீற்றம் மிகுதியாக வந்தவுடன் சொல்வன இன்ன, செய்வன இன்ன என்று தெரியாத நிலை ஏற்படுகின்றது. ஆதலால் மலையே புரண்டு வந்தாலும், வானந் துளங்கி வீழினும் நிலை கலங்காதே. பொறுமையாக இரு. அப்பொறுமையான பூமியில் ஞானமாகிய மரம் முளைக்கும். அந்த ஞானத் தருவில் அருள் பழுக்கும். இந்த அருட் பழத்தை அழிக்க ஒரு குரங்கு வரும். அதுதான் அகந்தை என்ற குரங்கு. நான் நான் என்ற அகந்தையை, ஞான வாளால் வெட்டி எறி. அங்ஙனம் அடியோடு அகந்தையைத் தொலைத்து விட்டு, மலையைப் பிளந்த வேலாயுதக் கடவுளுக்குத் தொண்டனுக இரு. தொண்டனுக வேண்டும் என்ற ஆர்வம் மேலிட வேண்டும். அந்த விருப்பம் மிகுதியாக எழுதல் வேண்டும்.

கிரிவாய் விடு விக்ரம வேலிறையோன்
பரிவாரம் எனும் பதம்மே வலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.

—37வது பாடல்.

இந்த மூன்று பாடல்களுக்கும் ஒரு அடையாளம் இட்டதுபோல், ''வாய்'' என்றசொல்லை அமைத்திருக்கின்ருர். 7 கெடுவாய், 14 கைவாய், 35 கிரிவாய்.

இம் மூன்று பாடல்களையும் அருணகிரி நாதர் உள்ளபடியே தன் மனத்தை நோக்கித் தான் அறவுரை கூறிப் பாடினர் என்று எண்ணுதீர்கள். உலகில் உள்ள முந்நூறுகோடி மக்களையும் நோக்கிப் பாடியருளினுர். ஆ! என்ன அரிய உபதேசம்!

சினந்திருக்கும் மனந்திருந்தி உய்யுமாறு, வள்ளல் அருணகிரிப் பெருமானுர் உபதேசித்த அருள் திறத்தை மறக்கலாமா?

மேலும் கந்தரநுபூதியில் பலப்பல உண்மைகளை உரைத்திருக்கின்ருர். இது சிந்தனைக்கும் வந்தனைக்கும் உரிய ஒரு நூல். அருணகிரியார் மிகவும் புகழ்ந்தோதிய திருத்தலங்கள் ஆறு படை வீடுகள். அவருடைய அவதாரத் தலம் அருணை. அவருக்கு அருள் கிடைத்த இடம் வயலூர். ஜெபமாலை தந்த இடம் பழநி. இத்தகைய அரிய பெரிய தலங்களைப் பற்றிச் சுவாமிகள் இக் கந்தரநுபூதியில் குறிப்பிடவில்லை. திருச்செங்கோடு என்ற ஒரு தலத்தை மட்டுமே ''நாகாசலம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இனி திருமால் மருகன் என்று மிக அழகாகத் திருப்புகழிலும், கந்தர் அலங்காரத்திலும் திருவகுப்பிலும் பல இடங்களில் கூறியிருக்கின்ருர். அந்த இடங்களில் இனிக்க இனிக்க நர்ராயணருடைய பெருமைகளைக் கூறியுள்ளார். மந்திர நூலாகிய இந்தக் கந்தரநுபூதியில் திருமால் மருகன் என்று ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை. இது ஒரு சிந்தனைக்குரிய கருத்து. குமரகுருபரனுகிய குகனைக் குருமூர்த்தமாகக் கொண்டாலன்றி உண்மைப் பொருளை உணர முடியாது என்று, 13-வது பாடலில் திட்டவட்டமாகத் தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

''முருகன் தனிவேல் முனிநங் குருவென்று
அருள்கொண்டு அறியார் அறியுந் தரமோ''

அப்பரம கருணுநிதியைக் குருவாகப் பெற்றுவிட்டால், எல்லாக் கலைகளையும், எல்லா நிலைகளையும் எளிதில் உணரலாம். தக்கவர் ஒருவர் நம் வீட்டுக்கு வர வேண்டுமாயின், அழைத்தால்தானே வருவார். அழையாதவர் ஓர் இடத்துக்கு வரமாட்டார்கள். அது முறை அன்று. முருகா! என் அப்பனே! நீ எனக்குக் குருவாக வா! வந்து உபதேசம் செய்! என்று நாம் எப்பொழுதாவது உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகி உண்மை யன்புடன் அழைத்திருக்ருேமா? அவன் நமக்குக் குருவாக வரவேண்டும் என்ற அருள் தாகமே இன்னும் பலருக்கு வரவில்லை. தாகம் வந்தவனுக்குத் தண்ணீர் தான் தரப்படும். விக்கினர்க்குத் தண்ணீர் விடப்படும். ஆதலால் இந்தப் புது வருடத்திலிருந்தாவது முருகனைக் குருவாய் வருவாய் என்று அழைப்போமாக. நன்ருக அழைக்கத் தெரியாத நமக்கு, குகனைக் குருவாக அழைக்கும் அரிய பாடலைப் பாடித் தந்து அநுபூதியை அருணகிரி நாதர் முடிக்கின்ருர். அதுதான் இது.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

சைவ சித்தாந்தம்*

[ந.ரா. முருகவேள், M.A., M.O.L.,]

முன்னுரை :

சிவபிரானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம், சைவம் எனப்படும். அச்சைவத்தின் சித்தாந்தம் அல்லது கொள்கையே, பொதுவாகச் சைவ சித்தாந்தம் என வழங்கப்படும். எனினும் சைவம் என்பதும், சைவ சித்தாந்தம் என்பதும், தனித் தனிப் பொருட் குறிப்புடையன ஆகும். சைவம் என்பது இமயம் முதல் குமரி வரையில் இந்திய நாடு முழுவதும் பரவியுள்ளது. ஆயினும், காசுமீரச் சைவம் என்றும், கன்னடநாட்டு வீர சைவம் என்றும், பெயர்கள் வழங்கக் காண்கின்றோம். அதுபோல, நம் தமிழ் நாட்டுக்கே தனிச் சிறப்பாக உரிய சைவக் கொள்கையே, சைவ சித்தாந்தம் என வழங்கி வருகின்றது. வசுகுப்தர், கல்லடர், சோமானந்தர், அபிநவ குப்தர் முதலிய சான்றோர்களால், காசுமீர நாட்டில் பரப்பப் பெற்றது, **காசுமீரச் சைவம்**. பசவேசுவரர், சென்ன பசவேசுவரர், சித்தராமையர், அல்லமாப் பிரபு முதலிய அருளாளர்களால் வளர்க்கப் பெற்றது, கன்னடநாட்டு **வீர சைவம்**. அங்ஙனமே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சமயாசிரியர்கள் நால்வராலும், மெய்கண்டார், அருள் நந்தி சிவம், மறை ஞானசம்பந்தர், உமாபதி சிவம் என்னும் சந்தான ஆசிரியர்களாலும், அவர்தம் வழிவந்த மற்றும் பற்பல அருட் பெருஞ் சான்றோர்களாலும், பரப்பி வளர்க்கப் பெற்றதே ''**சைவ சித்தாந்தம்**'' எனப்படும்.

சைவ சித்தாந்தத்தின் சிறப்பு :

இத்தகைய சைவ சித்தாந்தச் செந்நெறியின் சிறப்பினையும், அருமை பெருமைகளையும் நம் முன்னோர் தம் நூல்களில் பல வகைகளில் விதந்து குறிப்பிட்டுள்ளனர். ''சித்தாந்தத்தே சீவன் முத்தி சித்திக்கும்'', ''தற்சிவம் கண்டுளோர் சைவசித்தாந்தரே'', ''சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே'' என்பனபோல வரும் திருமூலர் திருமந்திரத் தொடர்கள், சைவ சித்தாந்தத்தின் சிறப்பினைக் குறிப்பிட்டு உணர்த்துதல் காணலாம்.

வேதாந்தத் தெளிவு :

சிவப் பிரகாசம் என்னும் நூலில், ஆசிரியர் உமாபதி சிவம், ''சைவ சித்தாந்தமானது, புறச் சமயத்தவர்களுக்கு இருளாய், அகச் சமயத்தவர்க்கு ஒளியாய் விளங்கும் ; அளவை நெறிக்கு அளவையாகத் திகழும் ; இறைவனையும் உயிர்களையும், பொன்னும் மணியும்போல் அபேதம், இருள் ஒளிபோல் பேதம், சொற் பொருள் போல் பேதாபேதம் என்று கூறும் பிற சமயங்கள் போலாமல், இறைவன் உயிர்களுடன் உடலும் உயிரும் போல் ஒன்றாகவும், கண்ணும் சூரியனும்போல் வேறாகவும், கண்ணொளியும் உயிரறிவும்போல் உடனாகவும் இயைந்து நிற்றலை இனிது உணர்த்தும் ; வேதாந்தம் என்னும் உபநிடத நூல்களின் பிழிவாகவும் தெளிவாகவும் திகழும்'' என்கின்றார்.

புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத் தொளி யாய்ப்,
புகல் அளவைக்கு அளவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும், சொற் பொருள்போல்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய், உடலுயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல், பிறிவரும்அத் துவிதம் ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்க லுற்றாம்!

—உமாபதிசிவம்

வேதத்தலை தருபொருள் :

மற்றும் இச் சைவ சித்தாந்தமானது ''உலகாயதம் முதலாகச் சிவாத்துவைதம் ஈறாக உள்ள பல்வேறு மதங்கள் கூறும் கொள்கைகளை எல்லாம் கடந்தது. வேதத்தலை தருபொருளாய் விளங்குவது. ஆயுந்தோறும் அறிஞர்களுக்கு ஆரா இன்பம் அளிப்பது. உள்ளதே தோழிற்படும் என்னும் கொள்கை (சற்காரியவாத) நெறியினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது'' என்றும், சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையின் சிறப்புக்களை, ஆசிரியர் உமாபதி சிவம் தொகுத்துக் கூறியருள்கின்றார். (சிவப் பிரகாசம் 100).

---

* மதுரை மாநகரில் காஞ்சி காமகோடி பீடம் **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்** அவர்களின், அருளாதரவில் நிகழ்ந்த, உலக சமய கலாசார தத்துவ மாநாட்டில், 'தொழுதகு தந்தை' **(Rev. Fr) இக்நேஷியஸ் இருதயம்** அவர்கள் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. *(2—4—77)*

—**ஆசிரியர்.**

''நிலவுல காய தாதி
நிகழ்சிவாத் துவிதாந் தத்துக்
குலவினர் அளவ ளாவாக்
கொள்கைய தாகி, வேதத்
தலைதரு பொருளாய், இன்பாய்த்,
தாவில்சற் காரி யத்தாய்,
மலைவறும் உணர்வாற் பெத்த
முத்திகள் மதித்தாம் அன்றே''

—சிவப்பிரகாசம், 100.

தமிழ்ப் பண்பாடு :

சைவ சித்தாந்தக் கொள்கை நெறியினைச் ''சித்தாந்த சைவம்'' என்றும் பெரியோர்கள் வழங்குவர். இது நம் தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்குமே உரிய, பழமையும் பெருமையும் மிக்க சிறப்பு நெறியாகும். ''சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையானது தென்னிந்தியத் தமிழர் (திராவிடர்) களின் பேரறிவின் பெரு விளைவாகும். அது மிகப் பெரிய மாட்சிமை வாய்ந்ததுமாகும். இதனைத் தென்னிந்தியாவிற்கே, குறிப்பாகத் தமிழர்க்கே யுரிய சமயம் எனலாம்'' (1). ஏனெனில், இதனுடைய முதன்மையான அடிப்படை மேற்கோட் பெரு நூல்கள் அனைத்தும், தமிழிலேயே தமிழகத்துச் சான்றோர் பெருமக்களால், ஒழுங்காக வகுத்து வரையறை செய்து வைக்கப்பட்டுள்ளன. ''சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், மெய்கண்ட நூல்கள் பதினான்கும், அவற்றிற்கு மாறுபடாமல் அவற்றைத் தழுவிச் செல்லும் ஏனைய பிற நூல்களுமே, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை முதன்மை நூல்களாக விளங்குகின்றன'' என்பது பேரறிஞர்களின் துணிபு.(2)

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் தமிழ் வேதமே பசுவாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் தமிழாகமமே அப்பசுவின் பாலாகவும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நால்வர் பாடிய திருமுறைகளே, அப்பாலின் நெய்யாகவும், மெய்கண்டார் அருள்நந்திசிவம் உமாபதிசிவம் என்னும் சந்தான ஆசிரியர்கள் இயற்றிய நூல்களே அந்நெய்யின் சுவையாகவும் அமையச் சிறந்து விளங்குவது, சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை. இவ்வாற்றால் சைவ சித்தாந்தம் நம் தமிழ் நாட்டிற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும், உரிய தமிழ் நெறியேயாதல் தெளியற்பாலது.

தருக்க இயல் :

சைவ சித்தாந்தத் தத்துவ ஆராய்ச்சி, காரணகாரிய அடிப்படையில் (Logical), அறிவு நெறிக்கு ஏற்ப (Rational) அமைந்தது ; சிந்திப்பரியதாய்ச் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய்த் திகழ்வது. பல வகை ஐய வினாக்களுக்கும் நலமுற விடையளிப்பது. துணி பொருள், ஏது, காட்டு, இணைத்தல், முடித்தல் (பிரதிக்ஞை—ஏது —திருட்டாந்தம்—உபநயம்—நிகமனம்)என்னும், ஐவகை யுறுப்புகள் அமையச் சான்றுகள் காட்டி மெய்ப்பிக்கப்பட்ட கொள்கையே சித்தாந்தம் எனப்படும் முறைமைக்கு ஏற்பத், தருக்க நெறி முறைகள் பிறழாது ஆராய்ந்து காட்டி விளக்கிச் செல்வது. இதற்குப் பின்வரும் சிவஞான போதப் பேருரைப் பகுதி, சிறந்த இனிய எடுத்துக் காட்டாகும் :-

''முதல்வன் ஐந்தொழில் செய்தல் தன் பொருட்டோ? பிறர் பொருட்டோ? வீணோ? தன் பொருட்டெனில்,—வரம்பிலின்பமுடைய முதல்வனுக்கு இச்செய்கையான் வரக்கடவதோர் பயன் இல்லை. உயிர்களின் பொருட்டெனின், உயிர்களும் அவனும் அபேதமோ? பேதமோ? பேதாபேதமோ? பொன்னும் மணியும்போல் அபேதமாயின், அது தன் பொருட்டேயாம். இருளும் ஒளியும் போற் பேதமாயின்,அவ்வுயிர்கள்பொருட்டு ஐந்தொழில் செய்தற்கு ஒருவாற்றானும் இயைபு இல்லை. சொல்லும் பொருளும்போற் பேதாபேதமெனின், அபேதமும் பேதமுமாமென்றல் சமணர் கூறும் அநேகாந்த வாதமாம். சொல்லும் பொருளும் வேறேயாயினுஞ் சொல்வந்தெழலும் பொருள் தோன்றுதல்பற்றி அபேதமென்பார் மதத்தை ஒருவாற்றான் உடம்பட்டுப் பேதாபேதமென்னும் துணையேயன்றி, ஒரு பொருட்கு இரண்டு தன்மைகோடல் பொருந்தாமையின், அது போலியேயாம். இங்ஙனமாகலின், பிறர் பொருட்டென்பது பொருந்தாது.

இனி இவ்வாறன்றி வீணெனின், பித்தர் செய்யுந் தொழிலோடொக்கும். பித்தரேயன்றி, அறிவான் முதிர்ந்த அரையர் முதலியோரும், வேட்டையாடுதல், சூதாடுதல், உயிர்த்தல், இமைத்தல், ஆவித்தல், தும்முதல் முதலிய வீண் தொழில் செய்யக் காண்டலின், முதல்வனும் அவ்வாறு கொன்னே செய்தல் அமையுமெனின்,—வேட்டையாடுதல், புலி முதலிய விலங்குகள் மிக்கு நாடு நலியாமைப் பொருட்டாதல், தமக்கு மடிமை வாராமை முதலியவற்றின் பொருட்டாதல், உணவின் பொருட்டாதல், யாதானுமொரு பயன் குறித்தன்றிச் செய்யாமையானும்; சூதாடுதல் வஞ்சனையாற் பகைவரை வெல்லுவதற்கு உபாயமறிதற் பொருட்டாதல், பணையம் பேசிப் பொருளீட்டற் பொருட்டாதல், யாதானுமொரு பயன் கருதியன்றிச்செய்யாமையானும், இமைத்தல் விழியைப் பாதுகாத்தற் பொருட்டாகலானும், ஆவித்தல் தும்முதல் முதலாயின தங்குறிப்பினன்றிக் காரணத்தான் நிகழ்தலானும், இளஞ்சிறார் செய்யும் சிறுதேருருட்டல் சிற்றிலிழைத்தல் முதலிய விளையாடற்றொழில் வன்மை முதலியன சோபான முறையிற் பயிலுதற் பொருட்டு இருமுதுகுரவர் முதலியோராற் செலுத்தப்பட்டு நிகழ்தலின், அவை அப் பெரும் பயனுடையவாய், அவ்விளமைப் பருவ மாத்

(1) " The Saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intellect. It is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South Indian and Tamil Religion."

—Dr. G. U. Pope.

(2) " The fact must be borne in mind that in Tamil alone exist systematic, authoritative works on the Saiva Siddhanta whereas in Sanskrit either in the Vedic or in the post-Vedic period not even a single systematic work on the philosophy is to be met with, even though its principal tenets are found scattered with much that is rubbish, in the Upanishads and in the Sankhya, the Yoga, the Nyaya, the Vaiseshika and the Vedanta works."

—Maraimalai Adigal.

திரையின் மகிழ்ச்சி மீதூர்தலாகிய அற்பப் பயனும் உடையவாகலானும், அவையெல்லாம் வீண்டொழி லன்மையின், வீண்டொழிலெல்லாம் பித்தர் முதலி யோர் செய்யுந் தொழிலேயாம். இங்ஙனமாகலின், ஐந்தொழில் செய்வோன் முதல்வனென்றல் இலக் கண வழுவாமென்று ஆசங்கை நிகழ்ந்த வழி, அதனை நீக்கி வேருயினுங் கலப்பினல் அவையேயாம் இயைபுடைமையின், உயிர்களின் பொருட்டேமுதல் வன் ஐந்தொழில் செய்வன் என்ப''.

எனவரும் சிவஞான போதப் பேருரைப் பகுதி கள் போன்றவற்றால், சைவ சித்தாந்தம் தருக்க நெறி முறை பிறழாது செல்லும் தன்மையினை, யாவரும் இனிது உணரலாம்.

அறிவியல் :

இனி, சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கை வெறும் நம்பிக்கையை மட்டும் தழுவி, குருட்டியற் போக்கில் அமைந்ததன்று. அஃது இக்கால அறிவியல் ஆய்வு நெறிகளுக்கு இயைய, அமைந்து விளங்குவது. சிவஞான போதத்தின் இரண்டாஞ் சூத்திரப் பேருரை யின்கண், விரிவாக விளக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும், இந் நாளைய அறிவியல் ஆராய்ச்சி யாளர்கள் பெரிதும் போற்றத் தக்கனவாகத் திகழ்கின்றன. நிலமுதல் நாதம் ஈருகிய 36 தத்துவங்களைப் பற்றிய சைவ சித்தாந்த ஆராய்ச்சிக் கருத்துக்கள், வெறும் உன்னங்கள் அல்லாமல், காரணகாரியத் தொடர்புடன் அறிவியல் நெறிக்கு ஏற்ப அமைந்துள்ளன(3) என்று, அறிஞர்கள் வியந்து புகழ்ந்துள்ளனர்.

1. உள்ளது அழியாது, இல்லது தோன்ருது.

2. செய்வோனை இன்றிச் செய்வினை இல்லை.

3. சடத்தில் சித்தும், சித்திற் சடமும் தோன்ரு.

4. செய்பொருள் வேறு, செயப்படு பொருள் வேறு, இரண்டும் ஒன்ருக மாட்டா.

5. சூனியத்திலிருந்து ஒன்றும் தோன்ற இய லாது.

6. சுட்டியுணரப் பெறும் பொருள்கள் அனைத் தும் அழியும்.

7. நித்தப் பொருள் சுட்டியுணரப் படாது.

8. சடப்பொருள்கள் உருவம் மாறும் தன் மையன.

9. உருமாறுதலால் ஒரு பொருளும் அழிவ தில்லை.

10. நுண்வடிவில் உள்ளதாய், பருவடிவில் இல்லாத ஒன்றே தோன்றும்.

11. காரணப் பொருளின் தன்மையே காரி யத்தில் உளதாகும்.

12. தனிப் பொருள் கூட்டுப் பொருள் ஆகாது.

13. பொருள்களின் ஆற்றல் அழிவதில்லை.

14. உற்பத்தியாதற்கு முன்னும் காரியம் உள்ளது.

15. மாறுபட்ட இரண்டு தன்மை ஒரு பொருட்கு இயற்கையன்று.

16. அவயவப் பகுப்புடைமை காரியப்பாட் டிற்கு ஏதுவாகும்.

17. அருவமும் உருவமும் தம்முள் மாறுகோள் அன்று.

18. பலவாய் ஏகதேசமாய் அநித்தமாய் உள்ளது காலம்.

19. தூலமாம் உருவினுக்குச் சூக்குமம் முதல்.

20. சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவன எல்லாம் தோன்றி நின்று அழியும்.

21. ஒலிக்கும் ஒளிக்கும் உருவம் உண்டு.

22. இயற்கைத் தன்மை என்றும் மாருது.

23. இயற்கையின் விதிகள் எங்கும் என்றும் ஒரே வகையாக இயங்கும்.

24. பருப் பொருளாக இருப்பன நுண்பொரு ளாக மாறும்.

25. பருப் பொருளிலும் நுண்பொருளுக்கு ஆற்றல் மிகுதி.

26. எண்ணங்களுக்கு ஆற்றலும் பயனும் உண்டு.

27. எண்ணங்களுக்கு ஏற்பப் பயன் நிகழும்.

28. இடம் எல்லையற்றது.

29. காலம் முடிவில்லாதது.

30. மனம் என்பது ஒரு சடப்பொருளே.

31. ஒரு பொருளின் தோற்றத்திற்கு முதல்—துணை—நிமித்தம் என மூன்று காரணங்கள் உண்டு.

32. உள்பொருள் காணப்பட வேண்டும் என்ற நியதி இல்லை.

33. காணப்படாத அருவப் பொருளுக்கும் உருவம் உண்டு.

என்பன போன்ற, எத்தனையோ பல அறிவியல் உண்மைகளைச் சைவசித்தாந்த நூல்கள் தகவுற விளக்கிச் செல்கின்றன!

---

(3) "The unique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 categories. This exposition is no mere metaphysical speculation but is a purely logical account on scientific principles."

—Theos Bernard.

சைவ சித்தாந்தம் கூறும் ''சார்ந்ததன் வண்ணமாம் தன்மை'' பற்றிப் பேராசிரியர் ஹென்றி டிரம்மாண்டு (Henry Drummond) ''ஆன்மிக உலகில் இயற்கையின் சட்டம்'' (Natural Law in the Spiritual World) என்னும் தம்முடைய நூலில் விளக்கியுள்ளார்.

இங்ஙனமே,

''ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐயனே யென்றுன் அருள்வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாதனே உனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காயமா யத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவதந் தேவர் பிரானே
திருப்பெருந்துறை மேவிய சிவனே''

எனத் திருவாசகத்தில் மணிவாசகர் பாடுவதற் கேற்ப, மக்களில் தலைவர்கள் போலத் தேவர் களிலும் தலைவர்கள் உள்ளனர் என்றும், அவர் கள் இறையருள் ஆற்றலால் உலகங்களை முத் தொழிற்படுத்துவர் என்றும், சர். ஆலிவர் லாட்ஜ் என்னும் பேரறிஞர், 'மனிதனும் பேரு லகமும்' (Man and Universe) என்னும் நூலில் விளக்குகின்றார்.

''எருவிடும் வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரல் கீழே
உருவிடும் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடும் சோதி கலந்துநின் றானே''

என்று, சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோ ராகிய திருமூலர் முதலிய அருளாளர்கள் கூறு வது போலவே, வில்லியம் ஜேம்ஸ் என்னும் அமெரிக்க நாட்டுத் தத்துவ உளநூற் பேரறி ஞர், கதிரொளி முடிச்சு (Solar Plexus) என்னும் மூலஅடி மூளையை இயக்கிப் பயன் படுத்தும் முறை பற்றி விவரிக்கின்றார். எட் மண்ட் கர்னி, மயர்ஸ், பாட்மோர், எட்வர்ட் கேயர்ட் முதலிய அறிவியற் பேரறிஞர்கள், பாவனையின் பயன்களையும், உருவ வழிபாட்டின் இன்றியமையாமையையும் பெரிதும் வலியுறுத்தி உள்ளனர். சார்லஸ் ஜான்ஸ்டன், தியோஃபைல் பாஸ்கல் முதலிய எத்தனையோ பல அறிவியலறி ஞர்கள், முற்பிறவி பிற்பிறவிகள் உண்டு என்ப தனைக் கண்டறிந்து மெய்ப்பிக்கின்றனர்.

உலகம் முழுவதும் நடராச வடிவத்தின் நலனை வியந்து, இந்நாளில் எல்லா நாட்டினரும் புகழ்ந்து போற்றுகின்றனர். இங்ஙனமே பெண் கூறும் ஆண் கூறுமாக ஒருசேரப் பிரிவின்றி இயைந்து நிற்கும் அம்மையப்பர் (அர்த்த நாரீ சுவரர்) பற்றிய தத்துவ நுட்பம், அனைவராலும் ஏற்றுப் போற்றப்படுகின்றது. நமது சோமா ஸ்கந்த வடிவம், தந்தை—மைந்தன்—தூய ஆவி என்னும் கிறிஸ்தவ சமயத் திரித்துவக் கொள் கைக்கு (Trinity) ஏற்றதாகத் திகழ்கின்றது. ஆலமர் செல்வர் ஆகிய தட்சிணா மூர்த்தியின் திருவுருவம், பிரம்ம ஞான சபையினரால் (Theosophists) ஏற்றுத் தழுவிக் கொள்ளப்பட் டுள்ளது. இன்னோரன்ன செய்திகள் பலவும், நம்முடைய சைவ சித்தாந்தத் தத்துவக் கொள் கையானது, அறிவியல் நெறியோடு முரண்படா மல், இணைந்து பிணைந்து செல்லும் இயல்பினைத் தெளிவுறுத்துவனவாகும். (4)

உலகளாவிய உயர்நெறி :

நம்முடைய தமிழ் நெறி விளக்கமாகிய சைவ சித்தாந்தக் கொள்கையானது, குறுகிய நோக்கும் போக்கும் கொண்டதாகாமல், விரிந்து பரந்த பெரு நோக்கு உடையதாய், உலகளாவிய (Universal) சமயமாகும். ''ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆல வாயில் உறையும் எம் ஆதியே'' எனத் திரு ஞான சம்பந்தரும், ''ஆதி பகவன் முதற்றே உலகு'' எனத் திருவள்ளுவரும், ''உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு பலர்புகழ்ஞாயிறு'' என நக்கீரரும், ''உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்'', ''மன்றுளார் அடியார் அவர் வான் புகழ் நின்றதெங்கும் நிலவி உலகெலாம்'' எனச் சேக்கிழார் பெருமானும், பிறரும் அருளிச் செய்திருத்தல், அவர்தம் விரிந்து பரந்த உலகப் பெரு நோக்கினை வெளிப்படுத்தும். சைவ சித்தாந்த சமயமானது, எந்த ஒரு சமயத் தையும் இகழ்ந்து ஒதுக்காமல், எத்தகைய பிணக்கும் பூசலும் இன்றி, எல்லாச் சமயங்களை யும் ஏற்றபெற்றி தழுவிப் போற்றிக் கொள்ளும் மாட்சிமை மிக்கதாகும்.

''ஓதுசமயங்கள் பொருள்உணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும்;இவற்றுள்
யாதுசமயம் பொருள்நூல் யாதிங் கென்னில்,
இதுஆகும் அதுஅல்லது எனும்பிணக்க தின்றி,
நீதியினால் இவைஎல்லாம் ஓர்இடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம், பொருள்நூல்;
ஆதலினால் இவைஎல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும்; அவையிரண்டும் அரனடிக்கீழ் அடங்கும்.''

எனவரும் சிவஞான சித்தியார் (8 : 13) செய்யு ளால், இவ்வுண்மை செவ்விதில் தெளியப்படும்.

சைவ சித்தாந்த சமயமானது, எந்தச் சமயத்தினையும் இகழாமல், ஏற்ற பெற்றி சோபான முறையில் எல்லாவற்றையும் தழுவிப் போற்றி நிற்கும் தன்மையினை, ''முத்தியை முற்ற வைத்தார் முறை முறை நெறிகள் வைத் தார்'' எனவரும் திருநாவுக்கரசர் திருமொழி யாலும் உணரலாம். மற்றும் நம் சுந்தர மூர்த்தி சுவாமிகள், ''அப்பாலும்அடிச்சார்ந் தார் அடியார்க்கும் அடியேன்'' என்று அருளிச் செய்ததும் ; அதன் நுண்பொருட் கருத்தினை ஆசிரியர் சேக்கிழார் பெருமான், ''மூவேந்தர்

(4) " The recent developments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculiar only to the Saiva Siddhanta and not to any other religion or philosophy, ancient or modern."

—*Maraimalai Adigal.*

தமிழ் வழங்கும் நாட்டிற்கு அப்பால், முதல்வனுர் அடிச்சார்ந்த முறைமையோரும், நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையிற் கூறும் நற்றெண்டர் காலத்து முன்னும் பின்னும், சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந்தோரும், செப்பிய அப்பாலும் அடிச்சார்ந்தார் தாமே'' என்று விளக்கியிருப்பதும், இங்கு நாம் கருதியுணர்ந்து இன்புறற் பாலனவாகும்.

ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே
—திருமூலர்.

வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே! நின் விளையாட் டல்லால்,
மாறுபடும் கருத்தில்லை; முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல், வயங்கிற்று அம்மா!
—தாயுமானவர்.

நடைமுறைக்கு இயைந்தது :

உலகிற் பல தத்துவக் கொள்கைகள் மக்கட் சமுதாய வாழ்வின் நடைமுறைக்கு ஏற்ப அமையாமல் இருப்பதுண்டு. சமயங்கள் பெரும்பாலும் இம்மை வாழ்வியலைத் தழுவாமல், மறுமைப் பயனியலையே எதிர்நோக்கி மருள்நோக்கு உடையனவாக (Unworldly & otherworldly; Pessimism) அமைந்துள்ளன என்று, அறிஞர்கள் பலர் குறை கூறுவதுண்டு. சைவசித்தாந்தம் அத்தகைய குறையுடையது அன்று. ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை'' எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரம், இங்கு நாம் எண்ணி எண்ணி மகிழ்ந்து பெருமிதம் கொள்ளுவதற்குரிய சிறப்புடையதாகும். ஆதலின் சைவ சித்தாந்தம் எனும் நமது தமிழ்நாட்டுத் தமிழ்நெறிப் பண்பாட்டுக் கொள்கையானது, இம்மை வாழ்க்கை நெறிக்குப் பெரிதும் இயைந்து நிற்ப தொன்றேயாகும். நமது முன்னைத் தமிழ்ப் பெருஞ் சான்றேர்களின் பண்பாட்டு வாழ்க்கை நெறியே, சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையாக முகிழ்த்து அரும்பி மலர்ந்து மணம் கமழ்ந்து பூத்துக் காய்த்துக் கனிந்து விளங்குகின்றது.

உலகியலொடு தழுவியது :

சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றேராகிய அருள்நந்திசிவம், சமய தத்துவக் கொள்கைகள், மக்களின் நடைமுறை வாழ்வில் பிரிவற ஒன்றிச் செயற்படுத்தப் பெறுதல் வேண்டும் என்னும் கோட்பாடு உடையவர். சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்று இல்லாமல், ''சமயமே வாழ்க்கை, வாழ்க்கையே சமயம்'' என்னும் நிலையில் அமைதல் வேண்டும் என்பது, அவர்தம் அருள் உள்ளம்! ஆதலின் சமய வாழ்வில் தலைப்பட விரும்பும் தக்கோர் அனை வரும், பின்வரும் பதினறு இயல்புகளை இயல்பாக உடையவராதல் வேண்டும் என்று குறிப்பிட்டு அருளுகின்றார்.

1. உயர்ந்தாரோடு பொருந்த நடத்தல்.

2. யாவரிடத்தும் அன்பாகப் பழகுதல்.

3. எளியாரிடத்தும் சிற்றுயிர்கள் மாட்டும் இரக்கம் கொள்ளுதல்.

4. உலக இயற்கை அறிந்து அதற்கு ஏற்ப நடந்து கொள்ளும் திறம்.

5. யாவர் இடத்தும் இன்முகம் காட்டி இன்சொற் கூறி நலம் புரியும் தன்மை.

6. எல்லோரையும் அன்பினல் இனியதொடர்புடையவர்களாகச் செய்து கொள்ளும் உயரிய பண்பு.

7. நல்ல பண்புகள் பலவும் அமைந்து விளங்குதல்.

8. ஐம்பொறியடக்கல், நல்லன கடைப்பிடித் தொழுகுதல்.

9. தக்கோர்க்குத் தக்கபடி இயன்றன கொடுத்து உதவி புரியும் இயல்பு.

10. அறிவும் அகவையும் அநுபவமும் முதலிய வற்றல் மூத்தவர்களிடம் பணிவு தோன்ற ஒழுகுதல்.

11. எவர் மாட்டும் செருக்கின்றி நயமாகக் கலந்து பழகி இனிது அளவளாவுதல்.

12. பிறன்மனை விழையாமை, பிறன் பொருள் வெஃகாமை முதலிய நற்பண்புகளைப் பெற்றுத் திகழும் பற்றற்ற உணர்வு.

13. உண்மை கடைப்பிடித்து வாழ்தல்.

14. மறந்தும் தீநெறிப்படாதமல், அறநெறியே போற்றி அடங்கி வாழ்தல்.

15. தக்கதுஇது தகாததுஇது என்று, பகுத்தறிந்து வாழவல்ல திறமுடைமை.

16. சான்றேர்களையும், சான்றேர்களின் கொள்கைகளையும் போற்றித் தழுவி, மன்னுயிர் நலங் கருதிப் பணியாற்றுதல்.

இவைகளும், இவைகளைப் போன்ற பிற பண்பொழுக்க நலங்களும் எல்லாம், நம் தமிழ் நாகரிகப் பண்பாடுகளேயாம் என்பது, சொல்லாமலே பெறப்படும். இத்தகைய தமிழ் நாகரிகப் பண்பாடுகளின் பயனும் சாரமுமே, சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையாக உருப்பெற்று வடிவெடுத்து அமைந்தன எனலாம். பின்வரும் பாடலில் இவைகள் சுட்டப் பெற்றிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

''ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம்
உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள்
வந்தித்தல் வணங்கல் வாய்மை

அழுக்கிலாத் துறவு அடக்கம்
அறிவொடு அர்ச்சித்தல் ஆதி
இழுக்கிலா அறங்கள் ஆனல்
இரங்குவான் பணி அறங்கள்''

—சித்தியார் 2: 23.

பரந்த நோக்கம் :

சமயங்கள் முற்போக்குணர்வுக்குத் தடை செய்வன என்றும், சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பன என்றும், மக்கள் வாழ்வியலைப் பல வகைக் கட்டுப்பாடுகளால் முடக்கிவிடுவன என்றும், ஒரு சிலர் குறை கூறுவதுண்டு. சைவ சித்தாந்தம் அத்தகைய குறைபாடுகளை உடையதன்று.

''தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா, இன்று
தோன்றுவன எனும் எவையும் தீதாகா''

என உமாபதிசிவம், தமது சிவப்பிரகாசம் எனும் நூலில் முழங்கியிருத்தல், சைவசித்தாந்த சமயம் முற்போக்குணர்வுக்குத் தடை செய்வதோ, சீர்திருத்தச் செயல்களை எதிர்ப்பதோ அன்று என்பதனைத் தெளிவுறுத்தும்.

''எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்''

எனச் சேக்கிழார் பெருமான், பெரியபுராணத்தில் அருளிச் செய்திருத்தல் ஒன்றே, சைவ சித்தாந்தம் எத்தகைய விரிவான சிறந்த நல்ல பெருநோக்குடைய சமயம் என்பதற்குச் சான்று பகரும்.

''சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமும்குல மும்கொண்டென் செய்வீர்?
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக் குள் அருளும் மாற் பேறரே'' (1)

''யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே'' (2)

என்பனபோல வரும் அருளுரைகள், சைவ சித்தாந்தம் எத்தகைய இனிய எளிய நன்னெறி என்பதனை நன்கினிது புலப்படுத்தும்.

எல்லோருக்கும் ஏற்றது :

சைவ சித்தாந்தம் எல்லாச் சமயங்களையும் ஏற்றபெற்றி இசைந்து ஏற்பது; எதனையும் இகழ்ந்து ஒதுக்காமல், இனிது அணைத்துத் தன்னுட் பொதிந்து கொள்வது; உலகம் முழுவதற்கும் ஏற்புடைய மனிதகுலச் சமயமாகத் திகழ்வது; வேறு பிற எந்தச் சமயத்தின் வளர்ச்சியையும் அஃது எதிர்க்கக் கருதுவதில்லை. ஏன் எனில், பிற எல்லாச் சமயங்களையும் தன்னோடு அணைத்துத் தழுவிப் போற்றிக் கொள்வதில் அதற்கு இடர்ப்பாடு ஏதுமில்லை. ஒவ்வொருவருடைய உள்ளத்திற்கும் நிறைவு அளிக்கத் தக்க வகையில், அது சால்புமிக்கு விளங்குகின்றது. பல்வேறு மனித இயல்பிற்கும் ஒழுக்கத்திற்கும் ஏற்புடையதாகச் சைவ சித்தாந்தம் தன்னை ஆக்கிக் கொள்ளவல்லதாக உள்ளது.

நுண்பொருள் தத்துவ அறிஞர்களுக்குரிய ஆன்மீக அருவக் கூறும், கவிதையுணர்வும் கற்பனைத் திறனும் மிக்கவர்களுக்குரிய நடைமுறைப் பருவடிவக் கூறும், அமைதியை நாடும் தனிமை விரும்பிகளுக்குரிய சாந்தி நலம் மிக்க சிந்தனைக் கூறும், ஒரு சேர வாய்ந்ததாகத் தலைசிறந்து விளங்குகிறது'' எனப் பொதுவகையில் இந்து மதம் பற்றிச் சர் மானியர் வில்லியம்ஸ் என்னும் பேரறிஞர் கூறுவது, நம்முடைய சைவ சித்தாந்தத்திற்கும் சாலப் பொருந்தும் எனலாம்.(5)

முடிவுரை :

இத்தகைய பல பெருஞ் சிறப்புக்களையுடைய நம்முடைய சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையானது, ஆயுந்தோறும் அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாக அமைந்து விளங்குகின்றது. ''ஆர் அறிவார் இந்த அகலமும் நீளமும்'' எனத் திருமூலர் பாடுவதுபோல, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழியின் அகலமும் நீளமும் ஆழமும் ஆய்ந்து இன்புற விழைவோர் அனைவரும், சைவத் திருமுறைகளையும், சைவசித்தாந்த சாத்திரங்களையும் புறக்கணித்து ஒதுக்காமல், விரும்பிக் கற்று மகிழும் கடப்பாடு உடையவராவர். இம்மை வாழ்வில் இதனின் மிக்க இன்பப் பேறு பிறிது ஒன்றில்லை எனத் துணிந்து கூறலாம். ஜான் மில்ட்டன் என்னும் ஆங்கிலப் பெருங் கவிஞர் பாடுவது போல,

''எத்தகை இன்ப ஊற்றாய்
இறையருள் நூல்கள் உள்ள!
அத்தகை யவற்றை அந்தோ
அறிவிலார் கடினம் என்பர்!

---

(5) "A characteristic of Saiva Siddhanta is its receptivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embracing arms and ever-widening fold.

And in real truth, Saiva Siddhanta has something to offer which is suited to all minds. Its every strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has highly spiritual and abstract side suited to the meta physical philosophy, its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion."

—Sir Monier Williams

வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல் இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென மிளிரும் நன்றே''

தமிழாக்கம்—ந.ரா.மு. (6)

என்று நாமும் நமது சைவ சித்தாந்தம் பற்றிப் பாடி மகிழலாம். கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானியாகிய தேல்சு(Thales) என்பார், தாம் ஒரு விலங்காக அல்லாமல் மனிதனுகவும், பெண்ணுக அல்லாமல் ஆணுகவும், கானகனுக அல்லாமல் கிரேக்கனுகவும் பிறந்ததற்குப் பெருமிதம் கொண்டு மகிழ்கின்ருர். அதுபோல, நாமும், ''நரர்பயில் தேயம் தன்னில் நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து'' தமிழராகவும், சைவராகவும், சைவசித்தாந்தச் செந்நெறியாளராகவும், பிறக்கப் பெற்றமை குறித்துப் பெருமிதம் கொண்டு மகிழலாம்.

''மனிதனுய், ஆணுய்க், கிரேக்கனுய்ப் பிறந்த
மாட்சிமைக்கு, அறிஞர்தாம் ஒருவர்
நனிமிக மகிழ்ந்தார்; நலம்மிகு தமிழன்,
நற்சைவன், சைவசித் தாந்தி
என இவண் பிறந்த இனியநற் பேற்றை
எண்ணி, நாம் இறையருள் வழுத்தித்
துனியறு சைவச் செந்தமிழ் வளர்க்கும்
தொண்டுகள் செய்துநன் றுய்வாம்''

தமிழாக்கம்—ந.ரா.மு. (7)

---

(6) " How charming is divine philosophy !
Not harsh and crabbed as dull fools supposel
But musical as is Apollo's lute.
And a perpetual feast of nectar'd sweets
Where no crude surfe it reigns "

—John Milton, Comus.

(7) " The three blessings for which I am grateful to Fortune are first that I was born a human being and not one of the brutes ; second that I was born a man and not a woman; third that]I was born a Greek and not a barbarian "

—Thales in Piogenes Laertes's Thales.

158629

நல்ல கவிதை !

நல்ல கவிதை என்பதுதான்,
தூய ஞானச் சான்ருேர்பால்,

எல்லை யிலாநுண் புலமையினுல்,
இனிய உணர்ச்சிப் பெருக்கதனுல்,

சொல்லிற் பொருளிற் சிறந்தோங்கி,
நினைக்கும் தோறும் சுவைதுளும்பி,

வல்ல இறைவன் அருட்கொடையாய்,
வளம்சி றப்ப மலர்ந்துநிற்கும் !

—ந. ரா. முருகவேள்

நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்

''திருவருட் பிரகாச வள்ளலார்''
அருட்டிரு இராமலிங்க அடிகளார்

சூரியோதயத்திற்கு முன் நித்திரை எழுந்து விபூதி தரித்துச் சிறிதுநேரம் உட்கார்ந்து கடவுளைத் தியானஞ் செய்தல் வேண்டும். பின்பு களிப்பாக்கு மிகுதியாகவும், வெற்றிலை சுண்ணாம்பு குறைவாகவும் போட்டுக் கொண்டு முன் ஊறுகின்ற ஜலத்தை உமிழ்ந்து பின்ஊறுஞ் ஜலத்தையெல்லாம் உட்கொள்ள வேண்டும். பின்பு எழுந்து உள்ளே சற்றே உலாவுதல் வேண்டும். பின் மலஜல உபாதைகளைக் கழித்தல் வேண்டும். மலங் கழிக்கின்றபோது வலதுகையால் இடது பக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். ஜலங் கழிக்கும்போது இடதுகையால் வலதுபக்கம் அடிவயிற்றைப் பிடித்திருத்தல் வேண்டும். மலமாவது ஜலமாவது பற்றறக் கழியும் வரையில் வேறு விஷயங்களைச் சிறிதும் நினையாமல் மலசல சங்கற்பத்தோடு இருக்க வேண்டும். மலம் பின்னுந் தடைபடுமானால் இடது பக்கமாகச் சற்றே படுத்துப் பிராணவாயுவை வலத்தே வரும்படிச் செய்துகொண்டு மலசங்கற்பத்தோடு மல உபாதி கழித்தல் வேண்டும். ஜலம் தடைப்பட்டால் வலதுபக்கமாகச் சற்றேபடுத்துப் பிராணவாயுவை இடதுபக்கம் வரும்படிச் செய்துகொண்டு ஜலசங்கற்பத்தோடு ஜல உபாதி கழித்தல் வேண்டும்.

மலஜல உபாதை கழிந்தபின் செவிகள் கண்கள் நாசி வாய் தொப்புள் இவைகளில் அழுக்கு பீளை சளி ஊத்தை என்கின்ற அசுத்தங்களையும், கை கால் முதலிய உறுப்புக்களிலுள்ள அழுக்குகளையும் வெந்நீரினால் பற்றறத் துடைத்தல் வேண்டும். பின் வேலங்குச்சி, ஆலம்விழுது இவைகளைக் கொண்டு பல்லழுக்கெடுத்து அதன் பின் கரிசலாங்கண்ணித் தூள்கொண்டு உள்ளே சாரம்போகும்படி பல்லில்தேய்த்து வாயலம்பின பின்பு, பொற்றலைக்கையாந்தகரையிலை, அல்லது கரிசலாங்கண்ணியிலை ஒருபங்கு, தூதுளையிலை, முசுமுசுக்கையிலை கால்பங்கு, சீரகம் கால்பங்கு இவைகளை ஒன்றாகச் சேர்த்து சூரணமாகச் செய்துகொண்டு அதில் ஒருவராகன் எடையை ஒரு சேர் நல்ல சலத்திற்போட்டு அதனுடன் ஒருசேர் பசுவின்பால் விட்டுக் கலந்து, அதிலுள்ள ஒருசேர் ஜலமுஞ் சுண்டக் காய்ச்சி, அந்தப் பாலில் நாட்டுச் சர்க்கரை கலந்து சாப்பிடல் வேண்டும்.

காலையில் இளவெய்யில் தேகத்திற்படாதபடி பொழுது விடிந்து 5 நாழிகை பரியந்தம் உடம்பைப் போர்வையோடு காத்தல்வேண்டும். பின்பு வெய்யிலில் நெடுநேரம் தேக மெலிவு வரத்தக்க உழைப்பையெடுத்துக் கொள்ளாமல் இலேசான முயற்சியில் சிறிது வருத்தந்தோன்ற முயலுதல் வேண்டும். பின் இள வெந்நீரில் குளித்தல் வேண்டும். விபூதி தரித்துச் சிவசிந்தனையோடு சிறிது நேரம் இருத்தல் வேண்டும். பசி கண்டவுடன் தடைசெய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும். ஆகாரங் கொடுக்கும்போது மிகுந்த ஆலசியமுமாகாது. மிகுந்த தீவிரமுமாகாது. முதற்பட்சம் சீரகச்சம்பா அரிசி, அன்றிப் புன்செய் விளைவும், காரரிசியுந் தவிர நேரிட்ட அரிசியின் வகைகள் ஆகும். அது சாதமாகும்போது அதிக நெகிழ்ச்சியுமாகாது, அதிக கடினமும் ஆகாது, நடுத்தரமாகிய சோற்றை அக்கினி அளவுக்கு அதிகப்படாமலும் குறைவுபடாமலும்அறிந்துண்ணுதல் வேண்டும். ஆயினும் ஒருபிடி குறைந்த பட்சமே நன்மை.

போஜனஞ் செய்த பின்னர் நல்ல நீர் குடித்தல் வேண்டும். அந்த நல்ல நீரும் வெந்நீராதல் வேண்டும். அதுவும் அதிகமாகக் குடியாதிருத்தல் வேண்டும். கிழங்கு வகைகள் உண்ணாமல் இருக்க வேண்டும். அவற்றில் கருணைக்கிழங்கு மாத்திரம் கொள்ளுதல் கூடும். பழவகைகள் உண்ணாதிருத்தல் வேண்டும். அவற்றில் பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப் பழம் இவை நேர்ந்தால் சிறிது கொள்ளுதல் கூடும். பழைய கறிகளைக் கொள்ளாதிருத்தல் வேண்டும். பதார்த்தங்களில் புளி மிளகாய் சிறிதே சேர்க்க வேண்டும். மிளகு சீரகம் அதிகமாகச் சேர்க்க வேண்டும். கடுகு சேர்ப்பது அவசியமல்ல. உப்பு குறைவாகவே சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அன்றி எந்த வகையிலும் உப்பு மிகுதியாகக் கொள்ளாமல் உபாயமாகக் கொள்ளுவது தேகம் நீட்டிப்பதற்கு ஏதுவாம். தாளிப்பில் பசுவெண்ணெய் நேரிட்டால் தாளிக்க வேண்டும். நேராதபட்சத்தில் நல்லெண்ணெய் சிறிது சேர்க்கவுங்கூடும். வெங்காயம் வெள்ளைப்பூண்டு சிறிதே சேர்க்கவேண்டும். கத்தரிக்காய், வாழைக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், பீர்க்கங்காய், கலியாணப்பூசுணைக்காய், புடலங்காய், தூதுளங்

காய், கொத்தவரைக்காய் இவைகள் பதார்த்தஞ் செய்தல் கூடும். இவற்றினுள் முருங்கை, கத்தரி, தூதுளை, பேயன் வாழைக்காய் இவைகள் அடுத்தடுத்துக் கறிசெய்து கொள்ளலாம். மற்றவைகள் ஏகதேசத்தில் செய்து கொள்ளலாம். வடை, அதிரசம், தோசை, மோதகம் முதலிய அப்பவர்க்கங்கள் கொள்ளப்படாது. ஏகதேசத்தில் சிறிது கொள்ளவுங்கூடும். சர்க்கரைப் பொங்கல், ததியோதனம், புளிச்சாதம் முதலிய சித்திரான்னங்கள் கொள்ளப்படாது. ஏகதேசத்தில் சிறிது கொள்ளலாம். புளியாரைத் துவையல் தினந்தோறும் கிடைக்கினும் மிகவும் நன்று. கரிசலாங்கண்ணிக்கீரை, துளைக்கீரை முன்னைக்கீரை, பசலைக்கீரை, முருங்கைக்கீரை, இவைகளைப் பருப்போடு சேர்த்தும், மிளகோடு சேர்த்தும், புளியிட்டும், தனித்தும் கறிசெய்து கொள்ளக்கூடும். மற்றைக் கீரைகள் ஏகதேசத்தில் நேரில் சிறிது கொள்ளக்கூடும். புளித்த தயிர் சேர்த்தல் கூடும். பருப்பு வகைகளில் முளைகட்டாத துவரம்பருப்பு அல்லது முளை கட்டின துவரம்பருப்பு, மிளகு சேர்த்துக் கடைதல், துவட்டல், துவையல் செய்தல், குழம்பிடல், வேறொன்றில் கூட்டல் முதலியவாகச் செய்து நெய்சேர்த்துக் கொள்ளுதல் கூடும். அந்த நெய்யை மிகவுஞ் சேர்க்கப்படாது. மற்றப் பருப்பு வகைகள் அவசியமல்ல. ஏகதேசத்தில் நேர்ந்தால் கொள்ளவுங்கூடும்.

சுக்கைச் சுண்ணாம்பு தடவிச் சுட்டு மேல முக்கைச் சுரண்டிப் போட்டுச் சூரணமாக்கி வைத்துக் கொண்டு, நல்ல சலத்திற் கொஞ்சம் போட்டு, 5 பங்கில் 4 பங்கு நீர்சுண்ட 2 பங்கு நீர் நிற்கக் காய்ச்சி அதைத் தாகங்கொள்ளுதல் வேண்டும். நேராத பட்சத்தில் வெந்நீராவது கொள்ளல் வேண்டுமேயன்றிக் குளிர்ந்த ஜலங் கொள்ளப்படாது. எந்தப் போஜனத்திலும் புலால் எந்த வகையிலும் புசிக்கப்படாது. எப்படிப்பட்ட போஜனமாயினும் சிறிது குறையவே புசித்தல் வேண்டும். எந்தக் காலத்திலும் பசித்தாலல்லது எந்த வகையிலும் போஜனஞ் செய்யப்படாது. வாத பித்த சிலேத்துமங்கள் அதிகரிக்கத்தக்க போஜனங்களை அறிந்து விட வேண்டும்.

பகலில் போஜனஞ் செய்தவுடன் சற்றே படுத்தெழுந்தல்லது வேறு காரியங்களிற் பிரவேசிக்கப்படாது. ஆயினும் நித்திரை வரும்படி படுக்கப்படாது. பகலில் எந்த வகையிலும் நித்திரையாகாது. சிறிது படுத்து எழுந்தபின் பாக்கு வெற்றிலையும் குறைவாகவும் சுண்ணாம்பு சிறிது அதிகமாகவும் தாம்பூலம் பஞ்சவாசங்களோடு தரித்து முதலில் ஊறிய ஜலத்தைப் புறத்தில் உமிழ்ந்து விட்டுப் பின்பு ஊறுஞ் சலத்தை உட்கொள்ள வேண்டும். பகற்போஜனஞ்செய்த சுமார் ஏழரை நாழிகைக்குப் பின்பு பேயன் வாழைப்பழம், ரஸ்தாளி வாழைப்பழம், பங்காள வாழைப்பழம் சிறிது சர்க்கரை சேர்த்து நேர்ந்தால் சாப்பிடக்கூடும். காலையில் பால் சாப்பிடும்போது பசி அதிகரித்திருந்தால் இந்தப் பழங்களில் நெய் சர்க்கரை கலந்து சிறிது சாப்பிடக்கூடும். பகலில் பெண்கள் தேக சம்பந்தங்கூடாது. பகற்போஜனஞ் செய்தபின் சற்று நேரங் கடவுளைத் தியானித்திருக்க வேண்டும். அதன்பின் எந்த வேலை செய்யினுந் தேககரணங்களுக்கு மெலிவு உண்டு பண்ணுகிற வேலைகளாகச் செய்யப்படாது. செய்யினும் சிறிது சிறிதாகச் செய்தல்வேண்டும்

சாயங்கால வெய்யில் தேகத்திற்படும்படி சிறிது உலாவுதல் வேண்டும். காற்று மிகுந்தடிக்கின் அப்போது உலாவப்படாது. அன்றி, கடின வெய்யில், பனி, மழை இடிஇவைகள் தேகதிற்படும் படி உலாவப்படாது.

இராத்திரி முன்பங்கில் தேகசுத்தி செய்து, விபூதி தரித்துச் சிவத்தியானஞ் செய்தல், தோத்திரஞ் செய்தல், சாத்திரம் வாசித்தல், உலகியல் விவகாரஞ் செய்தல் இவை முதலியவை கூடும். பின் போஜனஞ் செய்தல் வேண்டும். இராப்போஜனம் பகற் போஜனத்தைப் பார்க்கிலும் அற்பமாகப் புசித்தல் வேண்டும். இரவில், தயிர், கீரை, வாயுவான பதார்த்தம், குளிர்ச்சியான பதார்த்தம் சேர்க்கப்படாது. சூடான பதார்த்தங்களையே அறிந்து சேர்க்க வேண்டும். அவை சிறுகத்தரி, முருங்கை, வற்றல் முதலியனவாம். இரவில் போஜனஞ் செய்தபின் சிறிது உள்ளே உலாவுதல் வேண்டும். பின்பு சிவத்தியானம் முதலியவை செய்தல் வேண்டும். சுமார் 12 நாழிகைக்கு மேல் காலைக்குச் சொல்லியபடியாவது, தனித்தாவது பசுவின்பாலை நன்றாகக் காய்ச்சிப் புசித்தல் வேண்டும். பின் சிலநேரஞ் சென்று சுமார் பதினைந்து நாழிகையில் பாக்கும் சுண்ணாம்பும் மிகவுங் குறைய வெற்றிலை மிகவும் அதிகப்படக் கலந்து பஞ்சவாசத்தோடும் போட்டுக் கொண்டு முதற் சலத்தை உமிழ்ந்து பின்வருஞ் ஜலத்தை உட்கொண்டு திப்பியை உமிழ வேண்டும். மற்ற வேளையும் திப்பியை உமிழுதல் அவசியம்.

சுரோணிதப் பையிடத்தில் மூன்று மணி சேர்ந்த கொத்து (1), வலதுபுறத்திலும், நான்குமணி சேர்ந்த கொத்து (1), இடது புறத்திலும் இருக்கின்றது.

சுரோணித சுக்கிலங்கலந்து கர்ப்பந்தரிக்கிற காலத்தில் மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் ஆண் குழந்தையும், நான்கு சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந்தையும் பிறக்கும். புணர்ச்சிக் காலத்தில் வலதுபுறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆணும், இடதுபுறம் சாய்வாகப் புணர்ந்தால் பெண் குழந்தையும் பிறக்கும்.

ஆண் பிள்ளைப் பருவம் 5. சைசவம்-5வயது வரையில். வாலிபம்-15 வயது வரையில். கௌமாரம் 30 வயது வரையில். யௌவனம் 40 வயது வரையில். வார்த்திபம் 41 வயதுக்கு மேல்.

பெண் பிள்ளைப் பருவம் 7. பேதை 7 வயது வரையில். பெதும்பை-11 வயது வரையில். மங்கை-14 வயது வரையில். மடந்தை-19 வயது வரையில். அரிவை-26 வயது வரையில். தெரிவை-32 வயது வரையில். பேரிளம் பெண்-40 வயது வரையில். இதற்கு மேல் விருத்தை.

ஆணுக்குள் பெண்ணும், பெண்ணுக்குள் ஆணும் என்பதெவ்வாறெனில், பிருதுவி அப்பு, தேயு, வாயு, ஆகாசம் பிரதிருதி ஆன்மா என்னும் ஏழும் கூடிச் சுக்கிலச் சுரோணிதமாய்ச் சப்ததாதுவாகச் சிருஷ்டிக்குக் காரணமாய் இருப்பதாலால் ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணுமாய் இருப்பது உண்மை. உருவ பேதத்தால் பெண் ஆண் என்பது பொய். பெண் ஆண் என்னும் நாமபேதம் வருவானேன்? அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் ஆன்ம அறிவு, ஆண், ஜீவ அறிவு பெண், ஆன்ம அறிவென்பதும், ஜீவ அறிவு என்பதும், புத்தி அறிவும்-மன அறிவுமாம். பிரத்யட்சானுபவம் யாது? புருஷ பாகம் மூன்றில் ஆகாசத்தில் பிருதிவியும், பெண்பாகம் நான்கில் பிருதுவியினிடத்தில் ஆகாசமும் தோன்றி பெண் ஆணுகியும், ஆண் பெண்ணுகியுமாகிய ஞாயம்.

சுக்கிலம் 3 வகை. விராகன் எடை 2.5 இருக்கும். அதில் விஷபாகம் (1). சாதாரண பாகம் (1) அமுதபாகம், ( ). ஆகபாகம் இரண்டரை. இதுபோலவே ஸ்திரீகளுக்கும் சுரோணிதமிருக்கும். சுக்கில சுரோணிதத்தின்மேல் கடவுள் ஆவி உருவாய் இருப்பர். தேக சம்பந்த காலத்தில் விஷபாகம் வெளிப்பட்டால் தேக நஷ்டம். சாதாரணபாகம் வெளிப்பட்டால் வியாதி. அமுதபாகம் வெளிப்பட்டால் சந்தானவிருத்தி. இந்த ஞாயத்தால் சதா தேக சம்பந்தஞ் செய்தாலும் சந்தான விர்த்தி ஏக தேசம்.

பெண்களுடன் தேகசம்பந்தம் செய்ய வேண்டில் முன் ஒரு நாழிகை பரியந்தம் மனத்தைத் தேக சம்பந்தத்தில் வையாது வேறிடத்தில் வைத்துப் பின் சம்பந்தஞ் செய்தற்குத் தொடங்கல் வேண்டும். தொடங்கியபோது அறிவு விகற்பியாமலும், மன முதலிய கரண சுதந்தரத்தோடு தேகத்திலும் கரணங்களிலுஞ் சூடுதோன்ருமல் இடதுபுறச் சாய்வாகத் தேக சம்பந்தஞ் செய்தல் வேண்டும். புத்திரனைக் குறித்த காலத்தன்றி மற்றக் காலங்களில் சுக்கிலம் வெளிப்படாமலிருக்கத்தக்க உபாயத்தோடு தேக சம்பந்தஞ் செய்தல்வேண்டும். அவ்வுபாயமாவது பிராண வாயுவை உள்ளேயும் அடக்காமல், வெளியேயும் விடாமல் நடுவே உலாவச் செய்து கொள்ளுதலாம். ஒரு முறையன்றி அதன்மேலுஞ் செய்யப்படாது. தேக சம்பந்தஞ் செய்தபின் தேகசுத்தி செய்து திருநீறணிந்து சிவத்தியானஞ் செய்து பின்பு படுக்க வேண்டும்.

படுக்கும்போது இடதுகைப் பக்கமாகவே படுத்தல் வேண்டும். எந்தக் காலத்தில் எது குறித்துப் படுத்த போதிலும் இடது பக்கமாகவே படுத்தல் வேண்டும். பின்பு ஏழரை அல்லது 10 நாழிகையளவு நித்திரை செய்தல் வேண்டும். அதன்பின் விழித்துக் கொண்டு நல்ல சிந்திப்புடனிருத்தல் வேண்டும். இரவில் தேகசம்பந்தம் 4 தினத்திற்கொரு விசை செய்தல் அதகமட்சம். 7 தினத்திற்கொரு விசை செய்தல் மத்திமபட்சம். 15 தினத்திற்கொரு விசை செய்தல் உத்தமபட்சம். அதன் மேற்படில் சுக்கிலம் ஆபாசப்பட்டுத் தானே கழியும் 5 தினத்திற்கொரு விசை செய்யில் சுக்கிலம் நெகிழ்ச்சிபட்டுச் சந்ததி விருத்தியைக் கெடுக்கும். ஆதலில் அதமபட்சமாயிற்று. இரவில் சொப்பனம் வராது மிருதுவாகவே நித்திரை செய்து விழித்துக் கொள்ளல் வேண்டும்.

எப்போதும் பயத்தோடிருக்கப்படாது. பரிச்சேதம் பயமில்லாமலிருக்கவும்படாது. எப்போதும் மனவுற்சாகத்தோடிருக்க வேண்டும். கொலை கோபம் சோம்பல் பொய்மை பொருமை கடுஞ்சொல் முதலிய தீமைகள் ஆகா. உரத்துப் பேசல், வேகமாக நடத்தல், ஓடிநடத்தல், வழக்கிடல், சண்டையிடல் கூடா எந்தவிதத்திலும் பிராண வாயு அதிகமாகச் செலவாகாமற்படி ஜாக்கிரதையோடு பழகுதல் வேண்டும்.

பொற்றலைக்கையாந்தகரையை உலர்த்தித் தூள் செய்து வைத்துக் கொண்டு அதை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சித் தலைக்கிட்டு 4 நாளைக்கு ஒருவிசை வெந்நீரில் முழுக வேண்டும். அன்றி வாரத்திற்கு ஒருவிசையாவது முழுகுதல் வேண்டும். தூளில்லாத பட்சத்தில் நல்லெண்ணெயைக் காய்ச்சியே முழுகுதல் வேண்டும். புகைக்குடி, கஞ்சாக்குடி, கட்குடி, சாராயக்குடி முதலியமயக்கக் குடிகளாகாது. மலஜலத்தை அடக்கப்படாது. சுக்கிலத்தைச் சிறிதும் வீணில் விடப்படாது. துன்மார்க்கப் பழக்கஞ் செய்யப்படாது: எந்த வேலை செய்யினும் எந்த விவகாரஞ் செய்யினும் சிவசிந்தனையோடு செய்து பழகுதல் வேண்டும்.

இந்தத் தேகத்தில் புருவமத்தியில் நமது ஆன்ம அறிவென்கிற கற்பூரத்தில் கடவுள் அருளென்கிற தீபம் விளங்குவதாகப் பாவித்துப் பார்த்து அதில் பழகிப் பழகிக் கடவுளிடத்தே உண்மையாகிய அன்பையும் ஜீவர்களிடத்தே உண்மையாகிய காருணியத்தையும் இடைவிடாமல் வைத்து ஓங்கார பஞ்சாட்சர ஞாபகஞ் செய்தல் வேண்டும். சிவ பஞ்சாச்சர ஞாபகஞ் செய்தல் வேண்டும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

தமிழ் நாட்டில் எத்துணையோ புலவர் பெருமக்கள் விளங்கி வந்திருக்கின்றனர். ஆயினும், அவர்களுள், எல்லாம் மிகவும் தலைசிறந்தவராகப் போற்றப் பெறுபவர் திருவள்ளுவரே யாவர். அவரைத் தமிழ் கூறும் நல்லுலகம் தெய்வப் புலவர் எனப் பெரிதும் போற்றிப் புகழ்ந்து பாராட்டி வருகின்றது.

தெய்வப் புலவர் :

திருக்குறளுக்குச் சிறந்த உரை வரைந்த ஆசிரியர் பரிமேலழகர், அதன் உரைப்பாயிரத்தில், ''ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறம் என எடுத்துக் கொள்ளப்பட்டது'' என எழுதுகின்றார்.

''சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்''

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் (சொல்—41), 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்' என்னும் தொடரை உதாரணமாகச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்ற—நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல். . .''

என நெஞ்சுவிடு தூது என்னும் சைவசித்தாந்த சாத்திர நூலில், உமாபதி சிவாசாரிய சுவாமிகள், திருவள்ளுவரின் தெய்வப் புலமையை வியந்து, அவர் தம் திருக்குறளையும் முழுவதாக மேற்கோளாக எடுத்தாளுகின்றார்.

அயல்நாட்டார் பாராட்டுரை :

திருவள்ளுவரை எல்லா நாட்டாரும், எல்லா மொழியாளரும், எல்லாச் சமயத்தினரும் பெரிதும் வியந்து மகிழ்ந்து தழீஇக் கொண்டாடுகின்றனர். திருவள்ளுவரின் சிறப்பு, இற்றை ஞான்று உலகெங்கணுமுள்ள அறிஞர்களிடையே ஓரளவு பரவிப் பெருகி வருகின்றது. உலகப் புகழ்பெற்ற பெருஞ் சான்றோர் ஆகிய ஆல்பெர்ட் சுவைட்சர் என்னும் பேரறிஞர், ''இத்துணைச் சிறந்துயர்ந்த மெய்யுணர்வு நிரம்பிய ஒரு நீதியுரைத் தொகுப்பு, உலக இலக்கியங்களில் யாண்டுமே இல்லை''(1) எனத் திருவள்ளுவரின் நூலைச் சிறப்பித்துப் புகழ்கின்றார் பேரறிஞர் திரு ஜி. யு. போப் பாதிரியார் அவர்கள், ''இந்திய மக்கள் எல்லோருள்ளும் தமிழ் மக்களே சிறப்பு மிக்கவராய் முன்னணியில் நிற்கின்றனர். திருக்குறளும் நாலடியாரும் அங்ஙனம் விளங்குமாறு அவர்களுக்கு உதவி புரிந்துள்ளன''(2) எனக் குறிப்பிடுகின்றார். இங்ஙனமே இன்னும், எண்ணிறந்தஎத்தனையோ பலர், திருவள்ளுவரையும், அவர் இயற்றியருளிய திருக்குறளையும் பலபடப் பாராட்டி மொழிந்திருக்கின்றனர்.

திருவள்ளுவரைப் போற்றி வியவாத தமிழ்ப் புலவர்கள் எவரும் இல்லை. திருவள்ளுவரின் கருத்துக்களையும்—சொற்கள், சொற்றொடர்களையும்—எவ்வகையாலேனும் எடுத்துக் கையாளாத தமிழ்க் கவிஞர்கள் ஒருவரேனும் இலர். சங்க காலச் சான்றோர்களும், ஆழ்வார்களும், தற்காலக் கவிஞர்களும் ஆகிய அனைவருமே, திருவள்ளுவரைத் ''தெய்வப் புலவர்'' என மிகவும் மதித்துத் துதித்து, அவர் இயற்றியருளிய திருக்குறளைத் தத்தம் நூல்களிலும் பாடல்களிலும், முத்தும் மணியும்போலஎடுத்து, அமைத்துப் பதித்துக் கொண்டு, இன்புற்று மகிழ்தலைக் காண்கின்றோம்.

முதற் குறள் :

இங்ஙனம் புலவர்கள் பலரும் போற்றித் துதித்து வியக்கும் முறையில், திருக்குறளைச் சிறப்புற இயற்றியருளி உலகுக்கு உதவிய, தெய்வப் புலவர் திருவள்ளுவர் தம் அருமை பெருமைகளை, யாம் என்னென்பேம்!

திருக்குறளின் முதற் குறள் தானே, எண்ணுவார் எண்ணுந்தொறும் வெளிப்படும் நுண்ணிய பல அரும் பெருங் கருத்துக்களை யெல்லாம், தன்னுள்ளே அடக்கிக்கொண்டுதிகழ்ந்து, தன்னை இயற்றியருளிய திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதனைச் செவ்விதின் விளக்கிக் காட்டித் தெளிவித்து நிற்கின்றது. ஆதலின் அம்முதற் குறள்பற்றி, ஈண்டு இயன்றவரை நாம் ஒரு சிறிது ஆராய்ந்தறிவோம்.

உலகப் பெருங்கவிஞரும் தெய்வப் புலவரும் ஆகிய திருவள்ளுவர், தமது ஒப்புயர்வற்ற திருக்குறள் நூலின் முதற்கண், ''கடவுள் வாழ்த்து''க் கூற முற்படுகின்றார். கடவுளை வாழ்த்துதற்குத் தலைப்படும் முன்னர், கடவுள் ஒருவர் உண்டு என உணர்த்த வேண்டுவது அவருக்கு இன்றியமையாத கடமையாகின்றது.

(1) " There hardly exists in the literatures of the world such a collection of maxims in which we find so much lofty wisdom."

—*Dr. Albert Schweitzer*,
The Development of Indian Thought.

(2) " The Tamils are the foremost among the peoples of India. The Kural and the Naladi have helped to make them so."

—*The Rev. Dr. G. U. Pope*,
Preface to Naladiar.

"கடவுள் ஒருவர் உண்டு" என்னும் உண்மையை உணர்த்த, அவர் வேறு எத்துணையோ பலப்பல வகையான சான்றுகளையும் காரணங்களையும் எடுத்துக் காட்டியிருக்கலாம். தமிழ் மொழியிற் பெரும் புலவராய்—சான்றோராய்—கவிஞராய்த் திகழ்ந்து, தமிழ் மொழியிற் பாவலராகவும், தமிழ்ப் பண்பாட்டின் காவலராகவும் விளங்கித் தமிழ் மயமாகவே வாழ்ந்திருந்த திருவள்ளுவர், தமிழெழுத்துக்களின் அமைப்பும், தமிழிலக்கணத்தின் நுட்பமும் கொண்டே, கடவுளுண்மையினை நிறுவிக் கட்டுரைக்கின்றார்.

ஆசிரியர் தொல்காப்பியர், தாம் இயற்றியருளிய தொல்காப்பியம் என்னும் பழம்பெருந் தமிழிலக்கண நூலில், "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" எனப் பணித்தருளிய நுட்பம் உணர்ந்து:

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்னும் திருக்குறளில், இறையுண்மை நிறுவுவதற்குத் தமிழிலக்கண அமைப்பினைத் தழுவி, ஆசிரியர் திருவள்ளுவர் அகரத்தினை உவமை காட்டியுள்ள அருமைப்பாடு, பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது!

சமயச் சான்றோர்கள் :

திருவள்ளுவர் எடுத்துக் காட்டியருளிய அகரவுவமையின் சிறப்பினை, அவர்க்குப் பின்னர்த் தோன்றிய சமயச் சான்றோர்கள் பலரும் வியந்து மகிழ்ந்து, தத்தம் நூல்களில் தழுவிக் கொண்டுள்ளனர்.

(1) "அகர முதலானை அணி ஆப்பனூரானைப் பகரும் மனம் உடையார் வினைப் பற்றறுப்பாரே" என ஞானசம்பந்தர் நவிலுகின்றார்.

(2) "ஆனத்தின் முதல் எழுத்து ஆகி நின்றாய்" என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

(3) "அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப் போவதோர் சூழல் சொல்லே" எனச் சுந்தரர் துதிக்கின்றார்.

(4) "அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்" என்று மெய்கண்டார் சிவஞான போதத்தில் குறிப்பிடுகின்றார்.

(5) ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியார் "அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே" எனவும் (சுபக்கம் : 72)

"இவ்வுயிர்கள் தோற்றும்போ
தவனையின்றித் தோற்றா;
இவற்றினுக்கு அம் முதலெழுத்துக்கு
எல்லாமாய் நிற்கும்
அவ்வுயிர்போல் நின்றிடுவன்"

எனவும் (சுபக்கம் : 316), திருவள்ளுவர் கூறிய அகரவமையினைத் தமது சிவஞான சித்தியார் செய்யுட்களில் எடுத்தாண்டுள்ளார்.

(6) இவ்வாறே சைவ சித்தாந்த சந்தானாசிரியர்களுள் ஒருவராகிய உமாபதி சிவம், தாம் இயற்றிய திருவருட்பயன் என்னும் நூலில் "அகரவுயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என, இத்திருக்குறளையே தழுவி இனிதெடுத்துரைத்துப் போற்றியிருக்கின்றார்.

அகர உவமையும் அதன் நுண்பொருள்களும் :

இங்ஙனம் வாழையடி வாழையாகப் பிற்போந்த சான்றோர்கள் அனைவருமே போற்றித் தழுவி மகிழும் வண்ணம், இறையுண்மையை நிறுவுவதற்குத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமான் காட்டியருளிய அகரவுவமையானது, சிந்திப்பரியதாய்ச் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவதாய்த் தொட்டனைத்தூறும் மணற் கேணிபோல, நுட்பக் கருத்துக்கள் பலவற்றைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டு ஒளிர்கின்றது.

(1) ஆதி அகரம் விகாரத்தால் அன்றி நாத மாத்திரையான் இயல்பாக வெளிப்பட்டு நிற்கின்றது ; அதுபோலவே எல்லாவற்றிற்கும் ஆதியாகிய இறைவனும் இயல்பாகத் திரிபின்றி இயற்கை வடிவினனாக அமைந்து விளங்குகின்றான்.

(2) அகரம் அங்காப்பு மாத்திரையால் திரிபின்றி வெளிப்பட்டு, வேறு பிற ஒலிகளின் தோற்றங்களுக்கெல்லாம் முதன்மையாய் நிற்கின்றது; அது போலத் திரிபின்றி இயல்பாக விளங்கும் இறைவனும், முத்தொழில்களுற்றுத் திரிபுறும் உயிர் உலகுகளின் இயக்கங்களுக்கு முதல்வனாகத் திகழ்கின்றான்.

(3) அகரமே உயிர் எழுத்துக்களிலும் மெய்யெழுத்துக்களிலும் கலந்துநின்றுஅவற்றை ஒலிப்பிக்கின்றது; அதுபோலவே இறைவனும் அறிவற்ற உலகப் பொருள்களிலும்,அறிவுடைய உயிர்களினுள்ளும் ஒன்றிக் கலந்து நின்று அவற்றை இயங்குமாறு செய்கின்றான்.

"இறைவன் இயங்குதிணைக்கண்ணும், நிலைத்திணைக்கண்ணும், பிறவற்றின் கண்ணும், அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல; அகரமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து, அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்ப முடிந்தது. "அகரமுதல" என்னும் குறளான், "அகரமாகிய முதலையுடையன எழுத்துக்களெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடையது உலகம்" என வள்ளுவனார் உவமை கூறிய வாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரம் ஆகின்றேன் யானே' எனக் கூறிய வாற்றானும் பிற நூல்களானும் உணர்க."

—நச்சினார்க்கினியர்,
—தொல், எழுத்து, மொழிமரபு-13.

(4) எழுத்துக்கள் மெய்யெழுத்து உயிரெழுத்து என இருவகையாய், அகர முதலாதல் போலப் பிரபஞ்சமும் சேதனம் அசேதனம் என இரு வகையாய், ஆதிபகவன் ஆகிய முதலையுடையது. உயிரெழுத்து சீவான்மாக்களுக்கும், மெய்யெழுத்து தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதிபகவற்கும் உவமையாக அமைந்து வந்தமை ஆராய்ந்து மகிழத்தக்கது.

(5) அகரம் மெய்களிலும் உயிர்களிலும் ஒன்றிக் கலந்து நிற்பினும், அம் மெய் உயிர்களின் வேறாகத் தனித்தும் நிற்கின்றது ; அது போல இறைவனும் உலகோடும் உயிர்களோடும் கலந்து ஒன்றி நிற்கின்றான் எனினும், அவற்றின் வேறாகத் தனித்தும் விளங்குகின்றான்.

(6) அகரம் உயிர்களோடும் மெய்களோடும் ஒன்றாய் வேறாய் உடனாய்க் கலந்து நிற்பினும், ஒலியியல் நுட்பம் உணர்ந்த அறிஞர்களுக்கன்றிப் பருப் பொருள் அறிவினர்க்கு அவ்வியல்பு விளங்குவதில்லை ; அது போலவே இறைவனும் உலகுயிர்களோடு கலப்பினால் 'உடலின் உயிர்போல்' ஒன்றாகியும், பொருட்டன்மையாற் 'கண்ணின் அருக்கன்போல்' வேறாகியும், உயிர்க்குயிராதற் றன்மையாற் 'கண்ணொளியின் ஆன்ம பேதம் போல்' உடனாகியும் நின்று அருள் செய்து போதருகின்றான். ஆயினும், மெய்யுணர்வு பெற்ற மேலோர்கட்கன்றி அவனது அவ்வருளியல்பு விளங்குவதில்லை.

(7) அங்காந்த அளவில் தோன்றும் அகரமும், அதன் இயைபாற் பிறந்தொலிக்கும் ஏனைய மெய்யுயிர் எழுத்துக்களும் ஒருவனால் ஒலிக்கப்பட்டுத் தோன்றுதலின், தோற்றமும் ஈறும் உடையனவாகக் கருதப்படும் எனினும், முக்காலத்து மக்களால் எக்காலத்தும் ஒலிக்கப் படுதலின், அவை என்றும் உளவாய் நின்றிலங்கும் அழிவில் பொருள்களேயாகும். அதுபோல இறைவனும் இறைவனால் இயக்கப்பெறும் உலகுயிர்களும் முத்தொழில் நிகழ்ச்சிகளைப் பெற்றிருப்பினும், என்றும் உளவாம் அழிவில் பொருள்களே யாகும். 'பதியினைப் போற் பசு பாசம்அனாதி' என்பது திருமூலர் திருமந்திரம்.

(8) அகரம் தமிழ் எழுத்துக்களுக்கு மட்டுமேயன்றி, வேறு பல மொழிகளின் எழுத்துக்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் திகழ்கின்றது ; அதுபோலவே இறைவனும் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகவும் முதலாகவும் விளங்குகின்றான். ''ஒருவனுமே பலவாகி நின்றவா தோள் நோக்கம்ஆடாமோ'' என்பர் மணிவாசகர். ''இராமேச்சுரத்து ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே'' என்பது திருஞானசம்பந்தர் தேவாரம்.

(9) அகர ஒலி ஒன்றே, வெவ்வேறு மொழியாளர்களாற் பல்வேறு வடிவினதாக எழுதப் படுகின்றது ; அதுபோல இறைவன் ஒருவனே, பல்வேறு சமயத்தினரால் வெவ்வேறு வடிவினனாகவும் பெயரினனாகவும் வைத்து வழிபடப் படுகின்றான். ''ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்பது திருவாசகம்.

(10) பேச்சளவில் மட்டுமுள்ள திருந்தா மொழிகளில், எழுத்துக்கள் இல்லையாயினும், திருந்திய இலக்கியச் செம்மொழிகளில், எழுத்தின் ஒலி வகைகளைக் காட்ட வரிவடிவங்கள் இன்றியமையாதன என்று நன்குணர்ந்து, எழுத்து வடிவங்கள் படைக்கப்பட்டுள்ளன ; அதுபோல இறைவழிபாட்டிற்குத் திருவுருவங்கள் வேண்டா எனக் கூறுபவர் ஒரு சிலர் உள்ளனரெனினும், ஒலி வகைகளைக் காட்டுதற்கு எழுத்தமைப்புக்கள் வேண்டப்படுதல் போல, இறைவழிபாட்டிற்கும் திருவுருவ அமைப்புக்கள் வேண்டப்படும் என்பது பழந்தமிழ் மக்களின் சிறந்த கொள்கை.

''கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற்கு இடும்உருவு ஆம்வடிவெழுத்தே''

என்பது, இலக்கண நூல்களில் எடுத்துக் காட்டப்பெறும் மேற்கோள். ஒலியை யுணர்தற்கு எழுத்துக்கள் உதவுமாறுபோல, இறைவழிபாட்டிற்குத் திருவுருவங்கள் உதவி புரியும் என்பது கருத்து.

''உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு''

''உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு''

முடிவுரை :

இங்ஙனம் அறிஞராய்க் கருதியுணர வல்லார் கருதியுணர்ந்து மகிழத் தகும் சிறந்த கருத்துக்கள் பலப்பலவும் இவ் அகர உவமையின்கண் செவ்விதின் அமைந்துள்ளமை அறிந்து மகிழ்தற்குரியது.

''எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக்களையுணர்த்திக் கொண்டு செல்ல வல்ல தன்மையதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப்படுதற்குரிய சீரிய சான்றாகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவாயினும், அதனைச் சுற்றி அளவிடற்கரியதொரு பொருட் குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டிருக்கும். கவிஞன், கருதியதும் கூறியதும் ஒரு கருத்தே யாயினும், அக் கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறு பல இயைபுடைய கருத்துக்களையும் தன்கண் பொலியத் தோற்றுவித்துக்கொண்டு திகழும்'' (3) எனப் பேராசிரியர் ஏ. சி. பிராட்லி என்பவர் கூறுவர்.

அதற்கு ஏற்ப, இங்ஙனம் பல வகை விரிந்த பொருள் நுட்பக் குறிப்புக்கள் புலனாகும் வண்ணம் 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் அழகிய தொடரை அருளிச் செய்திருப்பதொன்றே, ஆசிரியர் திருவள்ளுவர் தெய்வப் புலவர்தான் என்பதனை, நன்கினிது விளக்கும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள் நூலை, நாம் ஆராய்ந்து கற்கவும், கற்று அதன்படி வாழ்க்கையில் நிற்கவும், இயன்ற வரை முயன்று சிறப்புறுவோமாக!

திகழும் திருவள் ளுவனார்தாம்
சிறந்த தெய்வப் புலவர்எனல்,
பகவன் உண்மை நிறுவுதற்குப்
பண்பின் ஆராய்ந் தவர்சொற்ற
அகர உவமை தான் ஒன்றே,
அறியத் தெருட்டும்; அச்சான்றோர்
தகவின் அளித்த திருக்குறள்நூல்,
தக்காங்கு ஓதி நாம்உய்வோம் —ந.ரா.மு.

---

(3) "The proof of the purest poetry is that its meaning is inexhaustible. About the best poetry, and not only the best, there floats an atmosphere of infinite suggestion. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something boundless which is only focussed in it."

—*Prof. A. C. Bradley*,
Oxford Lectures on Poetry.

திருக்காட்கரை அப்பன்

திரு. டாக்டர். ந. சுப்புரெட்டியார், M.A., Ph. D.

இறைவனுடைய அடியார்கள் இறைவனை அநுபவித்தல் பல்பவறு வகையாக நிகழும். சிலர் அவனுடைய திருநாமங்களைச் சொல்லி அநுபவிப்பர்; ''சகஸ்ரநாம அர்ச்சனை'' இம் முறையினின்றே ஏழுந்தது என்று கருதலாம். சிலர் அவனுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லிச் சொல்லி அநுபவிப்பர். எடுத்துக் காட்டாக இறைவனுடைய எளிமைக் குணத்தில் (சௌப்யம்), நம்மாழ்வார் ''எத்திறமம் உரலினேடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே'' என்று ஈடுபட்டு அதனுல் தன்னையே மறந்து ஆறுமாதம் மோகித்துக் கிடந்தார் என்ற செய்தியை, உரையாசிரிய கள் குறித்துள்ளனர் இந்தக் குணம் எல்லா ஆழ்வார்களின் நெஞ்சையும் உருக்கியுள்ளது. எம்பெருமானின் எளிமையையும் உயர்வையும் (பரத்துவம்), இரண்டு பெண்கள் எதிரெதிராகக் கூறும் பாவனையில், திருமங்கையாழ்வார் பேசும் பாசுரங்களை, இதற்கு எடுத்துக் காட்டுக்களாகக் கொள்ளலாம். இன்னும் சிலர் இறைவனுடைய வடிவழகை வருணித்துப் பேரின்பம் கொள்வர்.

''சன்மம் பலபல செய்து
வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம்வில்
ஒண்மையுடைய உலக்கை ஒள் வாள்
தண்டுகொண்டு புள்ளூர்ந்து உலகில்
வன்மை யுடைய அரக்கர்
அசுரரை மாளப் பொருத
நன்மை யுடையவன் சீர்பர
வப்பெற்ற நான்ஓர் குறைவிலனே''

இதில் திருவருள் காரணமாக அடியார் பொருட்டு வந்து பல பிறவி எடுக்கும் சீல குணம் (சௌசீல்யம்), ஒரு கற்பகத்தரு பணைத்துக் கணுத்தோறும் அரும்பினுற் போலே எம்பெருமான் திவ்யாயுதங்களைத் தரித்திருக்கும் அழகு, ஆகியவற்றில் நம்மாழ்வார் ஈடுபட்டு மகிழ்வதைப் பாசுரத்தில் காணலாம். ''நன்மையுடையவன் சீர் பரவப்பெறுவதில்'' ஆனந்தம் அடைகின்ருர் ஆழ்வார். மேஹிம், சிலர் இறைவன் கோயில் கொண்லிருளின திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசியும், அவ்வீடங்களில் அபிமானமுள்ள வைணவர்களின் பெருமையைப் பேசியும் அநுபவிப்பர். இன்று திருக்காட்கரை என்ற திவ்விய தேசத்திற்குச் சென்று திருக்காட்கரை அப்பனைச் சேவிப்போம் நம்மாழ்வாரின் துணைகொண்டு அந்த அப்பனின் குணங்களில் ஈடுபடுவோம்.

இயற்கை வனப்புக்களும் வளங்களும் நிறைந்த கருவூலமாகத் திகழ்வது 'மலைநாடு' அஃதாவது, இன்று கேரளநாடு என்று வழங்கும் பகுதியாகும் இது. மலைத்தொடர்களால் அமைந்த இப்பகுதி, மேற்கு முகமாகக் கடல் கடல் வரையிலும் சரிந்து கிடக்கின்றது. உயர்ந்த கொடுமுடி ஒன்றிலிருந்து கொண்டு, ஒருவர் மேற்குத் திரும்பி நின்று இப்பகுதியை நோக்குவாராயின், ஒருபுறம் அடர்ந்த காடுகளும் குன்றுகளும், தென்னந்தோப்புகளும் கமுகத் தோட்டங்களும், பிறிதொரு புறம் அராபியக் கதைகளில் வரும் அதிசயங்களைப் போன்று அடுக்கடுக்காக வரும் பசுமையான பள்ளத்தாக்குகள், மைதானங்கள், வயல்கள், சோலைகள் ஆகியவை அடங்கிய பகுதிகளும்; மற்ருெருபுறம் முடிமன்னர் போலச் செருக்குடன் நிமிர்ந்துள்ள உன்னத சிகரங்கள், அருவிகள், பீடபூமிகள், காயல்களாக விரியும் ஆறுகள் ஆகியவை அடங்கிய பகுதிகளும் அவர் கண்களுக்குப் புலனுகும். மேலும், ஆங்கே இயற்கை நியதிகட்டுக் கட்டுப்பட்டும், இயற்கை நியதிகளைக் கட்டுப்படுத்தியும் ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்தும் மக்கள் திரள்களையும் காணலாம்.

கேரளத்தில் தென்னிந்திய இருப்புப் பாதையில் அமைந்துள்ள எர்ணுகுளம் என்ற நிலையத்தில் இறங்குகின்ருேம். அவரவர் வசதிப்படி சத்திரம், வாடகை விடுதி ஆகிய இடங்களில் தங்கி, நெடுந்தொலைவுப் பயணத்தின் சிரமத்தைப் போக்கிக் கொள்கின்ருேம். நீராடித் தூய ஆடையை உடுத்திக்கொண்டு, திருக்காட்கரைக்குப் போகச் சித்தமாகின்ருேம் எர்ணுகுளத்திலிருந்து சுமார் பத்துக்கல் தொலைவிலுள்ளது அந்த திவ்விய தேசம். அங்கு போகப் பேருந்து வசதி உண்டு. சாலையின் மேலேயே இவ்வூர் அமைந்துள்ளது. பேருந்திற்கு அறுபது காசு தந்து அவ்வூரை அடைகின்ருேம்.

பேருந்தில் செல்லும்போதே சாலைக்கு இருமருங்கும் உள்ள தோப்புக்கள், சோலைகள், வயல்கள் இவற்றைக் கண்டு களித்துக்கொண்டே சொல்லுகின்ருேம். எங்கெங்கெல்லாம் எழில் கொழித்து நிற்கின்றதோ, அங்கங்கெல்லாம் தமிழ்க் கடவுள் முருகன் எழுந்தருளியிருப்பான் என்பது தமிழரது சமயக்கொள்கை. திரு. வி.க. வின்' முருகன் அல்லது அழகு' என்ற நூலில் இது விளக்கப் பெற்றிருப்பதைப் படித்து மகிழலாம். மாயோனும் (திருமாலும்) தமிழ்க் கடவுள் தானே? ''மாயோன் மேய காடுறை

உலகமும்'' என்று தொல்காப்பியம் அவனைக் குறிப்பிடுகின்றதன்றோ? முருகனும் திருமால் மருகன் அன்றோ? ஆகவே, திருமாலும் அழகான இடங்களில்தான் கோயில் கொண்டுள்ளார் என்பதைக் காண்கின்றோம். இத்தகைய அழகான இடங்களில் பூவைப்பூ, காயாம்பூ, நீலோற்பலம், செங்கழுநீர்ப்பூ இவை மலர்ந்து காட்சி அளிக்கின்றன. இந்தப் பூக்களைக் கண்டதும் நம்மாழ்வாரின் உயிரும் உடம்பும் ஒருங்கே மலர்ச்சி பெற்றுப் பூரித்துப் போகின்றன. அந்த உணர்ச்சி,

''பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற,
காவி மலர்என்றும் காண்தொறும்,—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும், அவ்வவை
எல்லாம் பிரான்உருவே என்று''

என்ற பாட்டாக வடிவம் பெறுகின்றது. எம்பெருமானுடைய திவ்விய மங்கள வடிவம்தான் இப்படி வந்து காட்சி தருகின்றது. இது வெறும் பிரமையே என்று தோன்றினாலும், அறிவு எச்சரித்தாலும், ஆழ்வாரது பக்திக் கண்கட்கு அவை அப்படியே தென்படுகின்றன; அறிவின் எச்சரிக்கையையும் புறக்கணித்துப் பிரமையன்று என்று அவரது உணர்ச்சி தூண்டுவதால், அந்தப் பிரமையிலேயே அவரது உள்ளம் தோய்ந்து ஒன்றி நின்று, பேரின்பத்தை அடைகின்றார் ஆழ்வார்.

திருக்காட்கரை என்ற திவ்வியதேசமும், இத்தகைய இயற்கையழகு மிக்க சூழலில்தான் அமைந்துள்ளது. இத் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை, ஒரு பதிகத்தால் மங்களாசாசனம் செய்துள்ளார், நம்மாழ்வார். வேறு எந்த ஆழ்வாரும் இந்த எம்பெருமானைப் பாடவில்லை. திருமங்கையாழ்வாருக்கு அடுத்தபடியாக, அதிகமான திருப்பதிகளைப் பாடியவர் நம்மாழ்வாரே யாவர். இவ்விரு ஆழ்வார்களும் சிற்றரசர்களாக இருந்ததால், பயணம் செய்வது மிகவும் சிரமமாக இருந்த அந்தக் காலத்தில் யாத்திரை செய்ய வசதி பெற்றிருந்தனர் என்று கருதலாம். ஆனால், நம்மாழ்வாருக்குப் பல தலங்களிலுமுள்ள மூர்த்திகளே அவர் இருக்கும் இடம் தேடிவந்து சேவை சாதித்தனர் என்றும், அவர் திருப்புளியாழ்வாரின் அடியிலிருந்து கொண்டே பல்வேறு தலங்களையும் பாடினார் என்றும், குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

ஆழ்வாரும் தாம் சென்று சேவித்த தலங்களை எல்லாம் அங்கங்கே சென்றபோது பாடவில்லை என்பது உண்மை. பெரும்பாலும் இவரது பிரபந்தங்கள் யாவும் அந்தாதி முறையிலிருப்பதால், இவை ஓரிடத்தில் ஒரே காலத்தில் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் என்று ஊகம் செய்வதில் தவறு ஒன்றும் இல்லை. அங்ஙனம் பாடுங்கால் அந்தப் பாசுரங்களின் போக்கிற்கு இசைந்தவாறு, தலங்களை மீண்டும் தம் மனக் கண்ணால்கண்டு ஒரு முறையில்லாமல் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இவர் பாடியுள்ள தலங்களைத் தொகுத்துப் பார்த்தால், தம்முடைய நாட்டிலும் (திருநகரியைத் தலைநகராகக் கொண்ட வழுதி நாடு, அஃதாவது இப்போதுள்ள திருநெல்வேலிப் பகுதி), தம் அன்னையார் பிறந்த மலையாள நாட்டிலும் உள்ள தலங்களையே பாடினார் என்பது தெரிய வரும். மேலும் மதுரை, திருமாலிருஞ்சோலை, திருவரங்கம், கும்பகோணம் வழியாகத் திருவேங்கடத்திற்குச் சென்றார் என்பதும், அங்ஙனம் சென்றபொழுது வழியிலுள்ள சில தலங்களையும் பாடினார் என்பதும், ஊகத்தினால் ஒருவாறு விளங்கும். ''உலகம் எங்கும் இறைவன் சந்நிதியே'' என்றும், தம்முடைய நெஞ்சமே இறைவனுக்குச் சிறந்த திருப்பதி என்றும் முடிவு செய்து கொண்டவர், எல்லாத் திருப்பதிகளையும் எல்லா மூர்த்திகளையும் ஒரே இடத்தில் கண்டார் என்னும் கதை தோன்றியதில் வியப்பொன்றும் இல்லை.

இந்த ஆழ்வார் திருக்காட்கரைக்கு வந்தபோது, ஒருசமயம் தம் உள்ளத்தில் எம்பெருமான் வீற்றிருந்த பெருமையைக் கூறி மகிழ்ந்தது நம் நினைவிற்கு வருகின்றது.

''சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகுந்தன்
நெறியா வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரே''

என்றபடி, இறைவன் முறைகெடப் பரிமாறின பரிமாற்றம், நினைவின் பொருளானதோடன்றி, அப்போதைய அநுபவமேயாகி விடுகின்றது. அந்த நிலையில் இறைவனுடைய சீலகுணத்தை (பெரியவன் தாழ்ந்தவர்களுடன் புரையறக் கலக்குந் தன்மையை) எடுத்துப் பேசி, உள்ளம் கரைகின்றார் ஆழ்வார். பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் ஆகிய நான்கு நிலைகளிலுள்ள எல்லாக் குணங்களையும் அர்ச்சாவதாரத்தில் காணலாம் என்பது தத்துவம். ஆயினும், ஒவ்வொரு திருப்பதியிலும் ஒவ்வொரு குணம் சிறப்பாகப் பொலியும் என்றும், அத்தத்துவம் குறிப்பிடுகின்றது. இக்கருத்துப்படி திருக்காட்கரையில் சீலகுணம் கரை அழியப் பெருகும் என்பது, வைணவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. இங்குத் தானே சேஷ-சேஷி பாவம் (ஆண்டான்-அடியவன் பாவனை) தட்டு மாறிப் பரிவர்த்தனை செய்து ஆண்டவனின் சீலகுணம் பெருகி வழிந்தது?

ஆழ்வாரின் இந்த அநுபவத்தைத் துணையாகக் கொண்டு திருக்காட்கரைக் கோயிலை நாடிச் செல்லுகின்றோம். எப்பக்கம் நோக்கினும் ஒரே சோலை மயம். ''வெறிகமழ் சோலைத் தென் காட்கரை'', ''சீர்மல்கு சோலைத் தென் காட்கரை'' ''திருவளர் சோலைத் தென்காட்கரை'' என்று ஆழ்வார் இவ்வூரைக் குறிப்பிடுவதையும் நினைக்கின்றோம். வழிநெடுக வாவிகளும் குளங்களும், சிற்றாறுகளும் காணப்பெறுகின்றன. ''சுனைகொள் பூஞ்சோலைத் தென் காட்கரை'' என்ற பாசுரக் குறிப்பு, நம் நினைவிற்கு வருகின்றது. அத் தடாகங்களிலும் நீர் நிலைகளிலும் செங்கழுநீர்ப் பூக்கள் நிறைந்துள்ளதைக் காணும்பொழுது ''தெருவெல்லாம் காவிகமழ் திருக்காட்கரை'' என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதியை நினைந்து போற்றுகின்றோம்.

இந்த மனநிறைவுடன் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். சுமார் இரண்டு ஏக்கர், நிலப்

பரப்பில் தாழ்ந்த மதில் சுவர்களால் சூழப் பெற்றுள்ள இடத்தில் அமைக்கப்பெற்றுள்ளது அத்திருக்கோயில். மிகவும் சிறிய கோயில்தான். இங்குத்தான் திருக்காட்கரை அப்பன், தெற்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு பெருஞ் செல்வநாயகியுடன் நின்ற திருக்கோலத்துடன் காட்சி அளிக்கின்றான். இந்த எம்பெருமானின் ஆச்சரியமான பரிமாற்றங்களை நினைக்கும் பொழுது நெஞ்சு நீர்ப்பண்டமாகின்றது; கட்டுக் குலைந்து உருகுகின்றது. ஆன்மா தாங்கக் கூடிய அளவுக்கு மீறி ஆசையும் கரை புரண்டோடுகின்றது.

''உருகுமால் நெஞ்சம் உயிரின் பரமன்றிப்
பெருகுமால் வேட்கையும் என்செய்கேன் தொண்டனேன்''

என்ற ஆழ்வார் வாக்கினை நினைந்து நெஞ்சுருகி நிற்கின்றோம். எம்பெருமான் தாழ நின்று ஆழ்வாருடன் பரிமாறின சீலகுணத்தினை நினைந்து கரையழிகின்றோம். ஒரு குணத்தையே 'காலம்' என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் கால் தாழ்ந்து, கணந்தோறும் புதுமை பிறந்து அநுபவிக்கவல்ல ஆழ்வாரின் பக்தியை நினைந்து போற்றுகின்றோம். அவருக்கு இறைவன் ''அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராவமுதமாக'' இனிக்கின்றவனல்லவா?

அந்த மாயனின் அநந்த குணங்களை அவர் நினைக்கத் தொடங்கினால் அந்த நினைவும் நெடுகச் சென்று தலைக்கட்டாது. மீண்டும் அவற்றையே நினைக்கத் தொடங்குவர் ஆழ்வார். இங்ஙனம் காலம் செல்லுகின்றது. இங்ஙனம் நெஞ்சால் நினைக்க முடியாத அந்த அரும்பெருங் குணங்களைத் தம் வாயினால் எடுத்துச் சொல்லத் தொடங்குகின்றார் ஆழ்வார்; தம்மை அறியாமல் அவருடைய வாய் அத்திருக்குணங்களைப் புகழ்ந்தவண்ணம் உள்ளது. அங்ஙனம் பேசுங்கால் அப்பேச்சு செவி வழியாக உள்ளே புகுந்து ஊற்றெடுத்து நெஞ்சினை மேலும் கரையச் செய்கின்றது. இவ்விடத்தில் ஈடு, ''பெருக் காற்றின் கரை இடிந்து பின் நீராய்க் கரைந்து போமாறு போலே ஓர் உருவம் ஆக்கிக் காண வொண்ணாதபடி உக்குப்போக நின்றது'' என்று குறிப்பது நினைந்து மகிழத்தக்கது. தாழ நின்று பரிமாறின எம்பெருமானுடைய சீலகுணத்தைப் பாட்டாகப் பாடிப் பரவினாலும், ஆழ்வாருடைய ஆன்மா வேகத் தொடங்குகின்றது.

''நினைதொறும் சொல்லுந்தொறும்
நெஞ்சிடிந்து உகும்
வினைகொள் சீர்பாடிநும்
வேம்எனது ஆருயிர்''

என்று பேசுகின்றார் ஆழ்வார். ''எல்லாவற்றுக்கும் குளிர்ச்சி பண்ணக் கடவதான பனி, தாமரை மலரை மட்டிலும் கருகப் பண்ணுமாப் போலே, சகலர்க்கும் துன்பம் நீக்குவனவான குணங்கள் எனக்கு மட்டிலும் துன்பத்தை விளைவிக்கின்றனவே'' என்கின்றார்; இந்த நிலையில் எம்பெருமானுக்கு எங்ஙனம் கைங்கரியம் செய்வது என்று ஏங்குகின்றார். ''நினைகிலேன் நானுனக்கு ஆள்செய்யும் நீர்மையே'' என்கின்றார். ஆழ்வார் பெற்ற அநுபவத்தை நினைத்த வண்ணம் நாமும் எம்பெருமானைச் சேவிக்கின்றோம்.

(தொடரும்)

நூல் அறிமுகம்

சிவபூஜா வேதமந்திரங்கள் : இந்நூல், திருச்சி மாவட்டம் அல்லூர்ச் சிவாகம வேத பாடசாலையின் தலைமை ஆசிரியராக விளங்கும் அல்லூர் திரு வி. விசுவநாத சிவாசாரியர் அவர்களால் இயற்றப்பெற்றது. ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடம் ஆசாரிய சுவாமிகள் அவர்களின் ஆணைப்படி, காஞ்சி காமகோடி பீட வியாசபாரத கலாதி சதஸ் சமாஜத்தின் சார்பில், பதிப்பிக்கப்பெற்றது. இதன்கண் சிவபூசைக்குத் தேவையான வேத மந்திரங்கள் நன்கினிது தொகுத்து அளிக்கப்பட்டிருக்கின்றன. அதனால், இந்நூல் சிவாசாரியப் பெருமக்களுக்குப் பெரிதும் பயன்படும். ஸ்ரீருத்ரம், சமகம், சூக்தம் முதலியவைகளோடு, வேத மந்திரங்களாகிய இந்த இருக்குத் தொகுதிகளும், சிவபூசகர்கள் பயின்று தெரிந்து கொள்ளத்தக்கனவாகும். ஆதலின், சிவாசாரியர்களும் சிவபூசகர்களும் இந்நூலை வாங்கிப் பயன்கொள்வார்களாக!

இதன் விலை ரூ. 2-50; 20 சதம் கழிவு உண்டு. நூல் கிடைக்குமிடம் :

திரு. பி. ஜி. பால் & கோ., எண் 4, பிரான்சிஸ் ஜோசப் தெரு,
சென்னை - 600 001.

—ஆசிரியர்

திவ்வியப்பிரபந்தச் செழும்பொருட் சிறப்பு

'மகாவித்வான்' 'பத்மவிபூஷண்'
திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள் அவர்கள்

இதன் பிரமேயமாவது, ஆழ்வார்களருளிச் செய்த திவ்வியப்பிரபந்தங்களிலும், திருவரங்கத்தமுதனர் அருளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதியிலும், மணவாள மாமுனிகள் அருளிச் செய்த உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி களிலும் வெளிவந்துள்ள விசேஷத் திருநாமங்களையும், ஸாமான்யப் பெயர்களையும், மற்றும் அர்த்த விசேஷங்கள் கொண்ட பாசுரங்களையும் அகராதி வரிசையிலிட்டு அவற்றுக்கெல்லாம் விளக்கம் தருவதாம். இதன்கண் இதிகாசபுராண அர்த்த விசேஷங்களும் குருபரம்பராப்ரபாவ விசேஷங்களும், உபயவேதாந்தார்த்த விசேஷங்களுமெல்லாம் எலிய நடையில் தெளிவாகத் தெரிவிக்க நேரும். ஆஸ்திக பக்தர்கள் இவையொரு மஹாநிதியாகவே கொள்ளக் கடவர்கள்.

1. அகத்தியன் :

'அகஸ்த்ய' என்கிற வடசொல்லின் விகாரம். இந்த முனிவரைப் பற்றிக் குலசேகராழ்வார் தமது திருமொழியில் 'அங்கணெடு மதிள்புடைசூழென்று' தொடங்கும் ஈற்றுப் பதிகத்தில் இருமுறை ப்ரஸ்தாவம் செய்கிருர். (1) அதில் ஐந்தாம் பாட்டில் ''வண்டமிழ் மாமுனிகொடுத்த வரிவில் வாங்கி' என்றவிடத்துத் தமிழ்மாமுனி யென்றது அகத்திய முனிவரையே. அங்குக் குறித்த வரலாறு- இராமபிரான் பரசுராமனிடமிருந்து விஷ்ணு தநுஸ்ஸைப் பெற்று அவனை வென்றபோது அங்கு வந்து தன்னைக் கொண்டாடிடத் தேவர்களுள் வருணனிடத்திலே அவ்வில்லைக்கொடுத்து அதனை நன்ருகப் பாதுகாத்து வைத்திருந்து உரிய ஸமயத்தில் தன்னிடம் கொணர்ந்து கொடுக்குமாறு சொல்ல, அங்ஙனமே அதனை வாங்கிச் சென்று நன்கு பாதுகாத்து வைத்திருந்தான் வருணன். பின்பு ஸ்ரீராமன் வனவாசம் புக்குத் தண்டகாரணியத்தில் அகஸ்தியர் ஆச்சிரமத்திற்கு எழுந்தருளினபொழுது அதனை அம்பறாத் தூணியுடனும் வாளுடனும் அம்முனிவர் தர, பெருமாள் பெற்றுக் கொண்டார். (2) அதற்கு மேல் ''அம்பொனெடு மணிமாடவயோத்தியெய்தி' என்னும் எட்டாம் பாட்டில் ''அகத்தியன்வாய்.... கதைகேட்டு'' என்றுள்ளது. அங்கு உணரத்தக்கதாவது-இராமபிரான் திருவயோத்தியில் திருமுடிசூடி எழுந்தருளியிருக்கையில், அகஸ்தியர், ஜமதக்னி, பரத்வாஜர், வசிஷ்டர், கௌதமர், கௌசிகர், காச்யபர், அத்ரி, தௌமியர் முதலிய முனிவர்கள் பலர் அந்தச் சக்கரவர்த்தித் திருமகனுரைக் கண்டு கொண்டாடக் கருத்துக் கொண்டு அங்குவந்து சேர, சபையில் வீற்றிருந்த இராமபிரான் அவர்களை எதிர்கொண்டு அழைத்து வணங்கி உபசரித்துத் திவ்வியமான ஆசனங்களில் வீற்றிருக்கச் செய்து, யோக க்ஷேமங்களை வினவ, அதற்கு அம்முனிவர்கள் ''எங்கட்கும் எல்லோர்க்கும் நெடுநாளாகப் பெருந்துன்பங்களை இழைத்து வந்த கொடிய ராட்சச ராஜனுன இராவணனையும் அவனுடைய அநுபந்திகளையும் வேரொடு அறுத்தருளிய நுமது கருணையிருக்க எங்களுக்கு என்னகுறை?'' என்று கொண்டாடிப் பேச, அதுகேட்ட இராகவன் ''அவ்வரக்கர்களுடைய பிறப்பும் வலிமையும் செயலும் அவர்கள் பெற்ற வரங்களும் முதலிய வரலாறுகளையெல்லாம் சொல்ல வேண்டும்'' என்று அம்முனிவர்களை வேண்ட, அவர்களில் அகத்திய மஹாமுனிவர் அனைத்தையுஞ் சொல்பவராய்ப் புலஸ்த்ய வம்ச வ்ருத்தாந்தத்தையும் பூர்விக ராட்சசர் செய்தியையும் இராவணுதியர் பிறப்பையும் அவர்கள் பெற்ற வரங்களையும் இந்திரஜித்தின் உற்பத்தியையும் இராவணன் திக்விஜயஞ் செய்த விவரத்தையும் அவன் ஆங்காங்குச் சாபம் பெற்றவகை முதலியவற்றையும் கூறினர்.

2. அகலகில்லேன் இறையுமென்றலர் மேல்மங்கையுறைமார்பன் :

திருவாய்மொழியில் (6-10-10) உள்ளஇப் பாசுரமானது ஆழ்வார் திருவேங்கடமுடையான் திருவடிகளில் சரணுகதி செய்வதாம். ரஹஸ்யத்ரயத்தில் மந்த்ர ரத்னமென்கிற திவ்விய மந்திரத்தின் பூர்வகண்டத்திற்கு இப்பாட்டு முழுவதும் மொழி பெயர்ப்புப் போன்றதாகவுள்ளது. ''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே'' என்பது திவ்வியத்தின் பூர்வகண்டம். ஸ்ரீமத் என்பதற்குப் பிராட்டியைவிட்டுப் பிரியாத என்று பொருள். அது 'அகலகில்லேன்' என்கிற முதலடியால் கூறப்பட்டது. (நாராயண) என்பதற்கு-முமுட்சுப்படியில் ''புருஷகார பலத்தாலே ஸ்வாதந்த்ர்யம் தலைசாய்ந்தால் தலையெடுக்குங் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம்'' என்று பிள்ளையுலகாசிரியர் அருளிச் செய்தபடி வாத்ஸல்யம் ஸ்வாமித்வம் ஸௌசீல்யம் ஸௌலப்யம்

ஜ்ஞானம் சக்தி ஆகிற திருக்குணங்கள் அர்த்த மாகையாலே அத்திருக்குணங்கள் இரண்டு மூன்றடிகளால் கூறப்படுகின்றன. ''நிகரில் புகழாயென்றதனால் வாத்ஸல்யம், உலகம் மூன்றுடையாயென்றதனால் ஸ்வாமித்வம், என்னையாள்வானே என்றதனால் ஸௌசீல்யம், திருவேங்கடத்தானே என்றதனால் ஸௌலப்பியம், சக்தியுக்தர்களான அமரர்களாலும் ஜ்ஞான பூர்ணர்களான முனிவர்களாலும் விரும்பப்படுபவன் என்கையாலே ஜ்ஞான சக்திகள்-'' என்றுணர்க. (த்வயத்தில்)'' சரணௌ சரணம் ப்ரபத்யே'' என்றது, உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேன் எனப்பட்டது. (பரபத்யே) என்ற உத்தம புருஷனால் ஆக்ஷிப்தமான (அஹம்) என்பதற்கு அர்த்தமாக ''புகலொன்றில்லாவடியேன்'' எனப்பட்டது.

3. அகல்கொள் வையமளந்த மாயன் :

திருவாய் மொழியில் (6-4-6) ''இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்'' என்ற பாட்டின் மூன்றாமடியிது. ''குரவையாய்ச்சியரோடு கோத்ததும்'' என்ற இப்பதிகம் கண்ணபிரானுடைய சரித்திரம் தவிர வேறொரு சரித்திரமும் சொல்லுவதில்லை என்கிற ஸங்கல்பம் தோன்ற அருளிச் செய்யப்பட்டது என்பது பூர்வாசார்ய வியாக்கியான ஸம்மதம். அத்தகைய இப்பதிகத்தில் ''அகல்கொள்வையமளந்த'' சரிதை ஏன் கூறப்பட்டதென்று சங்கிக்க வேண்டா. இது, குரவை கோத்ததும், குன்றமேந்தியதும், நாகங்காய்ந்ததும் என்றாற்போலே சரித்திரம் கூறினதன்று. விசேஷ்ய பூதனான எம்பெருமானை நிர்தேசித்தபடி. இப்பதிகந் தன்னிலேயே (8) ''மாணியாய் நிலங்கொண்ட மாயனென்றதும்'' இத்தகைத்ததேயாம்.

4. அகற்ற நீவைத்த மாய வல்லைம்புலன் களாமவை நன்கறிந்தனன் :

திருவாய்மொழி (5-7-8) வானமாமலைப் பதிகத்திலுள்ள பாசுரம் இது. இதில் ஆறும் பாட்டில் 'வானமாமலையே! அடியேன் தொழ வந்தருளே' என்று சிரீவரமங்கை நாதனை அழைத்தார். என்ன ஸமாசாரம்? என்று கேட்டார் பெருமாள் 'அந்தமில் புகழாய்! அடியேனை யேனை யகற்றேலே' என்றார் ஆழ்வார். அது கேட்ட எம்பெருமான் ஆழ்வீர்! திடீரென்று நீரிங்ஙனே சொல்லுவதற்கு என்னைப்ரஸக்தி? உம்மோடு சேர்ந்திருப்பதை நான் பெறாப் பேறாக நினைத்திருக்க 'அடியேனை அகற்ற வேண்டா' என்று எதுகொண்டு சொல்லுகிறீர்? என்ன; அதற்கு விடை கூறுகிறார் ஆழ்வார். ''அகற்ற நீவைத்த'' இத்யாதி. (இதன் விவரணம் ''உண்ணிலாவியஐவரால் குமைதீற்றி' என்ற பாசுரத்தில் (உகர வரிசையில்) மேலே வரும். அங்குக் காண்க).

5. அங்கதன் :

இவன் வாலியின் மகன் என்பது பிரசித்தம் திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழி-பத்தாம்பத்தில் இரண்டாவதும் மூன்றாவதுமான பதிகங்கள் விலட்சணமாக அமைந்தவை. இலங்கைப் போர்க்களத்தில் இராவணன் உயிர் துறக்குமளவாய், மாண்டுபோனவர்களில் மிகுந்திருந்த அரக்கர்களும் தங்கள்தங்கள் பிராணனுக்கு மன்றாடுமளவான நிலைமையிலே பெருமாளுடைய வெற்றிச் செல்வத்தை எடுத்துரைத்துப் பாசுரமிட்டுப் பேசி மகிழவேணுமென்னும் ஆசை, ஆழ்வார்க்குக் கிளர்ந்து அந்த வெற்றியைத் தம்முடைய வாயாலே பேசுவதிலுங்காட்டில் தோற்றுப் போன ராட்சஸர்களின் வாயாலே பேசியநுபவித்தல் பாங்கு என்று திருவுள்ளம் பற்றி, ''இரக்கமின்றியெங்கோன் செய்த தீமை'' ''ஏத்துகின்றோம் நாத்தழும்ப'' என்கிற இரண்டு பதிகங்கள் பாடினார். அவற்றுள் ஏத்துகின்றோம் பதிகத்தில் இரண்டாம் பாட்டில் ''நம்பியனுமா! சுக்கிரீவா! அங்கதனே! நளனே! என்று வானர வீரர்கள் நால்வரை விளித்துத் தங்கள் பரிதாபத்தை முறையிடுகிறார்கள் அரக்கர்கள். அங்கதனுடைய விக்கிரமங்களை அரக்கர்கள் நன்கு கண்டிருக்கிறார்கள். அங்கதனுடைய அற்புதச் செயல்களிலொன்று வருமாறு: இராவணன் ஸேதுபந்தனம் முதலியவற்றைப் பார்த்தாகிலும் புத்தி திருந்தி வருவானோவென்று மநோரதித்த இராமபிரான் அங்கதனை இராவணனிடம் அனுப்ப, அவன் சென்று ராவண ஸபையிலுட்கார்ந்து அவனை நோக்கி 'ஓ ராட்ச்சஸ ராஜனே! சக்ரவர்த்தி திருமகனார் உனக்கு நியமித்தருளுகிறார்-'நீ இன்னும் சில நாள் இச்செல்வத்துடன் வாழ நினைத்தாயாகில் சீதையைக் கொணர்ந்து கொடுத்துவிடு; மேலும் என்னுடைய தகப்பனாரான வாலி உனக்குத் தெரியுமன்றோ? உன்னைத் தன் வாலினால் சுற்றியெடுத்துக் கொண்டுபோய் நான்கு சமுத்திரத்திலும் ஒரு சிறிய புழுவைத் தோய்ப்பதுபோலத் தோய்த்தெடுத்த பராக்ரமசாலியன்றோ! அந்த வாலியை இந்த ஸ்ரீராமன் ஒரே அம்பினால் கொன்று விட்டார்; இதைக் கேட்டாகிலும் இனி நீ அவரிடத்திற் பகையை ஒழித்து நட்புக் கொள்' என்று சொல்ல, இராவணன் சீறி அங்கதனைப் பிடித்துக் கொல்லும்படி அரக்கர்கட்குக் கட்டளையிட, அப்படி பிடித்துக்கொண்ட நான்கு ராட்ச்சஸர்களையும் தன் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு ஆகாசத்திற் கிளம்பி அவ்வரக்கர்களை இராவணனுடைய விமானத்தின் மேல் சுழற்றியடித்து அவ்விமானத்தையும் உடைத்து விட்டு இராமனிடம் வந்து சேர்ந்தான். இப்படிப்பட்ட வீரச்செயல்களைக் கண்டவர்களாதலால், அங்கதனே! என்று விளிக்கின்றனர்.

6. அங்கமலத்தயனனையார் :

ஆழ்வார்கள் திவ்யதேசங்களைப் பாடும் போது அங்குள்ள பக்த பாகவதர்களின் பெருமைகளையும் பாடுவது வழக்கம். ''தக்ககீர்த்தியருமறையின் திரள் நான்கும் வேள்வியைந்தும் அங்கங்களவை யாறுமிசைகளேழும், தெருவில் மலிவிழா வளமுஞ் சிறக்குங் காழிச் சீராம விண்ணகர்'' ''அங்கமாறைந்து வேள்வி நால் வேதம் அருங்கலை பயின்று எரிமூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர் திருக்கண்ணங்குடி.'' என்றிங்ஙனே பலபல பாசுரங்கள்

பாடியுள்ளார்கள். ''சிவனயனே போல்வார் மன்னு திருக்கோவலூர்'' ''வண்சிவனுமயனுந் தானுமொப்பார் வாழ்... திருச்சிற்ருறு'' என்றிப்படியும் பாடியிருப்பதுண்டு. அந்த வகையில் ''அங்கமலத்தயனனையார் பயிலுஞ் செல்வத் தணி யழுந்தூர்'' என்று தேரழுந்தூர் வாஸிகளான அந்தணர்கள்-நான்கு முகங்களினல் நான்கு வேதங்களையும் ஓதவல்ல நான்முகனைப் போன்றவர்கள் என்று சிறப்பித்துக் கூறினபடி.

7. அசோதை :

'யசோதா' என்கிற வடசொல்விகாரம். எசோதையென வருதலுமுண்டு. கண்ணபிரானைத் திருவாய்ப்பாடியில் வளர்த்த தாய் இவள். நந்தகோபன் மனைவி. வசுதேவர் மனைவியான தேவகிப் பிராட்டி கண்ணனைப் பெற்றவளாயினும், பன்னிரண்டாண்டு திருவாய்ப்பாடியில் வளர்ந்தருளின கண்ணபிரானுடைய திவ்விய சேஷ்டிதங்களையெல்லாம் முற்றூட்டாக அனுபவிக்கப் பெற்றவள் யசோதைப் பிராட்டியே யாவள். பெரியாழ்வார் திருமொழியில் பெரும்பாகம் யசோதைப் பிராட்டியின் அநுபவமே யாகும். ''திருவிலேனென்றும் பெற்றிலேன், எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்ருளே'' என்று தெய்வத் தேவகி புலம்பிய பாசுரத்தையும், 'ஞாலத்துப் புத்திரனைப் பெற்ருர் நங்கைமீர்! நானே மற்ருருமில்லை'' என்று அசோதை தானும் மகிழ்ந்துரைத்த பாசுரத்தையும் நினைப்பது.

8. அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் :

மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் ஆண்டாளைக் குறித்தருளிச் செய்த பாசுரங்கள் மூன்றில் ஈற்றுப் பாசுரத்தின் தொடக்கம் இது. சூடிக்கொடுத்த நாச்சியாரை அஞ்சுகுடிக்கொரு சந்ததி என்கிருர். இது சிலேடையில் அமைந்தது. அஞ்சுகுடி என்பதில் அஞ்சு என்பது 'ஐந்து' என்பதன் போலியாகவும், (பயப்படுகை என்ற பொருளில் வந்த) ஒரு வினைப்பகுதியாகவும் கொள்ளத்தக்கது. முதற்பொருளில் ஆண்டாள் ஐந்து குடும்பங்களுக்கு ஒரு புதல்வியாகத் தோன்றினவள் என்பது போதரும். ஐந்துகுடியாவது (1) பொய்கையார் பூதத்தார், பேயார் என்கிற மூவரும் ஒரு குடி. அதாவது அயோநிஜக்குடி. (2) திருமழிசைப்பிரான் பிரம்பன்குடி. (3) நம்மாழ்வார் பொற்காரியார்குடி. (4) குலசேகராழ்வார் சேரன்குடி. (5) பெரியாழ்வார் வேயர் குடி. ஆக இந்த ஐந்து குடிகட்கும் ஒரு சந்ததியாகத் தோன்றினவள் ஆண்டாள் என்பது விவட்சிதம். இந்த ஐந்து குடிகளுக்கு மட்டுமன்றிக்கே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் இவள் தானே ஒரு சந்ததியாதலால் அந்தப் பொருளும் இதில் காணக் கிடைக்கும். எங்ஙனேயென்னில்; அஞ்சுகுடி என்பதற்கு அஞ்சுகின்ற குடி என்று பொருள். எம்பெருமானுக்கு என்ன வருமோ என்று அஞ்சுதல் (மங்களாசாஸன பரதை) பெரியாழ்வார்க்கு விசேஷித்திருந்தாலும், ஆழ்வார்கள் பதின்மர்க்கும் இது சாதாரண தர்மமாகையாலே ஆழ்வார்கள் பதின்மருடைய குடியும் அஞ்சுகுடியாகும். அஞ்சுகின்றகுடி என்றவாறு. ஆக, முதற்பொருளில் ஐந்து குடும்பங்களுக்கு ஒரு சந்ததி என்றும்' இரண்டாம் பொருளில் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் இவள் ஒரு சந்ததி என்றும் தெரிவிக்கப் பட்டதாயிற்று.

9. அஞ்சுவன் வெஞ்சொல்நங்காய் :

பெரிய திருமொழியில் கள்வன்கொல் பதிகம் (3-7) தாய் பாசுரமாக அமைந்தது. பரகாலநாயகியுடன் படுத்துக்கொண்டிருந்த திருத்தாயார் ஆயாஸத்தாலே சிறிது கண்ணுறங்கினபோது மகளை வயலாலி மணவாளன் அழைத்துச் செல்வதைக் கண்டு அயல்வீட்டுப் பெண்ணொருத்தியை நோக்கிக் கூறுகிருள் 'அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய் அரக்கர் குலப் பாவை தன்னை, வெஞ்சின மூக்கரிந்தவிறலோன் திறங்கேட்கில் மெய்யே, பஞ்சியல் மெல்லடி எம்பணைத் தோளி பரக்கழிந்து, வஞ்சியந்தண் பணைசூழ் வயலாலிபுகுவர் கொலோ'(3) என்று. இந்தப் பாசுரத்தை மேலெழப் பார்க்குமிடத்து 'சூர்ப்பணகையின் மூக்கை நீக்கியதுபோல் என் மகளது மூக்கையும் அறுத்து விடுவனே என்றஞ்சுகின்றேன்' என்பதாகப் பொருள் தோன்றும். குணக்கடலான எம்பெருமான் திறத்தில் இது குணஹாநி சொன்னபடி ஆகாதோ என்று பூருவர்கள் விசாரம் செய்தபோது எம்பெருமானர் நிர்வகித்ததாக இதன் உண்மைப் பொருளைக் கிடாம்பியாச்சான் வெளியிட்டார். அதாவது, சூர்ப்பணகையின் அங்கபங்கத்தைச் சொன்னவாறே ஸ்ரீராமசீதைகளின் பிரிவே நினைவுக்கு வரும்; எனவே 'முன்பு இருவருமாய்ப் புறப்பட்டுச் சென்று சூர்ப்பணகையின் சேஷ்டிதத்தினல்தானே பிரிய நேர்ந்தது. அதுபோல் இப்போதும் இவர்கட்கு விதிவசத்தால் பிரிவு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சுகின்றேன்' என்கிருள் பரகால ஜநநி-என்று.

10. அடையார்சீயம் :

திருமங்கையாழ்வார்க்குப் பல பிருதுகள் வழங்கிவரும். அவற்றுள் ''அடையார் சீயம்'' என்பதுமொன்று. காழிச் சீராமவிண்ணகர்ப் பதிகத்தின் நிகமனப் பாசுரத்தில் ''அருள் மாரியரட்டமுக்கியடையார் சீயம்....கொற்றவேற் பரகாலன்'' என்றுள்ளது. இதைப் பார்க்கும்போது ஆழ்வார் தம்மைத்தாமே போரப் பொலியப் பெருமைப்படுத்திக்கொண்டு இப்படி ஸாதிக்கலாமா என்கிற சங்கைதோன்றும். நன்னூலில் ''தோன்றுதோற்றித் துறை பல முடிப்பிலும் தான் தற்புகழ்தல் தகுதியன்றே'' என்று முன்னஞ்சொல்லிவிட்டு, உடனே ''மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும், தன்னை மறுதலை பழித்த காலையும், தன்னுடை ஆற்றல் உணராரிடையினும், தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே'' என்று கூறியுள்ளதைக் காணவேணும். அருள்மாரி, அரட்டமுக்கி, அடையார்சீயம் என்னுமிந்த விருதுகள் ''ஒரு குறளா யிருநிலம்'' என்னும் பதிகத்தின் ஈற்றுப் பாசுரத்திலுள்ளன என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம். திருமங்கையாழ்வார் சரிதை காண்க.

(தொடரும்)

குமரி மாவட்டக் கிராமத் தெய்வங்கள்

திரு. ஏ. ஏகாம்பரநாதன், எம். ஏ.,

தமிழகத்தில் சிவன், திருமால், முருகன், விநாயகர், சக்தி முதலிய பெருந் தெய்வங்களன்றி, சிறு தெய்வங்களும் எண்ணிறந்த அளவில் வழிபடப்பட்டு வருகின்றன. மதுரைக்கு வடக்கிலுள்ள மாவட்டங்களில் ஐயனர், கறுப்பன், முனியன், பேயன், ரேணுகை, செல்லியம்மன் முதலிய கிராமத் தெய்வங்கள் வழிபாட்டிற்குரியனவாகத் திகழ்கின்றனர். ஆனல் குமரி மாவட்டத்தில் இத்தெய்வங்களுக்கு மாருக சுடலைமாடன், காலன், செங்கிடாக்காரன், வீரசாம்பான், வெட்டிமுறிச்சான், மன்றராஜா, மயானசாமி, இசக்கி, நீலி முதலிய தெய்வங்களே சிறப்பாகக் கருதப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ளவைகளில் சில தெய்வங்கள் நெல்லை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் வணங்கப்பட்டு வருதலைக் காணலாம். இக்கட்டுரையில் ஒருசில குமரி மாவட்டக் கிராமத் தெய்வங்களைப் பற்றிய செய்திகளை மட்டும் காண்போம்.

சுடலைமாடன்:

குமரி மாவட்டத்தில் பெரும்பாலான ஊர்களில் காணப்படும் சிறு கோயில்கள், இத்தெய்வத்திற்குக் கட்டப்பட்டவையாகும். இறந்தவர்களின் உடலை எரிக்கும் சுடலையில் ஆடும் சிவனது ஒரு அம்சமே இத்தெய்வம் எனக் கருதப்படுகிறது. சுடலைமாடனுக்குக் கட்டப்பட்ட கோயில்கள் பெரும்பாலும் நீள்சதுரவடிவமான பீடத்தையும், அதன்மேல் முக்கோண வடிவமான கட்டட அமைப்பினையும் கொண்டவையாகும். சில இடங்களில் தூண் போன்ற அமைப்புடைய கருங்கல்லில் இறைவனது வடிவத்தினைச் செதுக்கி, அதனைத் தனியாகவோ அல்லது பீடமொன்றிலோ நிறுவி வழிபாடு நடத்தப்படுகிறது. இவையன்றி சில தனிக் கோயில்களில் சுடலைமாடனது கல் திருவுருவங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் கையில் வாளினைக் கொண்ட வீரனைப் போன்ற ஓர் உருவம் இடம் பெற்றுள்ளதேயன்றி, சிவனது திருவுருவ அமைப்புகள் எதுவும் காணப்படவில்லை. பெரும்பாலான கோயில்களில் இக்கிராமத் தெய்வத்திற்கு ஈட்டி அல்லது அரிவாள் ஆயுதமாக வைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக ஆண்டுக்கொரு முறை மாடனுக்குத் திருவிழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின்போது 'கணியான் ஆட்டம்' என்னும் நிகழ்ச்சி முக்கியமாக நடைபெறுகிறது. இறைவனது பிறப்பு, வீரச்செயல்கள் முதலியன பற்றி இருவர் பாட, அதற்கேற்பப் பெண்வேட மணிந்த சிலர் நடனமாடுகின்றனர். வழிபாட்டின்போது இத்தெய்வத்திற்குக் கிடா, கோழி முதலியன பலி கொடுக்கப்படுகின்றன. வெறியாடலும், குறிசொல்லுதலும் வழிபாட்டின் பிற முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

கற்றூண் போன்ற அமைப்புகளில் வீரனைப் போன்று இத்தெய்வம் செதுக்கப்பட்டிருப்பதை நோக்கும்போது, பண்டை நடுகல் வழிபாடு சுடலைமாடன் வழிபாட்டிற்கு முன்னோடியாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்று எண்ணுதற்கு இடம் உள்ளது. மேலும், இவ்விறைவன் சுடலையில் (சுடுகாட்டில்) ஆடுபவன் என்று கருதப்படுவதால் இறந்தவர்களுக்கும், இத்தெய்வத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனை அறியலாம்.

வீரசாம்பான்:

இக் கிராமத் தெய்வத்திற்கெனத் தனிக் கோயில்களும், சிற்பங்களும் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஓரிரு கோயில்களில் மட்டும் வீரசாம்பானுக்கென்று தனியிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தெய்வ வழிபாடு கோயில்களில் நடைபெறுவதற்குப் பதிலாகத் தற்போது இல்லங்களில் மட்டும் நடைபெற்று வருகிறது. பொதுவாக, வீரசாம்பானுக்கென்று விழா எடுத்தல் மரபில்லாவிடினும், மக்கள் தனியாக இத்தெய்வத்திற்குப் படைத்து மகிழ்கின்றனர். ஆண்டுக்கொருமுறை இக் கிராம தெய்வத்திற்கு வீட்டின் முற்றத்தில் மீன், மாமிசம், மது வகைகள், பொரி, பழம், பூ முதலியன படைக்கப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது. படைக்கப்படும் பொருட்கள் பனை ஓலையால் செய்யப்பட்ட பட்டைகளில்தான் வைக்கப்படுகின்றனவேயன்றி மட்பாண்டங்களிலோ, உலோகப் பாத்திரங்களிலோ வைக்கப்படுவதில்லை. மேலும் வழிபாடு முடிந்த பின்னர் படைக்கப்பட்ட பொருட்களை மக்கள் முற்றத்தில் வைத்து உண்ணுகின்றனரேயன்றி, வீட்டினுள் எடுத்துச் செல்வதில்லை. ஏனெனில், இத்

தெய்வம் துர்ப்பழக்கங்களையுடையதெனவும், தூய்மையற்றதெனவும் கருதப்படுகிறது.

வைணவ சமயத்தில் இடம்பெற்றுள்ள பஞ்ச வீரர்களுள் ஒருவனான சாம்பவன் என்னும் தெய்வமே பிற்காலத்தில் வீரசாம்பான் என்று கருதப்பட்டிருத்தல் வேண்டும். வட இந்தியாவில் மதுரா நகரில் தோன்றிய பஞ்ச வீர வழிபாட்டில் கிருஷ்ணன், சங்கருஷ்ணன் (பலராமன்), அநிருத்தன், பிரதியும்னன், சாம்பவன் ஆகிய ஐவரும் இடம்பெற்றனர். இவர்களுள் சாம்பவன் கெட்ட பழக்க வழக்கங்களையுடையவனாதலின் பிற்காலத்தில் பஞ்ச வீர வழிபாட்டினின்றும் நீக்கப்பட்டான். இது பற்றிய செய்திகளை வடமொழி இலக்கியங்களில் காணலாம். வட நாட்டிலிருந்து பரவிய இவ்வழிபாடு தமிழகத்தில் சங்க காலத்தில் இருந்தமையை,

''செங்கட் காரி கருங்கண் வெள்ளை

பொன்கட் பச்சை பைங்கண் மால்'' (பரிபாடல், *3,11.81-82*) என்னும் பரிபாடல் பகுதியால் அறியலாம். இப்பகுதியில் சிவந்த கண்களையுடைய வாசுதேவ கிருஷ்ணனையும், வெள்ளை நிறத்தையுடைய பலராமனையும்,, பொன் நிறத்தை ஒத்த பிரதியும்நனையும், பசிய கண்களையுடைய அனிருத்தனையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளதேயன்றி, சாம்பவனைப் பற்றிய செய்திகள் இல்லை (Dr. R. Champakalakshmi, "Some Iconographic concepts in Tamil Country" (Ph. D. Thesis) P. 97) எனவே, சங்ககாலத்தில் சாம்பவன் ஐவர் வழிபாட்டினின்றும் நீக்கப்பட்டுவிட்டான் என்பது தெளிவாகும். இச்சாம்பவன் நாளடைவில் சிறு தெய்வமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

தற்போது வீரசாம்பான் என்று பெயர் பெறும் கிராமத் தெய்வத்திற்குக் கூறப்படும் குணநலன்களும், பஞ்ச வீரர்களுள் ஒருவனாகிய சாம்பவனது இயல்புகளும் வேறுபாடின்றிக் காணப்படுவதால், சாம்பவனும், வீரசாம்பானும் ஒருவரே என்பது முடிவாகும். (இருவரும் வீரர்கள் என்றே கருதப்படுகின்றனர்).

வெள்ளைக்கார சுவாமி :

தமிழகத்தில் வேறெந்தப் பகுதிகளிலும் வழிபடப்படாத வெள்ளைக்காரசுவாமி என்னும் கிராம தெய்வம், குமரி மாவட்டத்தைச் சார்ந்த பூவியூர் என்னும் ஊரில் வணங்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆட்சி செய்து வந்த காலத்தில்தான் இவ்வழிபாடு ஏற்பட்டிருக்க வேண்டும். இத்தெய்வத்தைப் பற்றிச் சுவையான செய்தி ஒன்று கூறப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர் ஒருவர் குமரித் துறைக்கருகில் கப்பலில் பயணம் செய்துகொண்டிருந்தபோது செங்கிடாக்காரன் என்னும் கிராமத் தெய்வம் அவரைப் பிடித்து வந்தார் எனவும், அவ் ஆங்கிலேயரை மக்கள் தெய்வமெனக் கருதி வழிபடலாயினர் எனவும் கூறப்படுகிறது. பூவியூரிலுள்ள சிவன் கோயிலின் தென்புறத்தில் ஆங்கிலேயராகிய அவ்வெள்ளைக்காரருக்குத் தனிக்கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஆங்கிலேயரின் சிற்பம் எதுவுமில்லை. ஆண்டுக்கொருமுறை கொண்டாடப்படும் விழாவின்போது இத்தெய்வத்திற்கு மது, மாமிசம், சுருட்டு முதலியன படைக்கப்படுகின்றன. வழிபாட்டின்போது வெறியாடுபவர் படைக்கப்பட்டுள்ள மது, மாமிசம் முதலியவற்றை உண்டு, குறிசொல்லும்போது ஆங்கிலத்திலேயே சில சொற்களைக் கூறுவதைக் கண்ணுறும்போது வியப்பாக இருக்கிறது. மேலும் வெறியாடுபவருக்கு ஆங்கில நாட்டுப் பாணியில் உடையணிவித்து, கையினில் மரத்தால் செய்யப்பட்ட துப்பாக்கியினை வழிபடுவோர் கொடுக்கின்றனர். மேற்குறிப்பிட்டுள்ள செய்திகள் சற்று விந்தையாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இயக்கி (இசக்கி) :

குமரி மாவட்டத்தில் வணங்கப்பட்டுவரும் கிராமப்புறப் பெண்தெய்வங்களுள் முக்கியமானது இயக்கியாகும். இவள் தற்போது காளியின் ஒரு அம்சமாகக் கருதப்படுகிறாள். இத்தெய்வத்திற்கு ஊரின் ஒருபுறத்தில் சிறிய கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இக்கோயில்களில் மிக்கவாறும் இயக்கியின் சுடுமண் உருவங்களே இடம் பெற்றுள்ளன. இத்தெய்வம் அச்சத்தைக் கொடுப்பவளாகவும், தீயவர்களை அழிப்பவளாகவும் கருதப்படுகிறது. பொதுவாக அறுவடை முடிந்த பின்னர் இவளுக்கு விழாவெடுத்தலையும், அவ்விழாவின்போது ஆடு, கோழி முதலியன பலி கொடுக்கப்படுவதையும் காணலாம். மக்கள் தங்கள் எண்ணங்கள் நிறைவேறும் பொருட்டு நேர்த்திக்கடன் செலுத்தியும் வருகின்றனர். மகப்பேறற்ற பெண்டிர், இயக்கியை வழிபட்டு மரத்தால் செய்யப்பட்ட சிறிய தொட்டிலினைக் காணிக்கையாகச் செலுத்தினல் மகப்பேறடைவர் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

சிலப்பதிகார காலத்தில் இயக்கி சமண சமயத் தெய்வமாக விளங்கியிருக்கிறாள். இதனை

''அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கி......''
(சிலம்பு *15:115-116*)

என்னும் அடிகளால் அறிய வருகிறோம். சமண சமயத்தைச் சார்ந்த ஆயர் முதுமகளாகிய மாதரி என்பாள் இயக்கிக்குப் பால்சோறு படைத்து வழிபட்டமை சிலப்பதிகாரம் கூறும் செய்தியாகும். இயக்கி என்னும் பெயர் 'யக்ஷி' என்னும் வடமொழிப் பெயரின் தமிழாக்கமாகும். ஆதலால் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயக்கி சமணத்தைச் சார்ந்த யக்ஷியேயாகும். (Dr. N. Subramaniam, 'Pre-Pallavan Tamil Index' — P. 107.) குமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளிலுள்ள சில கிராமங்களில் இயக்கி 'யச்சி' 'யக்ஷி' என்னும் பெயர் பெற்றுள்ளமை ஈண்டு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். எனவே பண்டைத் தமிழகத்தில் சமண சமயத்தவரால் வழிபடப்பட்டு வந்த இயக்கி, இந்து சமயத்தவரால் தற்போது

இயக்கி அல்லது இசக்கி என்ற பெயரால் வழிபடப்பட்டு வருகிறதென்பது தெளிவாகும்.

நீலி :

நீலி என்பது இயக்கியைப் போன்ற மற்றொரு பெண் தெய்வமாகும். இத் தெய்வத்திற்கு நெல்லை மாவட்டத்தின் தென்பகுதியிலுள்ள பழவூர் என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள கோயில் முக்கியத்துவம் வாய்ந்தது. இதனுல் இவ்விறைவியைப் 'பழவூர் நீலி' என்றே குறிப்பிடுகின்றனர். குமரி மாவட்டத்தின் தென் பகுதியிலுள்ள ஊர்களில் முன்னர் நீலிக்கென ஓரிரு சிறுகோயில்கள் இருந்தன வென்றும், பிற்காலத்தில் நீலியும், இயக்கியும் ஒன்றெனக் கருதப்பட்டதால் இயக்கி கோயில்களே கட்டப்பட்டனவென்றும் கூறப்படுகிறது. ஆனுல் இம்மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள கிராமங்களில் நீலி வழிபாடு இன்றும் முக்கியமாக நடைபெற்று வருகின்றது. இத்தெய்வத்திற்கென்று, சிறிய தனிக்கோயில்கள் பல கட்டப்பட்டுள்ளன. ஆனுல் இப்பகுதியில் நீலி, இயக்கியின் தங்கையாகக் கருதப்படுவதால், நீலி கோயில்களுக்கு அருகில் இயக்கிக்கும் கோயில்கள் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம். இத்தெய்வம் நள்ளிரவில் பெண் வடிவங்கொண்டு அவ்வழிச் செல்லும் ஆடவர்களைத் தன்வயப்படுத்திக் கொல்லும் தன்மையுடையதென்று கருதப்படுவதால், நீலிப்பேய்' என்னும் பெயரினையும் பெற்றுள்ளது.

சிலப்பதிகாரத்தில் 'நீலி' என்பது கொற்றவைக்கு வழங்கிய பெயர்களுள் ஒன்ருகும். (சிலம்பு:12:70) கொற்றவையைத் தவிரத் தனியாக 'நீலி' என்றொரு பெண் தெய்வம் இருந்ததற்குச் சிலப்பதிகாரத்தில் சான்றுகளில்லை.

தொண்டை நாட்டிலுள்ள பழையனூர் எனப்படும் திருவாலங்காட்டில் நீலி என்னும் அந்தணர் குலப்பெண், தன் தீயஒழுக்கமுடைய கணவனுல் கொல்லப்பட்டுப் பின்னர் பேய் வடிவுற்று தனது கணவனையே கொன்றதாகக் கதை ஒன்று கூறப்படுகிறது. இச் செய்தியினைத் தேவாரத்தில் திருஞானசம்பந்தர்,

''முனை நட்பாய் வஞ்சப் படுத் தொருத்தி வாணுள் கொள்ளும் வகைகேட்டு அஞ்சும் பழையனூர்''
(தேவாரம்: திருவாலங்காட்டுப்பதிகம், பா 1)

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, சம்பந்தர் காலத்தில் நீலி என்பவள் பழையனூரில் வாழ்ந்து, பின்னர் பேய்வடிவம் பெற்ற பெண் மகளாவாள். இந்நீலிப் பேய்க்கு முனிசந்திர பட்டாரகர் என்னும் சமணத்துறவி நல்லறிவு புகட்டி, மக்களை நல்வழிப்படுத்தும் மாண்புடையவளாகச் செய்தார் என்றும், இவளே சமணக்காப்பியத் தலைவியாகிய நீலகேசி என்றும் அறியவருகிருேம். (நீலகேசி பதிகம்-4) எனவே சிலப்பதிகார காலத்தில் நீலி, கொற்றவையாகவும், தேவார காலத்தில் பேயுருப்பெற்ற பெண்ணுகவும், அதற்குப் பிற்பட்ட காலத்தில் சமண சமயத்தைச் சார்ந்த நீலகேசியாகவும் திகழ்கிருள்.

தொண்டை நாட்டுப் பழையனூரில் வாழ்ந்து பேயுருவம் பெற்ற நீலியே, நெல்லை மாவட்டத்தின் தென்பகுதியில் பழவூர் நீலியாக வழிபடப்பட்டு வருகின்ருள். பழையனூர் நீலிக்கும், பழவூர் நீலிக்கும் கூறப்பட்டுள்ள குணநலன்கள் ஒன்றேயாகும். மேலும் ஊர்ப் பெயர்களிலும், சிறிது ஒற்றுமை காணப்படுகிறது. (பழவூர் என்பது பழையனூரின் மருவிய பெயராகவும் இருக்கலாம்). குமரி மாவட்டத்தில் தற்காலத்தில் நீலியும், இயக்கியும் ஒருவரே எனவும்; அக்காள்-தங்கை எனவும் இருவிதமாகக் கருதப்படுகிறது.

கிராமத் தெய்வ வழிபாடும், மக்கள் வாழ்க்கையும் :

கிராமப்புற மக்களது பண்பாட்டினை அவர்களது தெய்வ வழிபாட்டிலிருந்து ஓரளவு அறிய முடியும். இத்தெய்வங்களைத் தவருது வழிபட்டு வந்தால் நோய், துன்பம் முதலிய குறைகள் தவிர்க்கப்படும் என்று, மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இயக்கியன்னையை வணங்கினுல் மகப்பேறு கிடைக்கும் என்ற எண்ணத்தில் மகப்பேறற்ருேர் வழிபாடு செய்கின்றனர். தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குக் கிராம தெய்வங்களின் பெயரை இடுதல் சில பகுதிகளில் வழக்கமாக உள்ளது. உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாததால் பயிர்த்தொழில் செய்யும்முன்னரும், அறுவடை செய்த பின்னரும் இத்தெய்வங்களுக்குத் தனி வழிபாடு நடத்தப்படுகிறது. மழையின்மை, பஞ்சம், தொற்றுநோய் முதலியன ஏற்பட்டால் இத்தெய்வங்களுக்குப் பலிகொடுத்து விழாக் கொண்டாடப்படுகிறது. நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டாத சில வழக்குகளை ஊரிலுள்ள பெரியோர் கிராமதேவதை கோயில்களில்கூடிப் பரிசிலனை செய்து, தீர்ப்பு வழங்குவதை இன்றளவும் காணலாம். சில சமயங்களில் உண்மையறிவதற்கு இத்தெய்வங்களின் முன்னிலையில் 'சத்தியம் செய்தல்' வழக்கமாக உள்ளது. கிராம மக்கள் ஒற்றுமையுடன் கூடி வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் ஆண்டுக்கொருமுறை சிறப்பாகத் திருவிழா கொண்டாடப்படுகிறது. ஆனுல் தற்போது காலத்தின் போக்கினுலும், சமுதாய வளர்ச்சியினுலும், கிராமத் தெய்வ வழிபாடு சிறிது சிறிதாகக் குன்றி வருவதைக் காணலாம்.

பேசாதிருந்தால் ஏசாரோ?

டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, எம்.ஏ.பி.எச்.டி.
தத்துவப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்

கற்பவர், கேட்பவர் ஆகியவர்களின் உள்ளங்களை உருக்குந் தன்மை வாய்ந்தது திருவாசகம் என்பது இந்நூலைப் பயில்பவர் அனைவருக்கும் உடன்பாடு. மாணிக்கவாசகர் உள்ளம் உருகிப் பாடிய நூலாதலின் அதனைக் கற்போர்க்கும் கேட்போருக்கும் இவ்வுருக்கம் ஏற்படுகிறது. கற்கண்டின் எப்பகுதியும் இனிப்பது போல இந்நூலின் எப்பாடலும் சுவையுடையதெனினும் எடுத்துக்காட்டாக இங்கே ஒரு பாடலைப் பார்ப்போம்.

''அரைசே, பொன்னம் பலத்தாடும்
அமுதே யென்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக் கொத்திரவு பகல்
ஏசற்றிருந் தேவே சற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய் போலப்
பேசா திருந்தால் ஏசாரோ?''

'மன்னனே! பொன்னம்பலத்தில் திருநடனம் செய்கின்ற அமுதமே! என்று (உன்னைப் போற்றி) உன் திருவருளையே எதிர்நோக்கி இரை தேடுகின்ற கொக்கைப்போல் இரவு பகலாக (ஓயாது) வருந்தி வாட்டமுற்றேன். (நான் இவ்வாறிருக்க) வீடாகிய கரையை அடைந்த அடியார்கள் மகிழ்ச்சி மிக்கவர்களாயிருக்கும்படி அவர்களுக்குக் காட்சி கொடுத்து உன் அடியவனாகிய என்னிடத்தில் பிரைகலந்த பாலில் நெய் மறைந்திருப்பது போலப் பேசாதிருந்தால் உன்னை ஏசமாட்டார்களோ?-என்பது இதன் பொருளாகும்.

இப்பாடலில் இறைவனின் அருள் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று இடைவிடாது ஏங்கி நிற்கும் தம் நிலையையும், தமக்கு அவ்வருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும், அருள் பெற்றவர்கள் பலர் உளர் என்கிற உண்மையையும், இறைவனையே நம்பியுள்ளோர் அவனருளைப் பெறவில்லையெனில் இறைவனை உலகவர் ஏசுவர் என்னும் உலகியலையும் மாணிக்கவாசகர் புலப்படுத்துகிறார். இப்பாடலில் ஆளப்பெறும் இரு உவமைகள் சற்றுக் கூர்ந்து நோக்கத்தக்கவை. 'மடைத்தலையில் ஓடு மீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்பது மூதுரையில் காணப்படும் உவமை. சிறுமீன்கள் பல நீரோட்டத்தில் சென்று கொண்டிருக்கும் போது அவற்றைப் பிடிக்காமல் தனக்கு உற்ற பெரிய மீன் வரும்போது அதனைப் பிடித்துக் கொள்வது கொக்கின் இயல்பு. இங்ஙனமே வாழ்க்கையில் கிடைக்கக்கூடிய சிறு இன்பங்களைத் தேர்ந்தெடுக்காமல் வாழ்க்கையின் முடிந்த பயனாகிய இறையின்பத்தையே நாடி அதனைப் பெற முயல்வது விழுமியோர் செயல். அவ்வின்பம் கிடைக்கும்வரை காத்திருந்து அது கிடைக்கக் கூடிய சமயத்தில் அதனை நழுவ விடாமல் பற்றிக் கொள்வது அறிவுடைமையாகும். பொறுத்திருக்க வேண்டிய காலத்தில் பொறுத்திருத்தலும், அப்பொறுமைக்குக் காரணமாகப் பின்னர்ப் பெறக்கூடிய விழுமிய பொருள் ஒன்று இருப்பதும், அதனைப் பெறுதற்கு ஏற்ற காலம் வாய்த்தபோது அதனைப் பயன்படுத்திக் கொள்வதும் வேறொரு வகையில் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கொக்கொக்க கூம்பும் பருவத்து, மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து

இனி, அடுத்த உவமை, 'பிரைசேர் பாலில் நெய் போல' என்பதாகும். இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான்; ஆயின் கரந்து எங்கும் பரந்துளன். அவன் வெளிப்படுவது ஆன்மாக்களின் பக்குவத்திற்கும் முயற்சிக்கும் ஏற்ப உளது. விறகில் தீயைப்போலவும், பாலில் நெய்யைப் போலவும், மணியில் ஒளியைப் போலவும், இறைவன் கரந்தும் மிக்குக் கரவாமலும் நிற்பதை அப்பர் அடிகள் கூறுவது அன்பர்களுக்கு நினைவிருக்கலாம். பிரைசேர் பாலில் நெய்போல வெளிப்படுவதற்கான நிலையிருந்தும், அது முதிர்ந்து வெளிப்படவில்லையானால் ஏமாற்றம் மிகுதியாகும்;'நெய் வெளிப்பட்டது: பயன்பட்டது' என்பது 'கரைசேர் அடியார் களிசிறப்ப' இருப்பதால் பெறப்படும். அவர்களுக்கு மறைப்பின்றி இறைவன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டான்; தன்னை நன்றாகக் காணுமாறு காட்சி கொடுத்தான். காட்சி பெற்ற அவர்கள் மகிழ்ச்சி மிக்கவரானார்கள் என்பதெல்லாம், மாணிக்கவாசகருக்கு நம்பிக்கையையும் ஆற்றாமையையும் ஒருங்கே ஏற்படுத்துகின்றன. காட்சி பெற்றவர்கள் உண்டென்பதால் நம்பிக்கையும், தமக்கு இன்னும் கிடைக்கவில்லையே என்பதால் ஆற்றாமையும் ஏற்படுகின்றன. பின்னொரு பாடலில் இறைவன் அருள் தமக்கு ஏற்படுவதற்கு முன் தாம் இவ்வுடலை நீத்தால் உலகவர் ஏசுவதுடன்

சிரிக்கவும் மாட்டார்களா?-என்பதையும் மாணிக்கவாசகர் குறிப்பிடுகிருர். 'அடியார் படுவதிதுவே யாகில் எம்போலிகள் உமைத்தெளியார்' என்கிருர் அப்பர். அதைப்போல உலகவருக்குத் தெளிவு ஏற்படுத்துவதற்காகவாவது இறைவன்தன் அடியார்களுக்கு அருள்பாலிக்க வேண்டாவா? இறைவன் தன்னையாட்கொள்ளவில்லையானல்—பசுவாகிய தன்னைப் பதியாகிய அவன் காவாவிடில்-ஆள்வாரிலிமாடாக வன்றே தாம் ஆக நேரிடும்? இனி, இறைவனே தமக்கு அருள் தரவில்லை யெனில், 'அஞ்சேல்' என்று தமக்குத் தஞ்சம் தரவல்லவர் யாவர்? ஒன்றுக்கும் பற்ருத தம்மையுமோர் பொருளாகக் கொண்டு தம்முள் புகுந்தாண்ட பொன்னம்பலத்து அமுதான இறைவன், மருள் சேர்ந்த மனத்தோடு அவனைப் பிரிந்து வருந்தும் தம்மை அடியவர்களுடன் தானிருந்து விளையாடும் இடத்திற்கு அழைத்துத் தெளிவடைந்த அடியவர்களின் கூட்டத்தைக் காட்டுவதற்கு முன் தம்மைச் சாக விட்டுவிட்டால் உலகம் சிரியாதோ?

'மருளார் மனத்தோடு உனைப் பிரிந்து வருந்துவேனை' என்று அடிகள் கூறுவதால், இறைவனைப் பிரிந்து உலகியலில் மயங்கி நிற்கும் நிலை மருள்நிலை என்பதும், அவனுடன் கலந்து நிற்கும்நிலை அருள்நிலை என்பதும் பெறப்படும். எச் சமயத்தவராயினும் திருவருட் செல்வர்கள் அனைவருமே 'இன்பம் உம்மை ஏத்தும் நாட்கள்; துன்பம் உம்மைத் தொழாத நாட்கள்' என்னும் கருத்தினர்.

இறைவனேடு கலந்து நிற்பதால் ஏற்படும் இன்பத்தையும், அவனைப் பிரிந்து நிற்பதால் விளையும் துன்பத்தையும் மாணிக்கவாசகர் பாடல்களில் பரக்கக் காணலாம். இறைவனேடு தாம் உரையாடுவதையும், அதைவிட அவன் தம்மோடு உரையாடுவதையுமே இவர் பெரிதாகக் கருதுகிருர். காட்சி பெறுவதோடு அமையாது அவன் தம்மோடு பேசுவதையும் விரும்பி நிற்கிருர். அவ்வாறு இறைவன் தம்முடன் பேசவில்லையெனில் தம் குறையைக் கேட்பவர் யார்-தீர்ப்பவர் யார்? 'நைந்து நிற்கும் நான், ஞானச் சுடரே, உன்னையன்றி வேருேர் துணை காணேன் பஞ்சேரடியாள் பாகத்தொருவா! (திருவருளோடு கூடி நிற்பவனே!) உன் பவளத் திருவாயால் அஞ்சேலென்ன ஆசைப்பட்டேன்' என்கிருர் பிறிதோரிடத்தில்.

ஆக தனக்கு உற்ற உணவு கிடைக்கும் வரை வாடிக் காத்திருக்கும் கொக்கைப்போல, அமுதாகிய இறைவனின் இன்னருளுக்காகத் தாம் காத்திருப்பதாகவும், அடியார்களுக்குக் காட்சி கொடுத்து அவர்களைப் பேரின்ப நிலையில் ஆழ்த்தியுள்ள இறைவன், அவன் அடியவனுகிய தம்மிடத்தும் அவ்வாறே அருள்புரிய வேண்டுமென்றும், அவனருளன்றி அணுவும் அசையாதென்பது உண்மை யெனினும் அவ்வருள் பிரைசேர் பாலில் நெய்போல வெளிப்படாமலிருப்பதன்றி நன்கு வெளிப்பட்டும் இறைவன் தம்முடன் பேசவேண்டும் என்று நிற்பதுபோல, மாணிக்கவாசகர் கேட்டுக் கொள்கிருர்.

திருவாய்மொழி

திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப்
படர்பொருள் முழுவதும் ஆய்,அவை அவைதொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்து,எங்கும் பரந்துஉளன்;
சுடர்மிகு சுருதியுள் இவைஉண்ட சுரனே!

பத்துடை அடியவர்க்கு எளியவன், பிறர்களுக்கு அரிய
வித்தகன், மலர்மகள் விரும்பும்நம் அரும்பெறல் அடிகள்!
மத்துறு கடைவெண்ணெய் களவினில் உரவிடை யாப்புண்டு
எத்திறம், உரலினேடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே!

பிணக்குஅற அறுவகைச் சமயமும் நெறிஉள்ளி உரைத்த
கணக்குஅறும் நலத்தனன்; அந்தம்இல் ஆதிஅம் பகவன்;
வணக்குஉடைத் தவநெறி வழிநின்று, புறநெறி களைகட்டு,
உணக்குமின் பசைஅற! அவனுடை உணர்வுகொண்டு உணர்ந்தே!

—நம்மாழ்வார்

பேதையும் மேதையுமான சீதை

"முதுபெரும் புலவர்" திரு. புரிசை சு. முருகேச முதலியார்,

திருவண்ணாமலை

(முற்றொடர்ச்சி)

சிரித்த முகம் :

ஓரறிவு முதலாய் ஆறறிவு வரை வளர்ச்சி பெற்றுவரும் உயிர்களுக்கு, மாக்களின் நீங்கி மனிதவடிவு பெற்றமைக்குள்ள சிறப்பியல்புகள் இரண்டு. ஒன்று இருப்பு, மற்றது சிரிப்பு. நடத்தல் நிற்றல் இருத்தல் கிடத்தல் ஆகிய நான்கு நிலைகளில், நடத்தலும் நிற்றலும் கிடத்தலுமே மாக்களுக்கெல்லாம் இயலுவன. இருத்தல் ஒன்றும் மக்களுக்கே இயலும் செயலாகும். இனி, நிற்றலுக்கும் இருத்தலுக்கும் இடைநிலையொன்றும் உண்டு. அது குந்துதல். குந்துதல், பூனை புலி குரங்கு முதலியவற்றின் பால் காணப்படும் நிகழ்ச்சி. குந்துதல், கால்களை முழுமையாக மடிக்க முடியாமல், நிற்பதிலும் சேராமல், இருத்தலிலும் சேராமல் நிற்கும் இடைநிகழ்ச்சியாகும். இது மாக்களின் பாலன்றி மனிதரிடத்தும் காணப்பெறுகின்றது. இவர்கள் தாம் செய்துவரும் தவறுதலுக்கு மற்றவையும் உடனுக்க ''வாங்க! இப்படி குந்துங்க'' என வரவேற்புரை வழங்குவதும் உண்டு. இவ்வகையோர் குரங்கினின்றும் மனிதன் தோன்றினர் எனும் கருத்தில், முதல் மனிதர்களோ என ஐயுறத் தக்கவர்களாவர்.

இனி சிரிப்பிற்குச் செல்லுவோம். இருப்பு கால்களின் அமைப்பால் இயலும் செயலெனக் கொண்டதுபோல, சிரிப்பும் பற்களின் அமைப்பால் இயலுகின்றது எனக்கொள்ளுதற்கில்லை. ஏன் எனில், மனிதரைவிட குதிரை முதலிய விலங்குகள் மேல்வாயிலும் கீழ்வாயிலுமாக நிறைந்த நீண்ட சிறந்த பற்களைப் பெற்றிருக்கின்றன. பெற்றிருந்தும் அவற்றின்பால் சிரிப்பினைக் காண முடிவதில்லை. இதனால் சிரிப்பிற்கு உள்ளத்தின் உணர்வும் வேண்டும். அறத்தையும்-மறத்தையும், நலத்தையும்-கேட்டையும் நன்கறிந்த உள்ளங்களுக்கு அவற்றில் மாறுபட நடக்கின்றவர்களைக் காணுங்கால் நிகழும் வியப்பின் மெய்ப்பாடே சிரிப்பெனும் பெயர் பெற்றுச் சிறக்கின்றது. அவ்வியப்பின் வெளிப்பாட்டினுக்கு முதலில் அவர்களது திருமுகம் உதவி புரிகின்றது. அத்திருமுகத்துடன் பல்வரிசைகளும் கூடி உள்ளக்கிடக்கையை உலகிற்கு வழங்குகின்றன.

சிரிப்பிற்குப் பல்வரிசைகள் துணைக்கருவிகளேயன்றி, முதற் கருவிகளல்ல என்பதனை உன்னியுணர வேண்டும். பற்களே முளைக்காத குழந்தைகளும் சிரிக்கின்றன. பற்களையே முழுதுந் துறந்த கிழவர்களும் சிரிக்கின்றார்கள். கட்டுப் பற்களையே கைக்கொண்ட கனதனவான்களும் சிரிக்கின்றார்கள். ஒட்டுப் பற்களுக்கும் மட்டில்லாத மாண்பினைத் தருகின்றது எது? அவர்கள் தம் உள்ளத்தின் உணர்வே யல்லவா?

இவையன்றிப் பற்களில்லாதவர்பாலும் சிரிப்பைக் காண முடிவதைப் போல மற்றொரு வியத்தகு செயலும் உலகத்தில் உண்டு. அது யாதெனில், பிரமதேவன் சில ஆண்களுக்கும் பெண்களுக்கும் மிக அழகான திருமுகங்களைப் படைத்தளித்துளன். அம்முகங்களுக்கேற்ற அழகமைந்த இயற்கைப் பற்களும் இலங்குகின்றன. ஆனால் சிரிப்பெனப்படுவது அவர்கள் சென்மத்திலும் வருவதேயில்லை. இந்த அதிசயப் பிறவிகளுக்குச் சிரிப்பே வராததற்குக் காரணமென்ன? நாம் இந்த உலகத்தில் எப்படி பிழைக்கப் போகின்றோமென்ற ஏக்கந்தான். ஓ! அவர்கள் ஏழைகளாவெனக் கேட்க வேண்டாம், கருதவும் வேண்டாம். இந்தச் சிரிப்பே வராத நோய் பற்றியவர்களில் பெரும்பாலோர் பெரிய செல்வந்தர்களேதான்.

ஒரு செல்வச் சிறப்பாளன் மனைவி, அவளும் செல்வக்குடியிற் பிறந்து செல்வக் குடியில் புகுந்தவள். எப்பொழுதும் சிரித்த முகமுள்ளவள். அவளது மணாளன் அதற்கு நேர்மாறானவன். இருவரும் ஒரு விரைந்த ஊர்தியில் வேற்றூருக்குச் செல்லுகின்றார்கள். அவர்கள் செல்லும் தெருவில் ஒரு சின்னஞ்சிறு சிறுமி தேம்பித் தேம்பி அழுகின்றனள். ஊர்தியில் செல்லும் அந்நல்லாளுக்கு அச்சிறுமியின் துன்பத்தைக் கண்டபின் அவளைத் தேற்றாது செல்ல முடியவில்லை. உடனே ஊர்தியை நிறுத்தச் சொல்லி இறங்கிச் சென்று அச்சிறுமியை அணைத்துத் தழுவி ஏன் அழுகின்றனை எனக் கேட்டனள். அவள் ''எங்க அம்மா பத்துக்காசு கொடுத்தாள். அது இந்தச் சாக்கடைக்குள்ளே விழுந்துவிட்டது'' என்று சொல்லி அழுதனள். அது கேட்ட பெருமகள் ஒரு இருபதுகாசை அவள் கையில் கொடுத்துக் கண்களைத் துடைத்துவிட்டு அழாதே வீட்டிற்குச் செல் எனக் கூறித் தமது வண்டியில் ஏறினள். அவ்வண்டி புறப்படுவதற்குள் அச் சிறுமி மிகவும் பேரோசையிட்டுத் தேம்பி யழத் தலைப்பட்டனள். பெருமாட்டி திடுக்கிட்டுத் தங்கள் வண்டியை நிறுத்தச் சொல்லினள். அவளது இரக்க குணமும் செயலும் அவளது மணாளனை பெருமகனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. சீறினான் அவன். ஆனால், அவனது தடை அக்குணவதியின் உள்ளத்தைக்

கட்டுப்படுத்த முடியவில்லை. வண்டியோட்டும் ஆளும் இரக்க மனமுள்ளவன். வண்டி நின்றது. இறங்கியோடி ''அம்மணி அடி நான் கொடுத்த காசையும் சாக்கடையில் நழுவ விட்டு விட்டனை யோ எனக் கேட்டனள். சிறுமி இல்லையில்லை இதோ வைச்சிருக்க, அம்மா கொடுத்த பத்து காசுங்கூட இருந்தா முப்பது காசா இருக்கு மேன்னுதாம்மா அழுதேன்'' என்று கூறித் தேம் பத் தலைப்பட்டாள். இரக்கமே உருவான ஏந்தி ழைக்கும் மனம் மாறிற்று. இவள் உள்ளநாள் வரை அழப்பிறந்தவள், இவள் அழுகையைத் தடுக்க ஆராலும் ஆகாது எனக் கூறி வண்டி யிலேறினள். கணவன் மனைவியைவெகுண்டு, ''உனது செயல் பலித்ததா'' எனக் கேட்டனன். செயல் பலிக்கவில்லையென்று விட்டுவிடுபவ ளானல், தனம் படைத்த தாய்வீடும் தாய் தந்தையரும் இருந்தும், உங்களோடும் இன்னும் ஒட்டிக் கொண்டிருப்பேனா? நான் மணந்து வந்தது முதல் உங்கள் சிரித்த முகத்தைக் காண எத்தனை பாடுபடுகின்றேன். எனது முயற்சி உங்களிடம் பலித்தாலல்லவோ அப்பாவை யிடம் பலிக்கப் போகிறது என்றனள். மணாளன் வெட்கித் தலை குனிந்தான். அப்பொழுதும் அவ னுக்குச் சிரிப்பு வரவில்லை. அதுதான் சிரிப்பே அறியாச் சென்மமாச்சுதே யென்ன செய்வது.

சிரிப்பிற்கு வித்து, போதுமென்ற மனம் :

''போதுமென்ற மனமே பொன்செய் மருந்து''. அதை விட்டு எவ்வளவு இருந்தா லும் போதாதென்ற பேராசையுண்டானல், அவ்வாசை கைகூடாவழி கோபமுண்டாகின் றது. அக்கோபமென்பது ஒரு கொலைகாரன். கொலைகாரன் எவனுமே பிறந்து வளர்ந்து மதர்த்து வம்பரோடு பழகிய பின்னர்தான் கொலைகாரனுவான். ஆனல், கோபமென்ற கொலையாள் அப்படிப்பட்டவனல்லன். அவன் தான் பிறக்கும்பொழுதே கொலை செய்கின்ற னன். அதுவும் ஒரு கொலையல்ல, இரு கொலை. மக்களின் உவகை நிறைந்த உள்ளத்தில் திடீ ரெனக் கோபம் பிறக்கின்றது. அது உடனே அங்கிருந்த உவகையைக் கொன்றொழிக்கின்றது. உவகை நிறைந்த உள்ளமுடையார் முகம் சிரித்த முகமாக இலங்கியிருக்குமல்லா? அந்த முகவொளியையும் கொன்றொழித்து எரிமுக மாக்கிவிடுகின்றது அக்கோபம். அதனல் கோப மென்ற கொலைஞன் பிறந்த அகத்தில் ஒரு கொலையையும், அவ்வகத்தின் முன்றிலில் (முகத் தில்) ஒரு கொலையையும் செய்து கொண்டே வெளிப்படுகின்றனன். ''நகையும் உவகையும் கொல்லும் சினத்தில் பகையும் உளவோபிற'' என்றனர் வள்ளுவர்.

இச்சீற்றம் என்னும் சின்னத்தனம், பெரு மனதுடையவர்களைப் பிடிப்பதில்லை. யார் பெருமனம் படைத்தவர்? பேராசையற்றவரே. இந்நன்னிலையிற் சிறந்ததொரு நல்லாள் இப் பொழுது நாம் சிந்தித்து வரும் சீதை. பேர ரசைவிட்டு அரசப் பெருங் கோயிலை விட்டு, பெருநகரை விட்டு பெருங்கானில் நடந்துவரும் சீதாதேவி, சிரித்த முகத்துடன் இலங்குகின்றன ளாம். சீதையின் பற்கள் ஆணி முத்தனைய ஒளி படைத்தனவாம். அம்முத்துக்களைக் கோவை செய்தது அதனையவாம் அப்பற்களின் வரிசை. முத்துக்களைக் கோவை செய்பவர் இரும்புக் கிண்ணத்திலா வைப்பர். பவளக் கிண்ணத்தில் அல்லவா வைப்பர். அப்பவளம் போன்றதாம் சீதையின் திருவாய். சீதாதேவியை இங்கு சீதையென்னமல், சானகி யென்னமல், ''சிரிப்புக்காரி'' என ஒரு புதுப் பெயரிட்ட ழைப்பவர்போல,

''முத்திருத்திய விருந்தனைய மொய்ந்நகையொடும்
சித்திரக்குனி சிலைக்குமரர் சென்றணுகினர்
அத்திரிப்பெயர் அருந்தவன் இருந்த அமைதி
பத்திரப் பழு மரப்பொழில் துவன்று பழுவம்''

என்கின்றனர் கம்பர். பேரகத்தில் பிறந்து ஒரு சீரகத்தில் புகுந்து சிறப்புற்று வாழும் பெண் களுக்கும் கொண்டவன் குணமில்லையானல் அந் நல்லியல் நாயகியின் குணமும் நலிவுற்று விடு கின்றது. ''முத்து இருத்திய மொய்ந்நகை''க்கு வாய்த்த கணவனும் ''சித்திரக்குனி சிலைக்கும ரன்''. ஒரு பெண்ணுக்கு உயிர் அவளது கணவனே. அக்கணவனுக்கு உயிர் எது என்ற வினவிற்கு, அவனது மனைவியேயென மறு மொழி கூறலாமா? கூறக்கூடாது. எனக்கு நீயேவுயிர், உனக்கு நானேவுயிர் என எதிரெதி ராகத் தொழிலற்றிருக்கும் மணமக்களில் இல் லாள் இல்லாளாக இருக்கமாட்டாள். ஏன்? இல் இருந்தாலல்லவோ அவள் ஆளப் போகின் ருள். இல்லாளெனப் பெயரெடுக்கப் போகின் றனள். ஆனல், அவளது கணவன் இல்லானு கவே ஆகிவிடுவன். ஆகையால் மனைவிக்கு உயிர் கணவன். கணவனுக்கு உயிர் அவனது தொழில். இராமன் ஒரு அரச மரபினன். அரச ரும் ஒரு உழவர் பரம்பரையாகத்தான். அவர் ''வில்லேருழவர்''. பெண்களுக்கு அணிகலம் மக்கள். ஆண்களுக்கு அணிகலம் வீரம். வீரத் திற்குத் துணை அவ்வவர்களின் படைக்கலங்கள். இராமன் பழம் பெருமையைப் பேசிக்கொண்டு சோம்பித்திரியும் ஒரு மகனல்லன். முயற்சி யால் முற்பட்ட வீரன். அண்ணலின் வீரத் தனம் தம்பியின் துணையினல் மேலும் சிறந் துளது. இச்சிறப்பிற்கு அடிப்படையாகிய 'சித் திரக் குனிசிலைக் குமரரும்' முத்திருத்திய விருந் தனைய மொய்நகையும், பெருவழி பிற்பட ஒரு தவச்சோலையைச் சார்ந்தனர். அத்தவச்சோலை அத்திரிமுனிவருக்குடையது. இவ்வீரர்கள் அங்குற்று அம்முனிவரனை வணங்கினர்கள்.

இராம இலக்குவரை வீரர்கள் எனவுங்கூறி, இவ்வீரர்கள் ஒரு மாதவனை வணங்குகின்றன ரெனவுங் கூறுதலால், அம்மாதவன் வீரத்தன முள்ளவன், அவ்வீரத்தனம் இராம இலக்குவர் வீரத்திலும் மேம்பட்ட வீரம் எனப் பொருள் படுகின்றதே, அப்படியாவெனக் கேட்கலாம். அப்படியேதான். அத்திரி முனிவன், ஒரு மூன்று பொல்லாத குறும்பர்களை வெட்டி வீழ்த்தியவ னும். அக்குறும்பர்களின் பெயர் காமம் வெகுளி மயக்கம் என்பனவாம். ''காமம் வெகுளி மயக் கம் இவை மூன்றின் நாமக் கெடக்கெடும் நோய்''. அப்படிப் பிறவிநோய் நீங்கப் பெருந்

தவம் புரிந்து வெற்றிகண்ட மேலவன் இவர்களை வரவேற்கின்றனன்.

''செல்வர்களே நீங்கள் இங்கு எளிதாக வந்து காட்சியளிக்க நேர்ந்தது கிடைத்தற்குரியதா''? தேவர்கள் அனைவரும் உலக மேலோர்கள் அனைவரும் ஒருங்கே வந்தபடியல்லவோ''? ''இங்கு யானும் எனது மனைவி அநுசூயையுமே உள்ளோம். எங்களில் உங்களை வரவேற்கும் பேற்றிற்குரிய தவம் யார் செய்த தவமோ'' எனக் கூறி உருகினனும் மாதவன்.

''தமரெலாம் வரவுகந்தது அனையதாம்'' அம்முனிவர் உள்ளத்து எழுந்த உவகை. அந்த அத்திரியின் வரவேற்பிற்கு மகிழ்ந்து அன்று அங்கு மனமகிழ்ந்து தங்கினர் மூவரும். அம் மாதவனின் மனைவியார், கற்பின் மிக்க அநுசூயையார். அவ்வம்மையார் சீதாதேவிக்கு நல்ல ஆடை, நல்ல அணிகலன்கள், சிறந்த நறுமணப் பூச்சுகள் எல்லாம் தந்து அழகுபடுத்தினர். தனது அரசகோல அணிகலன்களை வெறுத்து விடுத்து வெளிப்பட்ட அன்னை சானகிக்கு அநுசூயையார் அளித்தனவற்றை மறுக்க முடியவில்லை. ஏன்? அத்தவமகளின் கட்டளையை மறுக்க முடியாமையே. அம் மாதவத் தாய் தந்த அணிகள் மிக அதிகம் போலும். ''அவற்றைச் சுமந்து புறப்பட்டனள் சீதை'' யென்கின்றனர் கம்பர். ''அன்னமாதவனொடு அன்று அவண் உறைந்து அவன் அரும்-பன்னி கற்பின் அநுசூயை பணியால் அணிகலன் துன்னு தூசினொடு சாந்து இவை சுமந்தசனகன்-பொன்னொடு ஏகி உயர்தண்ட கவனம் புகுதலும்''.

பொழுதுபோக்கு :

பொழுதைக் குறித்து ஏக்கமடையும் மக்கள் இருவகையர். பொழுதுபோய் விட்டதே பொழுது போய்விடுகின்றதே என ஏங்கினர்கள் நமது பெரியவர்கள். ''சென்றது சென்றது வாழ்நாள் செறுத்துடன் வந்தது வந்ததுகூற்று'' இவர்கள் பொழுது போய்விடுவதைக் குறித்து எவ்வளவு துடிக்கின்றனர். மனிதனுக்கு வயது நூறு எனப் பெருமையாகப் பேசுகின்றனரே. எங்கே நூறு வயது? பகற்பொழுதுதானே இவன் வாழ்நாள். இரவெலாம் இறந்தே கிடக்கிறான் (உறங்குவதுபோலும் சாக்காடு). கணக்கிட்டால் வயது ஐம்பதுதானே. அந்த ஐம்பதிலும் கருத்தறியாத இளமை ஒரு பதினைந்து, செயல்பட முடியாத முதுமைக்கொரு பதினைந்து, முப்பது கழிந்தால் இருப்பு இருபதுதானே. அதற்கும் பிணியும் பசியும் பங்குபோட்டுக் கொள்ளுகின்றனவே எனப் பதறுகின்றனர் அரங்கன் அருளமுதத்தில் ஆழ்வார்கள்.

''வேதநூல் பிராயம்நூறும் மனிதர்தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப்போகும் நின்றதில்பதினை யாண்டும்
பேதைபால கனதாகும் பிணிபசிமூப்புத் துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே''

''ஆண்டாம் திங்களாம் நாளாம்'' என்னென்னவோ சொல்லுகின்றனர் உலக மக்கள். அவர்கள் நாள் நாளென எதைச் சொல்லுகின்றார்கள் எனத் தேடிப் பார்த்தேன். என்னைப் போலச் சிலருந் தேடினார்கள். நாங்கள் ஒருங்கு தேடி அதனைக் கண்டு பிடித்துவிட்டோம். அது நாளல்ல, வாள். வயலில் தாளறுக்கும் வாள். அரிவாள். ஏன்? அறுத்துக்கூட்டுந்தாள்களுக்கு அரிகள் என்று பெயர். அவ்வரித் தொழிலுக்காகும் வாள் ''அரிவாள்''. மரத்தையறுக்கும் வாள் ''எஃகினலமைந்த தாயினும் மரமறுப்பதனல் ''மரவாள்''. கனத்த மரமல்லாத கொடிகளையொத்த கொழுகொம்புகளையறுக்கும் வாள் ''கொடிவாள்'' (கொடுவாள்). அவைகளைப் போலவே மக்களின் உயிர் வாழ்க்கையை அறுக்கும் வாளுக்கு என்ன பெயரிடலாம். உயிரையறுக்கும் வாள் ''உயிர்வாள்'' அல்லவா? என்றால் உயிருடையவாளென்று பொருளல்ல. உயிரையறுக்கும் வாள் ''உயிர் ஈரும் வாள்'' அந்தக் கொடியவாளைத்தான் நாள் என்கின்றார்கள் இந்த ஏழை மக்கள் என்கின்றனர் வள்ளுவர்.

''நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்''

இப்படியெல்லாம் பொழுது போய்விட்டதே யெனப் புலம்புகின்றார்கள் நுண்ணறிவாளர்கள். பொழுது போகவில்லையாம். தெருவிற்குத் தெருக்கூட்டம் போட்டுப் போட்டு தங்களுக்குக் கிடைத்துவிட்ட பல்லாண்டுகளைக் கழித்தொழிக்கச் சில்லாண்டுகளாக நல்வழி கண்டு வருகின்றார்கள் நமது நம்பிகள்.

பொழுதென்னும் ஒன்று மகிழ்ச்சியிலிருக்கின்ற பொழுது விரைவாக ஓடி மறைந்து விடுகின்றது. அது துயர்பட்டு மக்கள் வருந்துங் காலத்தில் விரைவில் போகின்றதில்லை. உண்மைதான். இவற்றால் ஒரு மனமகிழ் மன்றம், பொழுதுபோக்கு மன்றம் என்னும் இருபெயரும் ஒருமன்றத்திற்கமையா. அவைகள் ஒரு பொருட்கிளவிகளல்ல. மனமகிழ்ச்சியிலிருக்கின்ற பொழுதுதான் பொழுது ஓடுகின்றதே. அதனையிவர்கள் ஏன் போக்குகின்றது? மகிழ்விற்குப் பொழுதை ஆக்க வேண்டும். துயருள்ள பொழுதுதான் பொழுது போகின்றதில்லை. அப்பொழுது பொழுதைப் போக்கித் தொலைக்க வழி தேட வேண்டும்.

இராமபிரானுக்கும் சீதாதேவிக்கும் தொண்டு செய்யத் துணைவனாக வந்த இலக்குவனுக்கும் இவ்விருகால அனுபவங்களும் வனத்திடை வந்தன.

இவர்கள் மூவரும் பத்து வருடங்கள் ஒரு சேர ஒரே இடத்தில் தங்கியிருந்தார்கள். அந்தப் பத்து ஆண்டுகளும் எப்படித்தான் சென்றனவெனக் கருத முடியாத விரைவில் கழிந்து விட்டன. மேலொரு நான்கு ஆண்டுகள் கழிய அவர்கள் படாத பாடுகள் பட்டனர். அப்பொழுதும் அந்நான்காண்டுகளை நடத்தித் தொலைப்பது எளிதாகவில்லை. இவர்களின் சிறப்பியல்புகளைச் செப்பவந்த கவிவலவர் காட்டிற் புகுந்து காண்பன கண்டு நாட்டிடைப் புகுதும்

நாள்வரையுள்ள செயல்களை ஏறத்தாழ எண்ணூயிரம் பாடல்களால் பாடி முடித்தனர். அவற்றுள் பத்துவருட கால அனுபவங்களைக் கூற ஒரு இரண்டே வரிகள்தான். மற்ற பாடல்களெல்லாம் நான்காண்டுகளின் நடத்தைகளை நவிலத்தான் அமைந்தன.

மக்களுக்கு இன்ப அனுபவத்தில் வரலாறு சுருங்குகின்றது. துன்ப அனுபவத்தில்தான் வரலாறு நீளுகின்றது. இராம இலக்குவர்கள் தண்டகவனத்தில் முனிபுங்கவர்களுடனும் சீதாதேவியார் அம்முனிபுங்கவர்களின் பத்தினிமாருடனும் இன்புற்றிருந்த காலத்தை ஒரு பத்து வருடகாலம் ஒரு குறைவுமின்றி இன்பமாக அங்கு இருந்தனர். ''ஐந்தும் ஐந்தும் அமைதியின் ஆண்டு அவண் மைந்தர் தீதிலர் வைகினர்'' எனக் கம்பரும் எளிதாக இன்பமாக இசைத்து முடித்துவிட்டனர். பத்தாண்டுகளின் வரலாற்றினைப் பாட, கம்பரும் எத்தனைப் பாடுபடுகின்றார். வரும் நான்காண்டு நடத்தைகளில் சீதாராம இலக்குவர்கள் அவர்களுக்காக மட்டில் அழுகின்றார்கள். தொழுகின்றார்கள். கம்பர் இவர்களுக்காகவும் ஈடுபடவேண்டும். இவர்களை எதிர்த்த சூர்ப்பநகை ஆதியருக்காகவும் ''ஓ அரனிருந்த மலையெடுத்த அண்ணாவோ அண்ணாவோ'' என அழுது தொலைக்க வேண்டும். ஆனால், அத் துன்ப அனுபவமே காவியத் தலைவர்களுக்கும் கவித் தலைவர்களுக்கும் புண்ணியப்பயனாக நின்று புகழை வளர்க்கின்றது. நீடித்தும் நிலவுகின்றது. என்ன செய்வது. இங்கே இராம இலக்குவர் ஏந்திழையார் மூவருமாக இன்பத்தில் பத்தாண்டுகளைப் பறக்க விட்டுவிட்டார்கள். இனி, துன்பத்தில் தோயுங்காலம் வருகின்றது. இன்பத்தில் அவர்களைப் பாடிப் பங்குகொண்ட பாவலர், துன்பத்தில் தூர நடப்பாரா? உடனிருந்துதான் உதவுவார். கம்பர் மாத்திரமா அவர்கள் உடனிருக்கப் போகிறார். நம்மையுந்தான் இழுப்பார். நாம்தான் அவரிடம் மயங்கிவிட்டோம். பனை தென்னை ஈந்தின் கள்ளுண்பவர்களுக்கு எச்சில் தெரிவதில்லை என அவர்களை நாம் ஏசுகின்றோம். கம்பரும் தம் வாய்வழி வழிந்து ஓயாது ஒழுகிய கவிக்கள்ளைத்தான் நந்தம் செவி வழியூற்றிச் சிந்தனை வலையிட்டுச் சிக்க வைத்துக் கொண்டார். அவர் நம்மை எங்கெங்கு இழுப்பாரோ இழுக்கட்டும். அவர் அழுதால் அழுவோம். தொழுதால் தொழுவோம். அவர் துன்புற்றால் துன்புறுவோம், இன்புற்றால் இன்புறுவோம். என்ன செய்வது? எப்படியோ சிக்கிவிட்டோம்!

—தொடரும்

திருவாய்மொழி

அடியேன் சிறியஞானத்தன்; அறிதல் ஆர்க்கும் அரியானைக்,
கடிசேர் தண்அம் துழாய்க் கண்ணி யுனைந்தான்தன்னைக், கண்ணனை,
செடிஆர் ஆக்கை அடியாரைச் சேர்தல்தீர்க்கும் திருமாலை,
அடியேன் காண்பான் அலற்றுவன்; இதனின் மிக்குஓர் அயர்வுஉண்டோ?

நாவினுள் நின்று மலரும் ஞானக் கலைகளுக்கு எல்லாம்
ஆவியும் ஆக்கையும் தானே; அழிப்போடு அளிப்புஅவன் தானே;
பூஇயல் நாற்றடந் தோளன்; பொருபடை ஆழிசங்கு ஏந்தும்
காவிநன் மேனிக் கமலக் கண்ணன்;என் கண்ணின் உளானே!

எனது ஆவியுள் கலந்த பெருநல் உதவிக் கைம்மாறு
எனது ஆவி தந்தொழிந்தேன்; இனிமீள்வது என்பது உண்டே?
எனது ஆவி ஆவியும்நீ, பொழில் ஏழும் உண்ட எந்தாய்!
எனது ஆவி யார்? யான் ஆர்? தந்தநீ கொண்டு ஆக்கினையே!

—நம்மாழ்வார்

கவியரங்கத் தலைமைக் கவிதை

[திரு ந. ரா. முருகவேள், M.A., M.O.L.]

அருமைமிகு குருஞான சம்பந்தர்
குருபூசை அருள்வி ழாவில்,
பெருமைமிகு கவியரங்கம் அமைத்ததனில்
தலைமைநிலை பிறங்க வைத்த,
தருமையா தீனஅருட் சண்முகதே
சிகர்தாட்கும், அவைச்சான் றோர்க்கும்,
உண்மைமிகும் நண்பர்உயர் கவிஞர்க்கும்,
என்வணக்கம் உரிய தாகும். (1)

குருமகா சந்நி தானம்
குறித்தஇக் கவிய ரங்கம்,
திருமிகும் இறைவன் தன்னைச்
சேர்ந்திடற் குரிய நல்ல
பெருநெறி பற்றி ஆயும்;
கவிதைகள் இயற்றலும் பேணும்
ஒருநெறி இறைவற் சேர்தற்கு;
என்றுநாம் உரைத்திடல் கூடும்! (2)

போதமிகும் நம்நால்வர் பெருமக்கள் முதற்புகலும்
தீதில்பெருஞ் சான்றோர்கள் பற்பலரும் சிறந்துயர்ந்த
காதலினால் இறைவனைத்தம் கவிதைகளால் போற்றி
யுய்ந்தார்
ஆதலினால் கவிதையின்சீர் அளவிட்டார் உரைக்க
வல்லார்? (3)

ஆதலின் இங்கென் முன்னுரை யாயும்,
அவையடக் கியல்தா னாயும்,
ஓதுவன் கவிதை இயல்புகள் பற்றி
ஒருசில; "உயரிய கவிதை
தீதற இயற்றும் இயற்கைநற் றிறன்தான்
செறிந்திலார் செய்யுள்கள் செய்தல்,
யாதுமோர் பயனின்று" எனஎர்பர்ட் ஸ்பென்ஸர்
இயம்பியது இனியநன் மொழியாம்.* (4)

"No one should ever write verses,
if he can help it"

—HERBERT SPENCER.

நல்ல கவிதை என்பதுதான்,
தூய ஞானச் சான்றோர்பால்,
எல்லை யிலாநுண் நூற்புலமை,
இனிய உணர்ச்சிப் பெருக்கதனால்,
சொல்லிற் பொருளிற் சிறந்தோங்கி,
நினைக்கும் தோறும் சுவைபெருகி
வல்ல இறைவன் அருட்கொடையாய்,
வளஞ்சி றப்ப மலர்ந்துநிற்கும். (5)

நல்லிசைக் கவிஞர், திறம்தெரிந்து ஆய்ந்து,
நயம்நனி பொருந்திட ஆளும்
சொல்லில், நுண் பொருள்கள் துதைந்துநன்
றொளிர்ந்து,
சுவைமிகப் பெருகிநின் றோங்கி,
எல்லையின் றாக எழில்மிக விரிந்தே
இனிதுற விளங்கிடும்; அனைய
பல்பொருள் பொதுளப் பாடுமா வல்ல
பாவலர் பெருமையார் பகர்வார்? (6)

"The proof of the purest poetry is that its meaning is inexhaustible. About the best poetry, and not only the best, there floats an atmosphere of infinite suggestion. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something boundless which is only focussed in it."

—PROF. A. C. BRADLEY,
Oxford Lectures on Poetry

எவர்ஒருவர் எளியநல்ல இனியஎழிற் சொற்களினால்
சுவைபெருகத் தெளிவுமிகத் துயர்போக்கி மகிழ்
வுறுத்தி
நவைஒழிக்கும் பாடல்கள் நலம்பொதுளப்
பாடுவரோ,
அவர்கவிஞர்; கவிஞருளே அரசர்எனத் திகழ்ந்
தொளிர்வர்.* (7)

"They shall be accounted poet-kings,
Who simplytell the most heart-easing things"

—JOHN KEATS

ஓங்கும் அறிவுநலம், நல்ல உணர்ச்சிநலம்,
பாங்குமிகு கற்பனைப் பண்புநலம்,—தேங்கமழும்
செய்ய கலைநலமும், சீர்த்தெய் விகநலமும்
எய்தியதே இன்கவிதை ஆம்! (8)

"First there is the intellectual element . . . Secondly there is the emotional element . . .Thirdly there is the element of imagination . . . We have a fourth element in literature —the technical element, or the element of composition and style.

—W. H. HUDSON,
An Introduction to the Study of Literature

தெய்வநலம் ஐந்தூற்றாற் சிறந்தெழூஉம்;
கருத்துணர்ந்து தெளிந்து தேர்தல்;
தொய்வில்பெரும் உணர்வாற்றல்; சூழ்கருத்திற்கு
உருவொடுசொல் தோற்று வித்தல்;

* தருமபுர ஆதீனத்தின் குருபூசை விழாவில், ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம், "இறைவனை அடையும் நெறிகள்" என்னும் தலைப்பில் நிகழ்ந்த கவியரங்கத்திற்குத் தலைமை ஏற்றுப் பாடிய "தலைமைக் கவிதை" இங்கு வெளியிடப் பெறுகின்றது. (3—6—1977). —ஆசிரியர்.

செய்யநற்சொல் கலையினொடு சிறந்ததனி
இயலமைப்பு; சேர்த்தி வற்றை
மெய்யிணைத்துப் பிணைத்தல் ஐந்தும்; கவிதையினைத்
தெய்வநலம் விளங்கச் செய்யும்! (9)

"The sublime rises from five fountains. The first and most important is a firm grasp of ideas. The second is vigorous and inspired emotion. These two constituents of poetic excellence are for the most part inborn. The other two come from art. The third is the formation of figures, of which there are two kinds those of ideas and those of words. Next is notable language, which has as its parts the choice of words and figurative and individual diction. The fifth, which serves to hold all the other in unison is fitting and dignified arrangement."

—PROF. LONGINUS,
On the Sublime

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து
அகங்களித் துவப்பவர் தமக்கும்,
மருவும்இவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,
விரிவுறும் தூய மெய்யுணர்வு வானில்
விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம் செறிந்தது யவர்க்கும்
சிறந்தநற் கவிதையே இன்பாம்! (10)

"To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a soul soaring high into ethereal regions of religion and philosophy, to a spirit seeking serene rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective as the study of a fine piece of poetry."

—MARAIMALAI ADIGAL

இறைவனை அடைதற் கெனைப்பல நெறிகள்
இயம்புவர் அவரவர் தாமும்;
திறவிய கன்மம் ஞானம்நற் பக்தி
என்றிவை செப்புவர் சில்லோர்;
முறையினில் நல்ல சிரவணம் மனனம்
நிதித்தியா சனம்என்றும் மொழிவர்;
குறைவிலா இயமம் நியமமாம் எட்டும்
கூறுவர் ஒருசிலர் மற்றும்! (11)

சிரவணம், இனிய கீர்த்தனம், ஸ்மரணம்,
சீர்ப்பாத சேவனம், அன்பாற்
பரவுறும் அர்ச்சை, வந்தனம், தாஸ்யம்,
சக்யம், ஆத்ம நிவேதனம் என்றே,
விரவும்ஒன் பதனை இறைவனை அடையும்
நெறிகளாய் விளம்புவர்; இவ்வாறு
உரவிய அறிஞர் இறைவனை அடையும்
நெறிகள்என் றுரைப்பவை பலவாம்! (12)

தூயநற் சாந்தம், துகளிலாத் தாஸ்யம்,
தொடர்புயர் சக்யம், வாத்சல்யம்,
நேயமார்ந் தொளிரும் மாதுர்யம் ஐந்தும்,
இறைவனை அடையும்நல் நெறிகள்
ஆயவாம் என்றே வல்லபா சார்யர்,
அருட்பெரு நாரத முனிவர்,
ஏயசாண் டில்ய முனிவர்தாம் முதலோர்
இனிதெடுத் தியம்பினர் நன்றே. (13)

இவ்வகை பலரும் கூறும்
எனைப்பல நெறிகள் எல்லாம்
செவ்விதின் அடக்கிச் சைவ
சித்தாந்தம், சரியை க்ரியை
ஒவ்விடும் யோகம் ஞானம்
எனும்நான்காய், ஒட்பம் நுட்பம்
கவ்விடக் கூறும் மாட்சி
கணித்திடற் கரிய தாகும்! (14)

சரியை கிரியை எனும்நான்கும்,
தகைமை ஓங்கும் அடிமைநெறி,
உரிய நல்ல மகன்மைநெறி,
உயர்ந்த இனிய நட்புநெறி,
அரிய பெரிய காதல்நெறி
என்றே, அறிஞர் பெருமக்கள்
பெரிதும் போற்றி வழங்கநிற்கும்;
அவற்றின் பெருமை அளப்பரிதால்! (15)

இந்த நான்கு வகைநெறியும்,
எல்லா மதமும் இயைந்துஏற்கும்
அந்தச் சிறப்பு வாய்ந்ததென,
அருமைச் சான்றோர் மறைமலையார்,
முந்திப் பொருந்தும் பலசிறந்த
மேற்கோள் காட்டி மொழிந்திட்டார்;
நந்தம் நால்வர் பெருமக்கள்
இவற்றை நடந்து காட்டினரே! (16)

அடிமைநெறி மகன்மைநெறி முதலாம் நான்கும்
ஆண்டவற்கும் பக்தர்கட்கும் இடைய மைந்த
படிமைநெறி என்றுமுன்னோர் பகர்ந்து சென்றார்;
பண்புயர்ந்த திருவருட்பாப் பாடிப் போந்த
வடலூர்நல் இராமலிங்க அடிக ளார்தாம்,
மற்றிவற்றை உயிர்களின்பாற் பக்தர் கொள்ளும்
விடலரிய உறவுரிமை என்று கொண்டு,
வியன்புதுமைப் பொருள்விளக்கும் விதம்
வியப்பே! (17)

அன்புமிகு நண்பர்திரு. சிங்கார வேலன்,
அரியசெல்வ கணபதி, பாலருவாயன், மற்றும்
பண்புமிகு பசுபதி, நற் கலியபெரு மாளாம்
பாவலர், இக் கவியரங்கிற் பங்கு கொண்டு,
நன்குமிகத் தம்கவிதை நலம்சிறக்கப் பாடி
நம்மைஎலாம் மகிழ்விக்க நயந்துமிகப்
போந்தார்!
இன்பமிகும் அவர்கவிதை யாம்அனைவோம் கேட்
போம்!
இனிதவற்றைப் பாராட்டிப் போற்றிமகிழ்
வோமே! (18)

(வாழ்த்து)

வாழி திருத்தருமை ஆதீனம், மற்றதன்சீர்!
வாழிநம் சண்முக தேசிகர்! - வாழியரோ
செந்தமிழும், நற்சைவ சித்தாந்தச் செந்நெறியும்,
சந்ததமும் ஓங்கித் தழைத்து.

சென்னை-600 008.
158629



பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்குத்
தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் வருகை தந்தபொழுது,
நமது ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S.. அவர்கள் மாலையணிவித்து வரவேற்றல்.

பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் துணை ஆணையாளர்/நிர்வாக அதிகாரி
திரு. சி. எஸ். தீனதயாளு, B. Sc., B. L., அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களுக்கு,
அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமியின் திருவுருவப் படத்தை வழங்கிச் சிறப்பித்தல்.

மதுரை அருள்மிகு மீனுட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குத் தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வ
அவர்கள் வருகை தந்தபொழுது, நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A
அவர்கள் வரவேற்புரை வாசித்தளித்தல். (12—5—77)

மேதகு ஆளுநர் அவர்கள் மதுரை மீனுட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலில்
சுவாமி தரிசனம் செய்து திருநீற்றுப் பிரசாதம் பெறுதல். (12—5—77)

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.